கல்கி

12.6.94 KALKI ரூ. 3.00



வீடியோ கேம்ஸ்:
திறமையா? சூதாட்டமா?

Suresh




இந்திரா பார்த்தசாரதி

எழுதும்

வேதபுரத்து வியாபாரிகள்

பாரதியின் கனவு
நினைவாகி வருகின்றது - எதிர் வினையாக!
இந்த அவல அரசியல் சூழ்நிலையை அங்கதச்
சுவையுடன் படம் பிடிக்கும் புதிய தொடர்...

ஜூலை 3 கல்கி இதழில் ஆரம்பம்!



• சூதாட்ட வீடியோ...

வீடியோ கேம்ஸ்: திறமையா?

கோல்டு மைன், லக்கி ஃபீவர், ஸ்கில் ரன், சில்வர் லைன், கோல்டு டிஸ்க், வின்னிங் ஸ்பிரிட், எல்லோ கோல்டு...!

இவையெல்லாம் ஏதோ ரேஸ் குதிரைகளின் பெயர்கள் என்று யாரும் நினைத்து விட வேண்டாம். இன்று தமிழகத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் நடந்து கொண்டிருக்கிற வீடியோ கேம்ஸ்களின் பெயர்கள் தான் இவை.

இந்த வீடியோ விளையாட்டுக்களில் இரண்டு வகை உண்டு. ஒன்று, வீடுகளில் அல்லது பொழுதுபோக்கு இடங்களில் (அட்டைப் படம்) டெலிவிஷன் பெட்டியுடன் இணைப்புக் கொடுத்து விளையாடுவது. நம்முடைய திறமைக்குச் சவாலாக அமைவது. மற்றொன்று தெருவுக்குத் தெரு கடைகளில் வைத்துச் சூதாட்டமாய் விளையாடப்படுவது. என்னதான் எலெக்ட்ரானிக் போர்வை போர்த்திக் கொண்டு வந்தாலும் இது ஏறத்தாழ 'வை ராஜா வை!' சமாசாரம் தான்!

ஆனால், வீடியோ கேம்ஸ் நடத்திக் கொண்டிருப்பவர்கள், "இவை மக்களின் திறமைகளை வெளிக்காட்டும் விளையாட்டுக்கள்தான்!" என்று அடித்துச் சொல்லுகிறார்கள்.

அண்ணாசாலையிலுள்ள ஒரு பிரபல ஷாப்பிங் காம்ப்ளெக்ஸில் மூன்று வீடியோ கேம்ஸ் கடைகள் அருகருகே இருக்கின்றன. அங்கே வந்திருந்தவர்களுடன் பேசிப் பார்த்தோம். அருகிலுள்ள சினிமா தியேட்டர்களுக்கு வருபவர்கள் படம் ஆரம்பிப்பதற்கு முன்னாலுள்ள நேரத்தை இந்த வீடியோ கேம்ஸ் கடைகளில் வந்து கழிக்கிறார்கள். ஓர் இளைஞர், "பிரண்ட்ஸோங்க கூட ஜாலியா வருவேன். ஆளுக்குப் பத்து ரூபாய்க்கு ஆடுவோம்!" என்றார்.

இதில் எத்தனை முறை அவர்கள் கொடுத்த பணத்தை விட அதிகம் பெற்றுக் கொண்டு திரும்பியிருக்கிறார்கள்? "ஒருமுறை கூட நாங்கள் ஜெயித்ததே இல்லை. அது பற்றி நாங்கள் கவலைப்படவும் இல்லை. சும்மா ஜாலிக்குத்தானே வந்து விளையாடுறோம்!" என்கிறார்கள் அவர்கள்.

ஆயினும் இது வெறும் பொழுதுபோக்கு மட்டுமல்ல; மூன்று சீட்டு ஆட்டம் மாதிரி பலவீனமான இளைஞர்களை ஆசைகாட்டிச் சுண்டியிழுக்கும் ஒரு விஷயம். பத்து ரூபாய் கொடுத்து டோக்கன்கள் வாங்கிக் கொண்டு விளையாடுகிறார்கள். அது தீரும் வரை விளையாடுகிறார்கள். தப்பித் தவறி ஜெயிக்கும் போதும் உடனடியாகப் பணம் தரப்படுவதில்லை. மீண்டும் டோக்கன்கள்தான் தரப்படுகின்றன என்ப

தால், அவற்றைக் கொடுத்துப் பணம் வாங்கிக் கொண்டு திரும்பும் எண்ணம் வருவதில்லை. மீண்டும் அந்த டோக்கன்களுக்கு கேம்ஸ்தான் ஆடுகிறார்கள். எல்லாவற்றையும் இழந்து விட்டு வெறுங்கையோடு வீடு திரும்புகிறார்கள்.

உண்மையிலேயே இந்த வீடியோ கேம்ஸ் கடைகள் கௌரவமானதாக இல்லை என்பதால்தானோ என்னவோ, எந்தக் கடைக்குமே பெயர்ப் பலகை கூட வைக்கப்படவில்லை. எந்தக் கடையில் போய் அதன் உரிமையாளர் பற்றி விசாரித்தாலும், "ஓனர் இப்பத்தான் சார் வெளியில போனார். எதுவானாலும் ஓனர் கைலயே கேட்டுக்க சார்!" என்று அவற்றின் உரிமையாளர்களே பதில் சொல்கிறார்கள்.

தமிழக அரசும் இதை உணர்ந்துதான் வீடியோ கேம்ஸ் கடைகளை மூட உத்தரவிட்டது. உடனடியாகக் கடைக்காரர்கள் கோர்ட்டுக்குப் போனார்கள். கோர்ட்டில் திறமைக்கான வீடியோ

சூதாட்டமா?


• —கேம்ஸ்

விளையாட்டா அல்லது வெறும் சூதாட்டம்தானா? என்ற கேள்வி எழுந்தது.

உடனடியாக வீடியோ கேம்ஸ் மெஷின்கள் கோர்ட்டுக்கு வரவழைக்கப்பட்டன. நீதிபதி முன்னிலையில் ஒவ்வொரு மெஷினும் விளையாடிப் பரிசோதிக்கப்பட்டது. "பரிசோதனைக்குள்ளான அனைத்து மெஷின்களிலும் திறமைக்கு வழியில்லை; வெறும் சூதாட்டம்தான்!" என்று அழுத்தந் திருத்தமாய்ச் சென்னை உயர்நீதி மன்றம் தீர்ப்பும் கூறியது.

பெங்களூரிலும் பம்பாயிலும் தயாரிக்கப்படும் இந்தச் சாதனங்களில் பல வகைகள் இருக்கின்றன. எனவே, "முற்றிலும் திறமை அடிப்படையிலான வீடியோ கேம்ஸ்களுக்கு மட்டுமே முழுமையான பரிசோதனை செய்த பிறகு அரசு லைசென்ஸ் வழங்கலாம். விண்ணப்பித்த முப்பது நாட்களுக்குள் இந்தப் பரிசோதனைகளைச் செய்து பார்த்து விட்டு அரசு அனுமதி வழங்கவோ அல்லது மறுக்கவோ செய்யலாம்!" என்று நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதன்படி, வீடியோ கேம்ஸ் கடைகளுக்கான விண்ணப்பங்களைப் பரிசீலித்து நடவடிக்கை எடுப்பதற்கென்று சென்னை நகர இணை போலீஸ் கமிஷனர் சவானி ஐ.பி.எஸ். தலைமையில் ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது. அந்தக் கமிட்டி விண்ணப்பதாரர்களின் மெஷின்களைப் பரிசோதித்துப் பார்த்ததில் அவை அனைத்துமே திறமைக்கு வழியில்லாத சூதாட்ட மெஷின்கள்தான் என்று தெரியவந்ததால் யாருக்குமே அனுமதி தரப்படவில்லை. "அவை சூதாட்ட மெஷின்கள் மட்டுமல்ல; அவற்றில் ஏகப்பட்ட தில்லுமுல்லுகளும் இருக்கின்றன!" என்கிறார் சவானி.



இந்த நிலையில் வீடியோ கேம்ஸ் கள ஜோராக நடந்து கொண்டிருப்பது எப்படி? "நாங்கள் சிட்டி கோர்ட்டில் இடைக்காலத் தடை வாங்கி நடத்திக் கொண்டிருக்கிறோம்!'' என்கிறார்கள் அவர்கள்.

"வீடியோ கேம்ஸ் பற்றிப் பல்வேறு கோர்ட்டுகளிலும் நடந்து கொண்டிருந்த வழக்குகளையெல்லாம் ஹைகோர்ட்டுக்கு மாற்றி, ஒட்டுமொத்தமாய்ப் பரிசீலனை செய்துதான் ஹைகோர்ட் தீர்ப்புக் கூறியது. ஆனால், ஹைகோர்ட் வழங்கிய தீர்ப்பையே கீழ்கோர்ட்டில் மறைத்து விட்டு, வீடியோ கேம்ஸுக்கு அரசு லைசென்ஸ் வழங்க மறுத்தது தவறு என்று கூறி, இடைக்காலத் தடையுத்தரவு வாங்கியிருக்கிறார்கள், கடைக்காரர்கள். இது அரசுக்கும் ஆச்சரியமாகத்தான் இருக்கிறது!'' என்கிறார் சவானி.

"இது சம்பந்தமாக போலீஸார் ஏதும் செய்ய முடியாதா?''


"கீழ்க்கோர்ட்டின் இடைக்காலத் தடை பற்றியோ, அரசுத் தரப்பின் பதில் கேட்டோ இன்னமும் கோர்ட்டிலிருந்து எங்களுக்கு எந்தவிதமான தகவலும் வந்து சேரவில்லை. வீடியோ கேம்ஸ் நடத்துபவர்களோ, கீழ்க்கோர்ட்டில் வழங்கப்பட்டிருக்கும் இடைக்காலத் தடையுத்தரவின் பிரதியைக் காட்டி எங்களால் நடவடிக்கை எடுக்க முடியாமல் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆயினும் ஹைகோர்ட் உத்தரவை மீறி கீழ்க்கோர்ட் இடைக்காலத் தடைவிதிக்க முடியாது என்பதால், வழக்கு மீண்டும் விசாரணைக்கு வரும் போது, வீடியோ கேம்ஸ் என்பது சுத்தமான சூதாட்டம்தான் என்பது மீண்டும் நிரூபிக்கப்படும்!'' என்கிறார் சவானி.

- எஸ். சந்திரமௌலி

அட்டையில் திறமையைச் சோதிக்கும் வீடியோ கேம்ஸ் விளையாடுபவர் : **வி. ஸ்ரீனிவாசன்**

அட்டை வண்ணப்படம் : **யோகா**

வாசகர் யோசனை : இ. ராமதாஸ்



மல்யுத்தம்: நிஜமா? செட்-அப்பா?

●● ப்ரீஸ் ஹோட்டலில் இரவு ஒன்பது மணிக்கு, சுமார் முந்நூறு பேர் கூடியிருந்தனர். எதற்கு? சாப்பிடத்தான். ஆனால் மற்ற நாட்களின் டின்னருக்கும், அன்றைய தினத்துக்கும் ஒரு பெரிய வித்தியாசம்! அன்றைய டின்னரின் போது, உலகப் புகழ்பெற்ற அமெரிக்க மல்யுத்தர்கள் அவர்களுடன் கைகுலுக்கினார்கள்; அதிருஷ்டசாலிகளுடன் 'தமாஷ் சண்டை' போட்டார்கள்; போட்டோ எடுத்துக் கொண்டார்கள்.

●● பிரிட்டிஷ் புல்டாக், ரேஸர் என்று விசித்திரமான பெயர்கள் கொண்ட மல்யுத்த வீரர்கள் தவிர நாலு வீராங்கனைகள் வேறு! மொத்தம் பதினாறு பேர். இந்தோ அமெரிக்க மல்யுத்தக் கழக உபயத்தில் சென்னைக்கு வந்து இரண்டு நாட்கள் யுத்தம் நடத்தினார்கள்.

●● ஸ்டார் டீவியில் WWF (உலக மல்யுத்தக் கழகம்) மல்யுத்த நிகழ்ச்சிகள் பார்த்துப் பார்த்து, மயங்கிய நம் ஊர்க்காரர்களுக்கு - குறிப்பாக சிறுசுகளுக்கு, ஏக குஷி! இரண்டு நாள் நிகழ்ச்சிக்கும் வீரர்களின் ஆளுயர போஸ்டர்கள், மினி அட்டை கட் அவுட்கள் சகிதம் வந்து ஒரே மஜாதான்.

●● டீவியில் பார்க்கிற போது அனைவருக்கும் ஏற்படும் சந்தேகம் : அவர்கள் நிஜமாகவே சண்டை போடுகிறார்களா? இல்லை செட் அப்பா? யுத்தத்துக்கு முன்பு நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில் இந்தக் கேள்வியை ஒரு நிருபர் கேட்ட போது, பாம் பாம் பகாலோ என்ற வீரர், "வரியா! மோதிப் பார்க்கலாமா? அப்புறம் உனக்கே புரியும்" என்று தன் பலத்தைப் பறைசாற்றினாரே யொழிய, சண்டை நிஜமா? இல்லையா என்று சொல்லவில்லை.

●● ஜேம்ஸ் பாண்ட் படங்களில் தோன்றும் நங்கை போன்ற தோற்றம் கொண்ட தண்டர் கிராக்கிடம், "நீங்கள் எப்படி இந்தத் துறைக்கு வந்தீர்கள்?" என்ற போது, "படிப்பை முடித்து விட்டு, நாடக நடிகையாக விரும்பினேன். பெற்றோர் அனுமதிக்கவில்லை. வேறு வேலைக்குப் போனேன். திரில் இல்லை. எங்கள் பேட்டையில் மல்யுத்தத்தில் பெண்களுக்குப் பயிற்சி தரப் போவதாய்ச் சொன்ன போது, நானும் போனேன். கடந்த மூன்று வருடங்களாய் மல்யுத்தப் போட்டிகளில் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறேன்" என்று கூறும் இவருக்குப் பிடித்தது சாக்லேட் சாக்லேட், மேலும் சாக்லேட்.

●● விநோதமான கிராப் வைத்துக் கொண்டிருக்கும் பாம் பாம் பகாலோவின் எடை சுமார் 225 கிலோ. மெரீனா பீச்சில் ஒரு காண்டஸா காரைத் தூக்கிக் காட்டி சாகசம் செய்தார் இவர்!

●● "நான் மல்யுத்தம் செய்யும் போது அடிபட்டு, ஆறு வருடம் ஆஸ்பத்திரியில் இருந்தேன்" என்ற அலெண்டிராவிடம், "அப்புறமும் ஏன் சண்டை போட்டுக் கொண்டிருக்கிறீர்கள்?" என்றால், "மல்யுத்தம் என்னை அப்படி ஈர்க்கிறதே! என்ன செய்ய?" என்கிறார். டோய்னிக் என்பவரோ "பணம்! இதிலிருக்கும் பணம்தான் என்னை ஈர்க்கிறது" என்கிறார்.

●● மல்யுத்தப் போட்டிக்கு நடுவராய் இருந்த முன்னாள் இந்திய மல்யுத்த வீரர் ஆசாத் (வயது எழுபது என்றால் நம்ப முடியவில்லை) ரொம்பவே திண்டாடிப் போனார். "இதெல்லாம் 'செட் அப்' சண்டைகள்தானே?" என்று கேட்ட போது, "விதிமுறைகளையெல்லாம் பார்க்காமல், ஃப்ரீ ஸ்டைலில் சண்டை போடுகிறார்கள்" என்று நழுவும் விதமாய்ப் பதில் சொன்னார்!

●● அரங்கத்தை விட்டு வெளியே வந்தபோது, இருவருக்கிடையே வெகு சீரியஸான வாக்குவாதம்.

"மச்சி! இவங்க போட்ட சண்டை வெறும் செட் அப்!"

"இல்லை! நெஜம்தான்!"

"செட் அப்தான்!"

"நிஜம்தான்!"

டீவியில் வரும் Coffee - Tofee வாக்குவாதம் போல இதற்கும் முடிவே கிடையாதோ?

- மௌஷ்மி


(அடுத்த பக்கம் நமது காமெண்ட்ஸ்!
- ஆர்.)



‘ஆக்ஷன்’ அவுங்க; ‘காமெண்ட்ஸ்’ நாங்க!



• நீதான் கலைஞராம், நான்தான் வை. கோ.வாம், கபடி ஆடலாம், வரியா?



• உங்க ஊரு இடைத் தேர்தல்ல காங்கிரஸை கவுத்துட்டாங்களாமே!

காமெண்ட்ஸ் : கிச்சா


படங்கள் - நன்றி: நியூஸ் டுடே



• உங்க சு. சுவாமிக்கு இந்த மேக்கப் ஜோக்கா இருக்குங்க!



• அம்மணி யாரு? ஷர்மிலிக்கு ஆல்டர்னேட்டா?



• சபாநாயகர் கூப்டிருக்காருங்க. எம். எல். ஏக்களுக்கு ஸ்பெஷல் கோச்சிங் தானுமாம்.




• கூரியர்கள் : புறப்படுமுன் விலாசங்கள் சரிபார்க்கப் படுகின்றன.

நேற்று: குப்பை பொறுக்கிகள்; இன்று: கூரியர்கள்!

ஒரு பழங்கால வீட்டுக் காம்பவுண்டுக் கதவைத் திறந்து கொண்டு உற்சாக முகங்களுடன் பதினேழு பதினெட்டுப் பையன்கள் வெளிப்படுகிறார்கள். சிலர் 'பையன்கள்' சிலர் 'இளைஞர்கள்'. எல்லார் கைகளிலும் காகிதக் கட்டுகள், கவர்கள், பார்சல்கள், உள்நாட்டு வெளிநாட்டுப் பத்திரிகைகள் மற்றும் கம்பெனிகளின் முக்கியமான டாகுமெண்டுகள்....

அத்தனை பேரும் ஆளுக்கொரு சைக்கிளை எடுத்துக் கொண்டு திசைக்கொருவராகப் பறக்கிறார்கள்.

பெங்களூரிலுள்ள முதல்தர கூரியர் சர்வீஸ்களில் ஒன்றான எஸ்.கே.ஐ. (SKI) சர்வீஸின் வாசலில் அன்றாடம் நடைபெறும் இந் நிகழ்ச்சியில் விசேஷம் என்ன இருக்கிறது என்கிறீர்களா...?

இந்தப் பையன்கள் ஹைஸ்கூலுக்கோ கல்லூரிக்கோ போகிறவர்களைப் போலத் தெரிந்தாலும் இவர்கள் அத்தனை பேரின் பின்னணியும் ரொம்பவும் பரிதாபமானது. சிலர் ரோடுகளில் பிச்சை எடுத்துக் கொண்டிருந்தவர்கள்; சிலர் கோணிப்பைகளைத் தோளில் சுமந்து கொண்டு ஒவ்வொரு குப்பைத் தொட்டிக்கும் போய் குப்பை பொறுக்கிக் கொண்டிருந்தவர்கள்; அம்மா, அப்பா யாரென்றே தெரியாமல் அநாதையாகச் சுற்றிக் கொண்டிருந்தவர்கள்...

இப்படிப்பட்டவர்களைத் தேடி திரட்டிக் கொண்டு வந்து, இவர்களுக்குப் படிப்பு சொல்லிக் கொடுத்து, சுத்தம் சொல்லிக் கொடுத்து, வாழ்க்கை நெறிகளைக் கற்றுக் கொடுத்து, உழைப்பின் அவசியம் சொல்லிக் கொடுத்து, வாழ்க்கையின் நம்பிக்கைக் கீற்றை இவர்களுக்குள் விதைத்துப் புதிய மனிதர்களாய் இந்த சமுதாயத்துக்கு அறிமுகம் செய்து கொண்டிருக்கிறார் ஒரு மனிதர். ஸாரி - இளைஞர். பெயர் : டோனி நாதன்.

இத்தனைக்கும் டோனிநாதனின் அம்மாவும் அப்பாவும் இருப்பது அமெரிக்காவில். சகோதரியும் நல்ல வேலையொன்றைப் பார்த்துக் கொண்டு அமெரிக்காவில் செட்டிலாகிவிட்டார். இவருக்கும் அங்கே உத்தியோகம் நிச்சயம் செய்து "இந்தியாவில் எதற்கு இருக்கிறாய் ஸ்டேட்ஸுக்கு வந்துவிடு" என்று கடிதத்திற்குமேல் கடிதமாக எழுதிக்கொண்டிருக்கின்றனர். "ஆனால் இந்தப் பிள்ளைகளை விட்டுவிட்டு என்னால் போக முடியாது" என்கிறார் டோனி நாதன்.

"இத்தனை இளம் வயதில் எப்படி இவ்வளவு சேவை மனப்பான்மை?"

"சின்ன வயதிலிருந்தே வயிற்றுக்குச்

• டோனிநாதன்



சோறில்லாமல் பிச்சை எடுக்கும் சிறுவர்களைப் பார்த்தால் எனக்குத் துக்கமாக இருக்கும். இந்தச் சிறுவர்களுக்கு உதவ வேண்டும்; ஏதாவது ஒரு விதத்தில் அனுசரணையாக இருக்க வேண்டும் என்று நினைத்துக் கொள்வேன். என்னால் முடிந்த உதவிகளை அவ்வப்போது செய்வேன். கல்லூரி முடித்து வெளிவந்ததும் அநாதைப் பையன்களை மட்டுமே வைத்துக் கொண்டு அவர்களுக்கு வாழ்வு தருகிறமாதிரியான தொழில் ஒன்று தொடங்க வேண்டும் என்று தோன்றிற்று. பெரிய முதல் எதுவும் இல்லாமல் துவங்க வேண்டுமானால் கூரியர் சர்வீஸ் துவங்கலாம் என்று தோன்றிற்று. அதன்படி ஆரம்பிக்கப் பட்டதுதான் 'எஃபிஷியண்ட் கூரியர் சர்வீஸ்'... இதனை அநாதைப் பையன்களை மட்டும் வைத்துக் கொண்டு நடத்தி வந்தேன். இன்றைக்கு நடத்தப்படும் 'SKI' -என்பது சர்வதேசத் தொடர்புடையது. இதன் தலைமையகம் கானடாவில் உள்ளது. நான் எப்படி இதற்குப் பொறுப்பேற்றேன் என்பதை நான் சொல்வதைவிட ஜெயந்தி சொல்வதைக் கேளுங்களேன்" என்றார்.

• ஜெயந்தி வாரன்ஸ்



டோனியின் சேவை மனப்பான்மைக்குப் பக்கத்துணையாக இருந்து உதவி வருபவர் ஜெயந்தி.

"உலகெங்கிலுமுள்ள அநாதைச் சிறுவர்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணத்தில் 1987 - ல் பீட்டர் டக்ளிஷ் என்பவர் ஸ்வீடனில் இதனை ஆரம்பித்தார். UNICEF-ன் முன்னாள் அமைப்பாளர்களில் இவரும் ஒருவர். இப்போது இதன் தலைமையகம் கானடாவின் டோரன்டோ நகரில் உள்ளது. அநாதைச் சிறுவர்களைத் தேர்ந்தெடுத்து, கூரியர் சர்வீஸ் மூலம் வேலை செய்யப் பழக்கி, அவர்களைப் புதியமனிதர்களாக்குவது என்பது பீட்டர் டக்ளிஷின் திட்டம். அதன்படி பெங்களூரிலும் இதற்கான கிளை ஒன்று ஆரம்பிக்கப் பட, அப்போதுதான் பி.ஏ. முடித்துவிட்டு வேலை தேடிக் கொண்டிருந்த நான் அங்கே வேலை கிடைக்கவும் SKI கூரியரில் வேலைக்குச் சேர்ந்தேன். சேர்ந்த பிறகுதான் எவ்வளவு பெரிய அநீதி நடந்து கொண்டிருக்கிறது என்பது தெரிந்தது. எல்லாமே பெயரளவுக்குத்தான்! அநாதைப் பிள்ளைகளை வைத்துக் கொண்டு அவர்களுக்கு சரியான பராமரிப்பு இல்லாமல் போதனை இல்லாமல், முறையான வேலைகள் கற்றுக் கொடுக்கப் படாமல்... ஆனால் கானடாவிலிருந்து பணம் மட்டும் வரும். அது அநாதைப் பையன்களுக்கும் பயன்படாது, வேறு நல்ல காரியங்களுக்கும் பயன்படாது என்ற வகையில் வீணடிக்கப்படும். ஒரு நல்ல திட்டம் அநியாயமாய் செயல்பட்டுக் கொண்டிருக்கிறதே என்ற வேதனை இருந்தது. எப்படியோ விஷயம் கேள்விப்பட்டு கானடாவிலிருந்து ஒரு குழு வந்து விசாரித்தது. இதனை நடத்துபவர்களிடமிருந்து இந்தப் பொறுப்பைப் பறித்து, வேறு யாரிடமாவது நல்ல எண்ணமும் சேவை மனப்பான்மையும் கொண்டவர்களிடம் ஒப்படைத்தால்தான் தேறும் என்று முடிவு செய்தது. யாரிடம் ஒப்படைக்கலாம் என்று என்னைக் கேட்டார்கள். கல்லூரியில் என்னோடு ஒன்றாகப் படித்தவர் டோனி. கல்லூரி நாட்களிலேயே சேவை மனப்பான்மை அவருக்கு ரொம்பவும் அதிகம். அதனால் அவர் பெயரை சிபாரிசு செய்தேன். இந்தப் பொறுப்பை அவர் ஏற்றுக் கொண்டார்" என்கிறார் ஜெயந்தி வாரன்ஸ்.

எஸ்.கே.ஐ - பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று டோனி நாதனைக் கேட்டதும் டோனி ஒரு கண்டிஷன் போட்டாராம். "ஏற்றுக் கொள்கிறேன். உங்கள் அமைப்பின் விதிமுறைகள் என்னவோ அதன்படி செயல்படுகிறேன். ஆனால் ஒரே ஒரு விஷயம்... ஃபண்ட் என்ற பெயரில் ஒரு பைசா கூட நீங்கள் எனக்கு அனுப்பக் கூடாது!"

ஆச்சரியப்பட்ட கானடா தேசத்தவர்



அடுத்த இதழில்...

●● **உலகத் தரத்தில் தமிழ் சினிமா!**
- அர்ஜுன் பிரத்தியேகப் பேட்டி.

●● **உலகக் கோப்பை கால்பந்து :**
- ஒரு கலர்ஃபுல் கண்ணோட்டம்.

கள், பின்னர் முழு சந்தோஷத்துடனும் நிறைவுடனும் பொறுப்பை இவரிடம் ஒப்படைத்துச் செல்ல கடந்த மூன்று ஆண்டு களாக வெற்றிகரமாக நடத்தி வருகிறார் டோனி.

"இவர்களிடம் வேலை வாங்குவதில் சிரமம் எதுவும் இருக்கிறதா?"

"ஆரம்பகட்டத்தில் கொஞ்சம் சிரமம் தான். அவர்களை வேறொரு புதிய வாழ்க் கைக்குப் பழக்கும்போது தங்கள் போக்கில், தங்கள் விருப்பத்துக்குச் சுற்றிக் கொண்டிருந்த சுதந்திரம் பறிபோய்விட்டதே என்ற உணர்வு அவர்களுக்கு இருக்கிறது. இதனைப் படிப்படியாகத்தான் மாற்ற வேண்டும். அவர் களிடம் எடுத்த எடுப்பிலேயே தோழமை உணர்வுடன்தான் பழகுகிறேன். ஒரே சோஃபாவில் பக்கத்தில் உட்கார்ந்துதான் பேசுவேன். இந்த அணுகுமுறை அவர்களை முழுவதுமாக மாற்றிவிடுகிறது என்று நினைக் கிறேன்!" என்கிறார் டோனி.

"எதிர்காலத் திட்டங்கள் என்ன?"

"பைபிளில் ஒருவாசகம் வருகிறது. 'மற் றவர்களுக்கு நீ மீன் பிடித்துக் கொடுப்பதை விடவும் அவர்களுக்கு மீன் பிடிக்கக் கற்றுத் தந்துவிடு' - என்று. இதுதான் என்னுடைய கொள்கையும். இந்த அடிப்படையில்தான் நான் அநாதைப் பையன்களை ஊக்குவிக் கிறேன். கூரியர் சர்வீஸ் நேரம் முடிந்த பிறகு ஒரு இருபத்தைந்து ஏழைப்பிள்ளைகளுக்கு தினந்தோறும் டியூஷன் சொல்லித் தருகிறேன். ஸ்கிரீன் பிரிண்டிங் யூனிட் ஒன்றை ஆரம்பித்திருக்கிறேன். தச்சுத் தொழிற்கூட மொன்றையும் 'பேப்பர் ரீ சைக்ளிங்' திட்டம் ஒன்றையும் ஆரம்பிக்கும் நோக்கமிருக்கிறது..." என்று சொல்லிக் கொண்டே போகும் டோனியைப் பார்க்கப் பார்க்க பிரமிப்பாக இருக்கிறது.

-அமுதவன்

இந்தக் கேள்விகள் உங்களுக்கல்ல!



"கம்ப்யூட்டர் ஸ்பெல்லிங் என்ன?"

"உன் பெற்றோர் வீட்டில் சண்டை போட்டுக் கொள்வார்களா?"

"உனக்கு எந்த டீ.வி. தொடர் பிடிக்கும்?"

"உங்கள் காரை யார் ஓட்டுவார்கள்? உன் அப்பாவா? அம்மாவா? அல்லது டிரைவரா?"

"உங்கள் வீட்டு ஃப்ரிஜ்ஜைத் திறக்கும்போது நீ அதனுள் முதலில் பார்ப்பது ஒயின் பாட்டில்களா? அல்லது பழ வகைகளா?"

- இவை தில்லியில் உள்ள சில பிரபல பள்ளிகளில் சேருவதற்காக வரும் மூன்று வயது நிரம்பிய குழந்தைகளிடம் கேட்கப்படும் நேர்முகத் தேர்வுக் கேள்விகள்!

ஆதாரம் : ஹிந்து
தகவல் : சீனு

■■ *கின்னஸ் புத்தகத்தில், ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த பன்னிரண்டு வயதுச் சிறுவன் கனில் குமார் மாளவியா இடம் பெற்றிருக்கிறான் - உலகிலேயே மிகக் குறைந்த வயதுடைய சிறந்த புகைப்பட நிபுணன் என்ற முறையில்!*

- ஆவன்



தங்க கனவு

நற்செய்தி ! **நற்செய்தி !**

குறைந்த விலையில் தங்கத்தை வாங்க நினைக்கும் உங்கள் கனவை நிறைவேற்றுங்கள். நாங்கள் மார்க்கெட் விலையை விட குறைந்த விலையில் தங்கம் மற்றும் வெள்ளி எப்படி தருகிறோம் ?

- ★ மார்க்கெட் விலையை விட 20% குறைவான விலையில் 10 கிராம் 22 காரட் தங்கம் மற்றும் வெள்ளி நகைகளை நாங்கள் உங்களுக்காக் பதிவு செய்கிறோம். பதிவு விலையை தினமும் எங்கள் அலுவலகத்தில் அறிவிக்கிறோம்.
- ★ பதிவு வரிசையாக செய்கிறோம். தங்கள் பதிவு எண்ணைவிட 5 மடங்காக பதிவு எண் வரும் பொழுது தாங்கள் தங்கம் அல்லது வெள்ளி நகைகளை பெற்றுக்கொள்ள தகுதி பெறுகிறீர்கள்.
- ★ பதிவு செய்த 12 மாத காலத்திற்குள் தங்கள் முறை தங்களுக்கு வரவில்லை எனில் நீங்கள் முதலீடு செய்த பணத்தை வருடத்திற்கு 12% வட்டி வீதம் முதலுடன் பெற்றுக் கொள்ளலாம்.
- ★ உங்கள் முறை வரும்பொழுது தங்கம் பெற்றுக் கொள்ள உங்களுக்கு விருப்பமில்லையெனில், பதிவு செய்த தேதியில் உள்ள மார்க்கெட் விலையில் 10 கிராம் தங்கத்திற்கு ரூ. 200/- பிடித்த பின் மீதித் தொகையை நீங்கள் பணமாக பெற்றுக் கொள்ளலாம்.
- ★ பதிவு செய்ய போதுமான பணம் இல்லையா ? ஏமாற்றமடையாதீர்கள். நீங்கள் 10 கிராமிற்கு ரூ. 1500/- மட்டும் செலுத்தி இப்பொழுது பதிவு செய்துகொள்ளலாம். மீதித் தொகையை தாங்கள் டெலிவரி எடுக்கும் பொழுது மாதம் 2% வட்டியுடன் செலுத்தினால் போதும்.
- ★ செய்கூலி மற்றும் சேதாரம் உண்டு.
- ★ டெலிவரி பெற்றுக் கொள்ளும் சமயத்தில் உள்ள விற்பனை வரி மற்றும் இதர வரிகளை வாடிக்கையாளர்கள் கட்ட வேண்டும்.
- ★ விண்ணப்ப பாரம் விலை ரூ. 10/-
- ★ நியமன வசதியும் உண்டு.

வேகமாக விலையேறும் இந்த காலத்தில் தங்கள் கனிவான குறைந்த விலையில் தங்கம் வாங்குவதை நாங்கள் எப்படி நிறைவேற்றுகிறோம் என்பது தற்பொழுது தங்களுக்கு புரிந்து இருக்கும்.

வாருங்கள் காலங்கடத்தாதீர் ஏனெனில் அதிகமாக பதிவு ஆக ஆக தாங்கள் காத்திருக்கும் காலம் 12 மாதங்களாகலாம். உடனே பதிவு செய்து குறுகிய காலத்தில் விரைவாக பொருளை பெற்றுக்கொள்ள தகுதி பெறுங்கள்.

(தங்கம், வெள்ளி, மற்றும் இதர நகைகள் தயாராக உள்ளன. ஆர்டர்களும் பதிவு செய்கிறோம் வாருங்கள் வந்து பயன் பெறுங்கள்)

இது ஒரு லாட்டரியோ சூதாட்டமோ அல்லது குலுக்கலோ இல்லை. இது ஒரு முழுமையான நேர்மையான வியாபாரம்.

விண்ணப்படிவங்கள் விற்பனைக்கு உள்ளன. வாருங்கள் உங்களுக்கு பணிபுரிய எங்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தை தாருங்கள்.

தேவி கோல்டு ஹவுஸ்

65, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, புரசைவாக்கம்,
சென்னை – 600 007. ✆ : 5324477, 5324499

உங்களுக்கு சேவை செய்தவற்காக தி. நகர் உஸ்மான் ரோட்டில் எண். 59 மற்றும் எண் 128 இல் மேலும் இரண்டு ஜுவல்லரி ஷோ ரூம்கள் (பனகல் பார்க் அருகில்) விரைவில் திறக்க விருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

Kalki Shopping Page

R.K.N.GOLD COVERING

ஒரிஜினல் சிதம்பரம் கோல்டு
கவரிங் எங்களிடம் 1/2 கிராம், 1 கிராம்
செயின், நெக்லஸ், வளையல், கம்மல்,
உத்திரவாதத்துடன் கிடைக்கும்.
**உபயோகித்தபின் எங்களிடம்
திரும்பக் கொடுத்தால்
பொருளுக்குத் தகுந்தாற்போல்
பணம் கிடைக்கும்.**
1 வருடம் முதல் 5 வருடம் வரை
உத்திரவாதத்துடன் கிடைக்கும்.
**திருமணம் மற்றும் விசேஷ
வைபவங்களுக்கு நகைகள்
வாடகைக்குக் கிடைக்கும்.
உபயோகித்தபின் பணம் பெறும்
நிபந்தனையுடன் கிடைக்கும்.**

வெள்ளி ஜரிகை
உருக்கித் தரப்படும்.
விலைக்கு வாங்கப்படும்.

R.K.N. கோல்ட் கவரிங்
75, ரங்கநாதன் தெரு,
தி.நகர், சென்னை 600017.
போன்:445448

தரமிக்க
ராணி சாரீஸ்

RANISAREES
MADURAI-12
R.A.M.

**இந்தத் துணி லேபிலைப் பார்த்து
வாங்குங்கள்.
மற்றவை நமது தயாரிப்பு அல்ல.
எங்களின் மாதாந்திர சேமிப்புத்
திட்டத்தில் சேர்ந்து பயனடையுங்கள்.
கிடைக்குமிடம் :**

மதுரை
டெக்ஸ்டைல்ஸ்

**2, வெப்பிரகாசம் ரோடு,
பாண்டி பஜார், சென்னை - 600 017.**

SIWA



***Can a Clock do more than
show the time?***

**Contact for Trade &
Complementary Enquiries :**

Authorised Distributors :

SRINIVASA AGENCY,

**"Perry's view" D-39 Madlee Road,
First Street, T.Nagar, Madras - 17.
Phone : 446454**

நீங்கள் இல்லாமலா
இந்தப் போட்டி?

ஒரு சவரன் தங்க நகை பரிசு

பெண் கணவனிடம் எதிர்பார்ப்பது
பணம் - பண்பு


அவசியம் கலந்து கொள்ளுங்கள். சரியான
விடையைக் குறியிட்ட கூப்பன்களுக்கு
குலுக்கல் முறையில் பரிசு உண்டு.
எழுத வேண்டிய முகவரி:



ஃபாஹிமாஸ்
ஜுவல் ஹவுஸ்

78, உஸ்மான் ரோடு,
(ரங்கநாதன் தெருஎதிரில்)
தி.நகர், சென்னை 600 017.
போன் 445744, 446073

சென்னை உஸ்மான் சாலையில் மட்டும்



மலர் : 52
இதழ் : 46


ஜனநாயகத்தின் முதல் எதிரி!

"கள்ள வோட்டு போட்டுவிட்டார்களே!" என்று குய்யோ முறையோ என்று கத்துகிறார்கள் சில எதிர்க்கட்சித் தலைவர்கள் - குறிப்பாகக் காங்கிரஸ். தேர்தலை ரத்து செய்ய வேண்டும் என்று சேஷனிடம் முறையிட, அவரும் தம் பிரதிநிதிகளை அனுப்பி ஆராயச் சொல்லியிருக்கிறார்.

முறைகேடுகள் சில நடந்திருக்கலாம். ஆனால் நடந்த தேர்தலை ரத்து பண்ணி, மறு தேர்தல் நடத்துமளவுக்குப் பெரிய அளவில் தில்லுமுல்லு ஏதும் நடந்துவிட்டதாகவோ, அதிகாரிகள் அதற்குத் துணை நின்றதாகவோ கருத இடமில்லை. அப்படியே மறுதேர்தல் நடந்தாலும் அ. தி. மு. க. தோற்று, தி. மு. க.வோ காங்கிரஸோ வெற்றி பெற்று விடவும் போவதில்லை!

வாக்குச் சாவடியைக் கைப்பற்றுதல், வோட்டுக்களை விலைக்கு வாங்குதல், புடைவை - வேஷ்டி - கம்மல் விநியோகம் போன்ற அக்கிரமங்கள் எல்லாம் - சேஷனுக்கு நன்றி - இப்போது ரொம்பக் குறைந்து இருக்கின்றன. 'ஆள் மாறாட்டம் செய்து கள்ள வோட்டுப் போட்டார்கள்' என்பதுதான் மயிலையில் மிக அதிகமாகக் கூறப்படும் குற்றச்சாட்டு. பெருந்துறையிலும் " 'வாக்காளர்களை' லாரிகளில் அழைத்து வந்து கல்யாண மண்டபத்தில் தங்கியிருக்கச் செய்தார்கள்" என்று குற்றச்சாட்டு.

கள்ள வோட்டு போடுவது தவறுதான். ஆனால் இது சாத்தியமாவது எப்படி? வோட்டுப் போட வேண்டியவர்கள் போடாமலிருப்பதுதான் காரணம். படித்தவர்கள் நிறைந்த மயிலையில் 56 சதம் வாக்காளர்களே வோட்டளித்தார்கள். இதற்குப் பெருந்துறை எவ்வளவோ தேவலாம். 72 சதம் வாக்குப் பதிவு. மெத்தப் படித்த மேல்தட்டு மக்கள்தாம் வோட்டுப் போட வராமல் இருக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரிகிறது. (ஆர். வி. யே வரவில்லை என்பதில் தேர்தல் அதிகாரிகளுக்கே ஏமாற்றம்) 'அவர்கள் வோட்டுக்களைக் கள்ள வோட்டுக்களால் நிரப்பி விட்டால் என்ன?' என்ற உபாயம் தோன்றுகிறது. ராமமூர்த்தி ஐ. ஏ. எஸ். ஏமாற்றமடைந்து



திரும்ப நேர்கிறது! படித்தவர்கள் 'நாம் வோட்டுப் போட்டு ஆவது என்ன?' என்றிராமல், 'நாம்தான் முக்கியமாக வோட்டுப் போட்டு வழிகாட்ட வேண்டும்' என்ற எண்ணத்துடன் அதிகாலையிலேயே வோட்டுச் சாவடி நோக்கிப் படையெடுத்தால் கள்ள வோட்டுப் போடவே வாய்ப்பில்லாது போகும். மயிலையில் 56 சதவீத வோட்டு, என்பது சதமாக உயர்ந்திருந்தால், யார் கண்டது, தேர்தல் முடிவே வேறு மாதிரி இருந்திருக்கலாம். அவ்வாறே பெருந்துறையிலும். மெய்யான ஜனநாயகம் எனில் குறைந்தபட்சம் 90 சதம் வாக்குப் பதிவு நடக்க வேண்டாமோ? ஜனநாயகத்தின் முதல் எதிரி வாக்காளரின் மெத்தனம்தான். விடுமுறையை அனுபவித்து உறங்கிக் கொண்டிருந்துவிட்டுப் பின்னர், எந்தவிதமாகவெல்லாம் கள்ள வோட்டு போடப்பட்டது என்று சுவாரஸ்யமாக வம்பு பேசி மகிழ்வதில் என்ன பயன்?


நமது தேர்தல் முறைகளில் நிறையவே குறைபாடுகள் உள்ளன என்பது கடந்த நாற்பது ஆண்டுகளில் நன்றாக உணரப்பட்டுள்ளது. பாபர் மசூதி தரைமட்டமான பிறகு அதிர்ச்சியும் கவலையும் அடைந்த நாட்டின் பெரு மக்கள் பலர் ஒன்றுகூடி ஆராய்ந்து, நமது பல இன்னல்களுக்கும் அடிப் படைக் காரணம் தேர்தல் நடக்கும் முறைதான் என்று தீர்மானித்து, செலவுக் கணக்கு, பிரசார முறை போன்ற அதன் எல்லா அம்சங்களிலும் சீர்திருத்தங்களுக்கு விரிவான திட்டங்கள் வகுத்துள்ளனர். 'தேர்தல் சீர்திருத்தம் என்றால், சேஷனின் அதிகாரங்களைக் குறைப்பது மட்டுமே' என்று எண்ணாமல், ஆளும் கட்சியும் எதிர்க்கட்சிகளும் இந்தப் பேரறி ஞர்களின் சிறந்த திட்டங்களைத் தன்னலமின்றித் தயங்காது ஏற்றுச் சட்டங்களைத் திருத்தி மேம்படுத்த வேண்டும்.

அல்லாத பட்சத்தில், லட்டிலே மூக்குத்தி, கள்ள வோட்டு, 'பெருந் துறையில் மாபெரும் நூற்பு, நெசவு ஆலைகள் வரப்போகின்றன' என்று முதல்வர் ஆசை காட்டுவது போன்ற பல அநீதிகள் நிகழ்ந்த வண்ணம்தான் இருக்கும். குறைந்த பட்ச வோட்டுக்களைப் பெற்றவர்கள்தாம் அதிகபட்ச இடங்களைச் சட்ட மன்றத்திலும் நாடாளுமன்றத்திலும் பெற்று ஜன நாயகத்தைக் கேலிக் கூத்தாக்கிக் கொண்டிருப்பார்கள்!



1994
ஜூன் 12
பவ
வைகாசி 29

தமிழ்த்திரு நாடு
தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா. - பாரதியார்.



• சி.ஏ. ராஜன்

குழாயைத் திறந்தால் கொட்டுது ஊழல்!

இடைத் தேர்தல் பரபரப்பில், மெட்ரோ வாட்டர் பற்றிய ஊழல் கிணற்றில் போட்ட கல் போல், அமுங்கிப் போய் விட்டது.

- 35000 ரூபாயில் முடியக் கூடிய 12000 லிட்டர் கொள்ளளவுள்ள தண்ணீர் டாங்கிற்கு (லாரியில் வைப்பது) 60,000 ரூபாய் கொடுத்தது.

- திறமையான இன்ஜினியர்கள் மெட்ரோ வாட்டரில் இருந்த போதிலும் கன்ஸல்டன்ஸி என்ற பெயரில் ஒரு குறிப்பிட்ட கம்பெனிக்கு மட்டும் பணத்தைத் தாராளமாய் இறைப்பது.

- சென்ற வருடத் தண்ணீர்ப் பஞ்சத்தில் நெய்வேலித் தண்ணீரைக் கொண்டு வந்த லாரி, ஒரு டிரிப் அடித்து விட்டு இரண்டு மூன்று முறை அடித்ததாகப் பணம் பெற்றுக் கொண்டது.

-ரெட்ஹில்ஸில் கிருஷ்ணா தண்ணீருக்கான சுத்திகரிப்பு நிலையம் கட்டுவதில் 35 லட்ச ரூபாய் அரசுக்கு நஷ்டத்தை உண்டாக்கியது...

இப்படி ஏகப்பட்ட புகார்களை அடுக்கினார் மெட்ரோ வாட்டர், உதவிப் பொறியாளர் (பட்டப் படிப்பு) சங்கத்தின் தலைவரான சி.ஏ. ராஜன்.

"இடைத் தேர்தல் சமயத்தில் இப்படிப் புகார் கூறுகிறீர்களே, இதற்கு ஏதாவது பின்னணி உண்டா?" என்று கேட்ட போது, ராஜன் சொன்னார்.


"நான் எந்தக் கட்சியையும் சார்ந்தவனல்ல. இரண்டு வருடம் முன்பு இளநிலைப் பொறியாளர் பதவியிலிருந்து, உதவிப் பொறியாளர் பதவிக்குப் பதவி உயர்வு கொடுக்கும் போது, பட்டப் படிப்பு படித்த பொறியாளர்களுக்கும், டிப்ளமா பொறியாளர்களுக்கும் 3 : 1 என்ற விகிதத்தில் பதவி உயர்வு வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்று போராடினோம். அப்போது நடந்த போர்டு மீட்டிங்கின் போது, முறைப்படி அனுமதி பெற்றுக் கொண்டு, உள்ளே சென்று இயக்குனர்களிடம் எங்கள் கோரிக்கையைத் தெரிவித்ததற்காக, நிர்வாகம் கோபம் கொண்டு பொய்ப் புகார் சொல்லி, போலீஸைக் கொண்டு கேஸ் போட வைத்து என்னையும் வேறு சிலரையும் சஸ்பெண்ட் செய்தது. கடந்த மாதம் 25 ம் தேதி போர்டு மீட்டிங்கில் என்னை வேலையை விட்டு நீக்க அனுமதி பெறப் போவதாகக் கேள்விப்பட்டேன். சரி, இனிமேல் பொறுக்கக் கூடாது என்றுதான் 20-ம் தேதி, நிருபர்களைக் கூப்பிட்டு புகார்களைச் சொன்னேன். என்னிடம் ஆதாரம் உண்டு."

"முதலமைச்சர் மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கு மெட்ரோ வாட்டரில் நடக்கும் எதுவும் தெரியாதா?"

"இங்கேயிருக்கும் ஆபீஸர்கள் கில்லாடிகள். உதாரணமாகச் சொல்வதென்றால் ஒரு கோடி ரூபாய்க்கு மேலான வேலை என்றால் தான் அரசின் அனுமதி வேண்டும். அதற்காகப் பலகோடி ரூபாய் மதிப்புள்ள வேலைகளை ஒரு கோடிக்குள் வருமாறு பல பகுதிகளாக வகுத்துப் பிரித்துக் கொண்டு, ஒப்பந்தம் கொடுத்துக் கொள்ளை அடிக்கிறார்கள். சென்னையில் தண்ணீர்ப் பஞ்சம் வந்தால் இவர்களுக்குக் கொண்டாட்டம்தான். மகாராஷ்டிரா பூகம்பத்துக்கென்று நிதி வசூலித்து விட்டு, முதல்வரை 'காக்கா' பிடிக்க வேண்டும் என்ற நோக்கத்தில், முதலமைச்சர் நிவாரண நிதி என்று சொல்லிக் கொடுத்து விட்டார்கள்.

"மெட்ரோ வாட்டர் நிர்வாக போர்டில், பொது மக்களின் பிரதிநிதிகளாக ஆறு இயக்குனர்களை நியமிக்க வேண்டும். அப்படி நியமிக்கப்படாததால் அதிகாரிகள் பாடு கொண்டாட்டமாக இருக்கிறது!" என்கிறார் ராஜன்.

சந்திப்பு : **ப்ரியன்**



நம்ம அண்ணாச்சி

சரத்குமார் 1, சரத்குமார் 2, சரத்குமார் 3. முத்தான மூன்றுவேடங்களில். நம்மை அதிகம் கொடுமைப்படுத்த விரும்பாமல் முதல் ஸீனிலேயே சரத் 1 இறந்து விடுகிறார். நேர்மையான போலீஸ்காரர்களெல்லாம் இப்படித்தான் முதல் ஸீனில் இறந்து விடுவார்கள். அப்போதுதானே நம்பர் 2 பழிவாங்கக் கிளம்ப முடியும்?

சும்மா சொல்லக் கூடாது. ரசிகர்களைப் பழிவாங்குவதில் நம் மாண்புமிகு திரையர்களுக்கு என்ன ஓர் அக்கறை?

உணர்ச்சிக் குவியலாய் சரத் 2 போடும் சண்டைகளெல்லாம் உங்கள் நலனுக்கு. பின்னணி 'டிஷ்யூம்'களின் இதமான தாலாட்டில் மெய் மறந்து தூங்கி விடுவீர்கள்.

சும்மா இருப்பாரா சரத் 3? ஹீராவோடு ஓர் அதிரடி ஆட்டம் போட்டு, உங்களை அலறி அடித்துக் கொண்டு எழுந்துவிடச் செய்வார். பின்னே, சரத் 2 & சரத் 3 க்கிடையே நடக்கும் நீதியா பாசமா போராட்டத்தைக் கண்டு களிக்க வேண்டாமோ?

களிக்க களிக்க நெஞ்சம் களிக்க, துடிக்கத் துடிக்க நரம்புகள் துடிக்க, கொதிக்கக் கொதிக்க ரத்தம் கொதிக்க, உதைக்க உதைக்க கிளைமாக்ஸில் உதைக்க, கழுத்தைப் பிடித்து நெறிக்க நெறிக்க, தேவர் மகனைக் காப்பி அடிக்க, சரத் 2 அங்கே இறக்க இறக்க...

படம்முடிந்து வீடு வந்ததும் சிரமம் பார்க்காமல் ஒரு தரம் 'ஏரியல்' தேய்த்துக் குளித்து விடுங்கள்.

பின்னே, கசாப்புக் கறை போக வேண்டாமா?

- ஆர். பி. ஆர்.

9 நரகமான நகரம்

ஷியாம் சுந்தரின் அந்த தப்புக்குறி போடப்பட்ட போட்டோவை அதிக நேரம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்பதால், அதைப் பதுக்கி வைத்துவிட்டு, ஃபைலின் பேப்பர்களில் கண்களை அவசரமாக விரட்டினான்:

"Once the white poppy flowers turn red and the petals fall off, the bulb emerges. Each morning they lance it in four places so that the opium latex, much like rubber, oozes down the bulb..."

தொடர்ச்சியாக நான்கு பேப்பர்கள் இருந்தன. அத்தனையையும் கம்ப்யூட்டர் வேகத்தில் படித்தான். மேலோட்டமாகத் தான் கொஞ்சம் விளங்கியது. ஓபியம் என்பது கஞ்சாவோடு சேர்ந்த போதை வஸ்து என்று அவனுக்கு ஏற்கெனவே தெரியும். ஆனால் பரபரப்பு காரணமாகவும் நிதானமின்றிப் படித்ததாலும் முழுதுமாக விளங்க வில்லை.

ஒரு பியூன் எட்டிப்பார்த்து, "பாலேகர் சாஹிப்...ஆப்க்கோ புல்லாயா!" என்றான்.

பழையபடி அந்த பெரிய ஃபைலுக்குள் இந்தச் சின்னப் பையை வைத்தான். ரேக்கில் போட்டுவிட்டான். விரைந்து பாலேகரிடம் போனான்.

"அஜய் அறையில் உனக்கு என்ன வேலை, பிரகாஷ்?"

"என்னோட நாவல் ஒன்றை அஜய் வாங்கினார்."

"ஓட்லும் நாவல் தானே?"

"ஆமாம்..."

"சிஸ்டம்ஸ் அனலிஸ்ட் பிரேமாகிட்டே கேளு. அஜய் அவளிடம் நேற்று ஆபீஸ்விட்ட சமயம் உங்கிட்ட கொடுக்கச் சொல்லி கொடுத்த ஞாபகம் இருக்கு எனக்கு..."

"சரி...சார்!"

"பொருத்தமான ஆட்கள் பக்கத்தில் இல்லாமல் ஒரு கேபினைத் திறக்க உனக்கு இன்னும் அதிகாரம் தரப்படலை. அஜய் கேபினைப் பூட்டி சாவியைக் கொண்டு வா!"

பிரகாஷ் அப்படியே செய்தான். ஆனால், அந்த ஃபைல் ஒளித்து வைக்கப்பட்டிருந்த இடத்தை மட்டும் ஞாபகத்தில் வைத்துக் கொண்டான்.

மாலையில் மாதுங்கா வந்து சேர்ந்த போது ஏற்கெனவே நிஷாவும், அவளுடைய அப்பாவும், தன் அப்பா அம்மாவிடம் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டான். கிருஷ்ணாராவின் அன்றைய கண்டிஷனான பேச்சு இன்னும் பிரகாஷை அச்சுறுத்திக் கொண்டிருந்தது. ஸ்டெய்ன்லெஸ் ஸ்டீல் ப்ளேட்டுகளையும், பைப்களையும் தான் தூக்குப் பார்க்க வேண்டி வருமோ எனப் பயந்தான்.

"வருக...என் வருங்கால மருமகனே!" என்றார் கிருஷ்ணராவ்.

நிஷாவின் பக்கம் தலையைத் திருப்பினான் பிரகாஷ். அவள் கூடக் கொஞ்சம் வெட்கப்பட்டு சுருங்கிப் போயிருப்பது அவனுக்கு ஆச்சரியமாய் இருந்தது.

"பிரகாஷ், நாங்க இப்போ ஏன் வந்தோம்னு சொல்லிட்டுப் போயிடறேன். எனக்கும் வேலை நிறைய இருக்கு. நான் தயாரா கிட்டேன், நிஷாவுக்குக் கல்யாணம் பண்ண. நாளைக்கே அவளைக் கைப் பிடிக்க நீ தயார் என்றால் நானும் தயார்."

"என்ன அவசரம்?"

"இந்த வண்டி, அளவுக்கு அதிகமா ஓடிட்டுது, பிரகாஷ். ஒருவேலையும் செய்யாம உட்கார்ந்திருக்கணும்னு எனக்கே தோணி



ருச்சு. எப்படியும் நிஷா உனக்குத்தான்னு எப்பவோ முடிவாகிட்டுது! எதுக்குத் தாமதம் பண்ணனும்?"

"நான்... என்னோட லட்சியம் உங்களுக்கு விளங்கவில்லை..."

"பெட்டியைத் தூக்கிட்டு வீதி வீதியா அலையற வேலைதான் செய்யணும்கிற லட்சியத்தில் இருக்கியா? அதைவிட எத்தனையோ மடங்கு மதிப்பான இலக்கை உனக்கு நிர்ணயிச்சுத் தரேன், நான்."

கிருஷ்ணராஜ் கொஞ்ச நேரத்தில் போய் விட்டார். நிஷா, "பின்னால் வருகிறேன்" எனக்கூறி அப்பாவை மட்டும் தனியாக அனுப்பி விட்டாள். பிரகாஷின் மனசுக்கு ஒவ்வாத அறிவுரைகள் நிறையக் கூறி குழப்பினர் அவன் பெற்றோர். நிஷா அவனையே பாவப்பட்ட ஜீவன் போல் நோக்கிக் கொண்டிருந்தாள். ஒரு கட்டத்துக்கு மேல் பொறுக்க முடியாமல் வெட்டிக் கொண்டு பிரகாஷும் நிஷாவும் வெளியே கிளம்பினார்கள்.

சாலையெல்லாம் காலியான கார்கள் தனிமையான சோகத்தில் ஓடிக் கொண்டிருந்தன. சோடியம் வேப்பர் விளக்குகள் சோர்வு அறியாமல் எரிந்து கொண்டிருந்தன. ஸ்டேஷன் போகும் சாலையில் இருவரும் நிதானமாக நடந்தார்கள். நிஷா ஆரம்பித்தாள்:

"டோன்ட் கெட் அப்செட், யார்! அப்பா எப்பவாவது இப்படிப் பேசுவார். அதையே



பெனிட்டோ குமார்

நினைச்சுக்கிட்டுக் கவலைப் படாதே!"

"உடனே கல்யாணம் பண்ணணும்னு சொல்றாரே..."

"அது ஒரு வகையில் ஏற்றுக் கொள்ள வேண்டிய விஷயம் தானே!"

"என்னது?"

"அது அவரோட ஆசை... கோடிக்குமேல சொத்து கொட்டிக் கிடக்குது பிரகாஷ்! அத்தனையையும் கொடுக்கப் போறார்!"

"யாருக்கு?"

"என்னைக் கைப்பிடிக்கப் போறவனுக்கு."

"யார் அவன்?"

"நீதான். போகிற போக்கைப் பார்த்தால்...எல்லாத்தையும் தியாகம் பண்ணிடுவே போலத் தெரியுது பிரகாஷ்!"

"எதையும் தியாகம் பண்ணுவேன். ஆனால், உன்னைத் தியாகம் பண்ணமாட்டேன். நீ எனக்கு வேணும் நிஷா! உன்னோட வரப்போற அந்த மெட்டல் கம்பெனி; ஒரு கோடி ரூபாய் சொத்து; எதுவும் எனக்கு வேண்டாம். நீ மட்டும் போதும்."

"அப்பா...என்னை மட்டும் தனியா தரமாட்டார், ராஜா...!"

"தந்தே ஆகணும்...அல்லது நீ வந்தே ஆகணும்..."

"எங்கே..?"

"என்னோட.... நம் காதலை மதித்து..."

"அப்பா?"

"அவர் இஷ்டப்படியெல்லாம் நடக்க முடியுமா நிஷா?"

"அவர் அப்படி என்னப்பா தப்பா சொல்றார்? மெடிக்கல் ரெப்பா அலையறது கைகட்டிய சேவகம் தானே? அதைவிட எத்தனையோ படி மேலே போய், கம்பெனியையே உன்கையில் தர்ரேன்னு சொல்றார்..."

"உனக்கு இன்னும் விளங்கலை... யுனிவர்சிட்டி செகன்ட் ரேங்கில் எடுத்த எம்.எஸ்ஸி. என்ன ஆகிறது!"

"நீயும் உன்னோட பட்டமும்! பட்டம் வாங்கிட்டு எத்தனை பேர் வேலை வெட்டி இல்லாம பைத்தியம் படிச்சாப்பல அலையறாங்க!"

"அப்போ அந்த மெட்டல் கம்பெனியையே கவனிக்கச் சொல்றியா?"

"ஆமாம்!"

"நான் மாட்டேன்னு சொன்னால் வேறு எவனையோ கல்யாணம் பண்ணிக்குவே, இல்லே?"

"நோ! நோ! உன்னைத்தான் பிரகாஷ். உன்னை விடமாட்டேன். அப்பா...சொல்ற மாதிரி. நீ கேட்டாகணும். என்னை மேரேஜ் பண்ணிக்கிட்டு கம்பெனியை மானேஜ் பண்ணணும்!"

"பொறி வச்சுட்டியா?"

"ஆமா. நீ மாட்டியே ஆகணும்..."

"மசால் வடை நீதானே?"

"எப்படியோ வச்சுக்க."

"சரி... நாளைக்கு மறுநாள் யோசனை பண்ணி வந்து மாட்டிக்கிடறேன்..."

இந்த அளவுக்கு பிரகாஷ் இறங்கி வந்ததே அவளுக்குப் போதுமானதாய் இருந்தது. சிரிக்கலானாள்.

மாதுங்கா ஸ்டேஷன் மேம்பாலம் ஏறி இறங்கி, மேற்குப் பக்கம் ஹோட்டல் ராஜேஷ்க்குள் நுழைந்தார்கள். குலாப் ஜாமூன் ஆர்டர் செய்து, இனிக்க இனிக்க உண்டார்கள்.

"நிஷா! உங்கிட்ட சொல்லணும்னு நினைச்சேன்."

"என்னது?"

"அன்னிக்குச் சொன்னேனே ஒரு ஃபைல்?"

"ஆமா..."

"ஃபைல் முழுவதும் படிச்சுட்டேன்."

"ரியலி..! என்ன இருந்தது?"

"நிறைய இருந்தது. அத்தனையும் விளங்கலை. ஆனால் நிச்சயமா ட்ரக் சமாசாரம் தான். எனக்கு அஜய் மேலயும், பாலேகர் மேலயும் டவுட் நிஷா! இவங்க ரெண்டு பேரும் எங்கேயோ ட்ரக்ஸ் கடத்தல் வேலை பண்றாங்கன்னு."

"அதை மறந்துடு பிரகாஷ். உன்னோட வேலையை மட்டும் பார். நீ அதிக நாள் அங்கே பணி செய்ய வேண்டி நேராது. அப்பாவோட பிடிவாதம் பார்க்கும் போது... விரைவில் கல்யாணம்."

"யோசிப்போம். எனக்கு அந்த மெட்டல் கம்பெனியைப் பார்க்கத் துளிக் கூட இஷ்டம் இல்லை நிஷா..."

"இன்ட்ரஸ்ட் வரும். நான் வர வைக்கிறேன்."

"உன் இஷ்டத்துக்குநான் ஆட வேண்டியது தானா? தனி மனிதனா என்னை யாரும் மதிக்கலை. எல்லாம் இந்த அழகுக்காக." என்று அவள் உதட்டில் ஆள்காட்டி விரலால் தட்டினான். அவள் வாயைப் பிளந்து விரலைக் கடித்து விட்டாள்!

'ஆ' என்றான்.

மறுநாள் விளையாட்டாகத்தான் ஆபீஸ் போனான் பிரகாஷ். சொந்தக் கால் என்று ரொம்பத் திமிராக மனதிற்குள் திட்டம் போட்டிருந்தவனிடம், மெல்ல மெல்ல தளர்வு புகுந்து விட்டது. மெட்டல் கம்பெனியை நிர்வகிப்பது தனக்கு மரியாதை சேர்க்கும் என்பது மட்டுமல்ல நிஷாவுக்காகத் தான் ஏதோ பெரிய தியாகம் செய்வதாகவும் எண்ணிக் கொண்டான்! அதனால் கர்வம் கூட அவனிடம் எட்டிப் பார்த்தது. 'ஷில்பா கம்பெனியில் இன்றே, 'நான் இனி வர மாட்டேன்' எனக் கூறி துடைத்துவிட்டு வந்து விடலாமா?' என்றும் யோசித்தான்.

பல்லவனின் "புட்போர்ட்" பயணிகள் வெட்கித் தலைகுனிய வேண்டியதுதான். பங்களாதேஷில் வழிபாடு ஒன்றில் கலந்து கொண்டு ஊர் திரும்பிய பக்தர்கள், ரயிலுக்கு உள்ளே நிறைந்து வெளியே மூன்று அடுக்குகளாகத் தொத்திக் கொண்டு இவ்வாறு பயணம் செய்தார்கள்!

ஆதாரம்: ஸன்;
தகவல்:'சேலம் சக்திக்கொடி'



ஆபீஸ் போனவுடனேயே பியூன் வந்து "அவசரம்... அஜய் அழைக்கிறார்" என்றான். போனான்.

"பிரகாஷ்.ஒரு அவசர வேலை இருக்குது..."

"என்ன?"

"ஹோட்டல் பானு...அன்று போனேயில்லையா?"

"சாகர் ஏர்போர்ட்டுக்கு எதிர்ப்புறம்."

"அதேதான். பாலேகர் அங்கே போயிருக்கார். அவரோட சூட்கேஸ் இங்கே தங்கிட்டது. நீ உன்னோட சூட்கேஸை இங்கே விட்டுட்டு அவரோட சூட்கேஸை எடுத்துக்கிட்டுக் கிளம்பு..."

"சரி."

"போனவுடன் என்ன வேலை செய்யணும்னு சொல்வார். அல்லது உனக்குப் புதிய வாடிக்கையாளர்களை அறிமுகம் செய்து வைப்பார். அவர் கூடவே காரில் திரும்பி வந்துடலாம்...இந்தா..." என சூட்கேஸை எடுத்துத்தர, பெற்றுக் கொண்டு கிளம்பினான்.

மெரின் லைன் ஸ்டேஷன் வந்து ஃபாஸ்ட் ட்ரெயின் பிடித்து, அந்தேரி போய், ஸ்டேஷன் விட்டு வெளியே வந்து, டாக்ஸி அமர்த்தி ஹோட்டல் பானுவின் முகப்பிற்கு வந்தான். எதிரே சாகர் ஏர்போர்ட் சாலை அமைதியாக நீண்டு கிடந்தது. வானவீதியில் இரண்டு அலுமினிய வல்லூறுகள் இறங்க இடம் பார்த்துச்சுற்றிக் கொண்டிருந்தன.

டாக்ஸிவிட்டு இறங்கியவன் நீல நிற போலீஸ் வேன் கண்டு குழம்பினான். அவனை நோக்கி டி.எஸ்.பி.ராஜேந்திர வர்மா வந்தார். 'அவர் ஏன் என்னைப் பார்த்துச் சிரிக்கிறார்?' இவனும் மெல்லிதாகச் சிரித்தான்.

"பிரகாஷ்... எங்கே கிளம்பினீங்க?"

"என்னோட பாஸ் இங்க எனக்காகக் காத்திருக்கார்."

"யாரு?"

"பாலேகர்.."

"உங்க சூட்கேஸைக் கொஞ்சம் பார்க்கலாமா?"

"எதுக்கு?"

பதில் கூறத் தேவையில்லை என்பது போல் டி.எஸ்.பி. அவன் கரங்களிலிருந்து வலுக்கட்டாயமாக சூட்கேஸை வாங்கிக் கொண்டார்.

"கான் பூட்டை உடைங்க..." ஆணை போட்டார் டி.எஸ்.பி.

"சூட்கேஸ் என்னோடது இல்லே; பாலேகருடையது" என்ற அவன் ஆட்சேபனையை யாரும் லட்சியம் செய்யவில்லை.

சுறுசுறுப்பாகச் செயல்பட்ட கான், கொஞ்ச நேரத்தில் சூட்கேஸைப் பிளந்தார். உள்ளே வரிசை வரிசையாக பிளாஸ்டிக் பெட்டிகள். அவற்றில் ஒன்றைத் திறந்து பார்த்து, ஒரு பாலிதீன் பேப்பர் பாக்கெட்டை எடுத்தார். அதில் பேனா கத்தியால் ஒரு துளை போட்டு, பவுடரைத் தட்டினார். நாசியின் அருகில் கொண்டு போனார். வித்தியாசம் தெரியவில்லை. இன்னொரு பெட்டியைத் திறந்தார். பார்த்ததுமே அனுபவப்பட்ட அவர் முகம் மலர்ந்தது. ஒரு சிட்டிகை நாசிக்குக் காட்டினார்.

"சார்...வொய்ட் ஹெராயின்..." என பரபரப்புடன் கூறினார்.

"நான் எதிர்பார்த்ததுதான்..." என்ற டி.எஸ்.பி.பிரகாஷின் கையைப் பிடித்தார். கோரமாகப் பார்த்தார்.

நடுங்கிப் போனான் பிரகாஷ்.

(தொடரும்)



டெபாசிட் தொகையைத் தடங்கல் இல்லாமல் திருப்பித் தரக்கூடிய

உங்கள் பணத்தை ஒரு நிதி நிறுவனத்தில் டெபாசிட் செய்யும் போது நீங்கள் என்ன எதிர்பார்க்கிறீர்கள்? அதன்மூலம் ஒரு நிலையான வருமானத்தைப் பெற வேண்டும்; பொருளாதார மாற்றங்கள் அந்த வருமானத்தைப் பாதிக்கக் கூடாது... என்பதுதானே! அந்த வகையில், நீங்கள் டெபாசிட் செய்ய மிகவும் ஏற்ற நிறுவனம் ஸ்ரீராம்தான். காரணம்—

ஸ்ரீராம் லாரிகளுக்கு நிதியுதவி அளிக்கும் பாதுகாப்பான வழிமுறையில் ஈடுபட்டுள்ளது. தவிர, லாரிகளைத் தயாரிக்கும் டெல்கோ, அசோக் லேலண்ட் நிறுவனங்களும் ஸ்ரீராம் நிறுவனங்களில் முதலீடு செய்துள்ளன. லாரிப் போக்குவரத்து ரொக்க அடிப்படையில் நடைபெறும் தொழில். உரிமையாளருக்கு ஒவ்வொரு நிமிடமும் வருமானத்தை ஈட்டிக் கொடுக்கும் சாதனமாக லாரி விளங்குகிறது. எனவே, லாரி உரிமையாளரால் தவணைத் தொகைகளை ஒழுங்காகச் செலுத்திவிட முடிகிறது. அப்படி அவரால் செலுத்த முடியவில்லையா? அந்த லாரியைக் கையகப்படுத்தி விற்பனை செய்து கடனை எளிதில் வசூலித்து விட முடியும்.

இதர நிதி நிறுவனங்கள் ஈடுபட்டிருக்கும் வீடுகள் அல்லது நகைகளின் மீது கடனுதவி அளிக்கும் தொழிலை விட இது எவ்வாறு உயர்வானது?

எந்தவிதமான வருமானத்தையும் பெறாத சொத்துகளின் மீது சில நிதி நிறுவனங்கள் தங்கள் முதலீட்டை முடக்கிவிடுகின்றன. கடன் பெறுகிறவர் திருப்பித் தருவதைப் பொறுத்தே இந்நிறுவனங்களின் நிதிவளம் அமைகிறது. வீடுகளின் மீது கடன் வழங்கும்போது, அந்தச் சொத்தைக் கையகப்படுத்தி உடனடியாக விற்பனை செய்வதும்

ப ண த் தி ன் அ ரு மை தெ ரி ந் த வ ர் க ள் நா ங் க ள். அ தை வி ட,

ஐ மிஸ் யூ

ஆர்த்தி ரொம்ப நாளாக வீட்டுக்கு வரச் சொல்லிக் கொண்டிருக்கிறாள். ஞாயிற்றுக் கிழமை போனால்தான் உண்டு. மற்ற நாட்கள் நேரமிருக்காது. ஞாயிற்றுக் கிழமை சரஸ்வதிக்கு மிகவும் பிடித்த நாள். சோம்பலாக விடியும் வானம். மெதுவாக வாசல் தெளிக்கப்படும் வீடுகள். சுதந்திரமான மனிதர்கள்.

எப்படியும் இன்றாவது ஆர்த்தி வீட்டுக்குக் கிளம்ப வேண்டும். ரொம்ப நாளாயிற்று போய். கடைசியாக தீபாவளியின் போது போனது.

காலையிலேயே சாப்பிட்ட உடனே கிளம்பினாலும் மைலாப்பூரிலிருந்து பெரம்பூருக்கு வர நேரமாகி விட்டது. பெரம்பூரின் நெரிசலான தெருக்களும் நாகரிகம் முழுவதும் தழுவாத மனிதர்களும் தாண்டி நடந்தாள்.

ஆர்த்தி வீட்டு காம்பவுண்ட் அருகே போனதும் தான் பூட்டு கண்ணில் தென்பட்டது. மனசுக்குள் இதுவரை அவள் வீட்டுக்கு வருவதற்காக எடுத்துக் கொண்ட பிரயத்தனங்களும் மெழுகாய்க் கரைய எரிச்சல் வந்தது.

ஒருவேளை அருகில் எங்காவது போயிருக்கக் கூடும். சுற்றுமுற்றும் பார்த்தாள். பக்கத்து வீட்டுக் கதவு திறந்திருந்தது. காலிங்பெல் அடித்து விட்டுக் காத்திருந்தாள். ரொம்ப நேரம் கழித்து முகம் துடைத்தபடி ஒரு முகம் எட்டிப் பார்த்தது.

"யாரு?"

"பக்கத்துல ஆர்த்தி வீட்டுல..."

"சரஸ்வதி... நீயா?"

இப்போது டவல் விலகி முகம் நன்றாகத் தெரிந்தது. பஷீர். இவன் எப்படி இங்கே?

"உள்ளே வா, சரஸ்வதி."

"பஷீர்... எப்படி இங்கே?"

"ஒரு மாசமாச்சு மாத்தி வந்து. எப்டி இருக்கே? அதே சரஸ்வதிதான். ஹைநெக் ப்ளவுஸும் அளவான புன்னகையுமா நான் அன்னிக்கு பார்த்த சரஸ்வதிதான்."

உள்நோக்கிக் குரல் கொடுத்தான். "சர்வத்... இங்க வா."

வெளுவெளுவென்று சின்னப் பெண்ணாய் ஒருமுகம் எட்டிப் பார்த்தது.

"இது சரஸ்வதி. நான் சொல்லல? சின்ன வயசுல நெய்பர்ஸ்."

அவ்வளவுதானா? நெய்பர்ஸ்... அவ்வளவுதானா? அத்தோடு அந்த உறவு முடிந்து போனது. இல்லை. அதற்கும் மேலே. ரம்ஜானுக்கு பிரியாணியும் தீபாவளிக்கு பட்சணங்களும் மாற்றிக் கொண்ட உறவா? இல்லை, கண்ணில் கனவோடு பறந்த காலம். ஹிந்துவும் முஸ்லிமும் கல்யாணம் செய்து கொண்டு சுகவாழ்வு வாழும் கனா கண்ட சமயம்.

பஷீர்தான் முதலில் சொன்னான். சொன்ன போது மனசுக்குள் வெள்ளை தேவதை பறந்தாள். வால்லா பாடினாள். இரண்டு கிளிகள் முத்தமிட்டுக் கொண்டன. டீன்-ஏஜ். டீன்-ஏஜ்.

"ஐ லவ் யூ சரஸ்."

வெட்கம் வந்தது. வீட்டுக்குத் தெரியும் வரை. அப்பா நிதானி. கோபப்படவில்லை. "யோசி சரசு. ஒத்து வருமா? அவன் கறி சாப்பிடறதை நீ ஒத்துப்பியா? உன்னால் சமைக்க முடியுமா?"

"சகிச்சுப்பேன்."

"முடியாது."

"சகித்துப் போதலும் விட்டுக் கொடுத்தலுமே நல்ல வாழ்க்கைக்கு அடையாளம்."

அப்பா வாயடைத்துப் போனார்.



தமயந்தி

"எல்லாம் சரி சரசு. ஆனா... இது மஸ்-ஏஜ். வெறுத்துக் கிடக்கற எல்லாம் பால்னு மனசுல தோணும். உன் காதலை மதிக்கிறேன். ஆனா காத்திரு. அவசரப்படாதே. இந்த இரண்டும்கெட்டான் பருவம் போகட்டும். பிறகு யோசி."

சரியென்றே பட்டது. பஷீர் ஏற்றுக் கொள்ள மறுத்தான். நம் தெய்வீகக் காதலைத் தகப்பன் திசைமாற்றப் பார்க்கிறார் என்று பதினைந்து பக்கத்துக்குக் கடிதமெழுதினான். அப்பாவிடம் காட்ட அப்பா சிரித்தார்.

"பறக்கற வயசு சரஸ்வதி. பறக்கும். இப்படித்தான் பறக்கும். நான் பறந்திருக்கிறேன்."

பறக்கிற வயசு முடிந்ததும் சரஸ்வதி காதலில் திடமானாள். பஷீர் நழுவினான்.

"இது இன்ஃபாசுவேஷனோன்னு பயமாயிருக்கு சரஸ்வதி. இது ஒத்து வருமான்னு தோணுது."

"பிறகு ஐ லவ் யு சொன்னே. லெட்டர் எழுதினே?"

"நிஜம்னு ஆராயும் போது... உன்னால என்னோட பழக்க வழக்கத்தைச் சகிக்க முடியுமா?"

"முடியும்."

"எப்படி முடியும்? உன்னால கறி வாடை தாங்க முடியுமா? அவியும் போது ஒரு வாடை வரும். எனக்கு தேவாமிர்தம். உனக்கு?"

குமட்டிற்று. பஷீருக்காகச் சகித்துக் கொள்ளலாம். நல்ல கல்யாண வாழ்க்கைக்காகச் சகித்துக் கொள்ளலாம்.

"அம்மா ரொம்ப வற்புறுத்தறா சரஸ். துணிஞ்சு குதிக்கவும் பயமாருக்கு. விடவும் மனசில்லை."

"விட்டுரு."

"சரஸ்...!"

"விட்டுட்டா எனக்கும் நிம்மதியாயிரும். நீ என்ன யோசிக்கிறியோ நினைக்கறியோன்னு பதைக்க வேணாம்."

"நான் கோழைங்கறியா?"

"இருக்கலாம்."

"நான் ஏமாத்திட்டேன்னு நெனைக்கிறியா?"

"இல்ல. ஏமாந்துட்டேன் பஷீர்."

வேலை கிடைத்த மறு மாசமே அவனுக்குக் கல்யாணம் நிச்சயமாயிற்று. அவன் அம்மா படியேறி, முகம் மலரப் பத்திரிகை கொடுத்தாள். அம்மா சிரிக்க முயன்று வாங்கிக்





மயிலைத் தொகுதியில் கேட்ட ஜோக் :

''தலைவரே! நாம வட்டுல மூக்குத்தி வச்சுத் தந்தது எதிர்க்கட்சிக்குத் தெரிஞ்சு போச்சு!''

''என்ன செஞ்சாங்க?''

''வீடு வீடா போயி இலவசமா மூக்குக் குத்துறாங்க!''

- வளர்மதி ஆசைத்தம்பி

கொண்டாள்.

"நீயும் வந்திடு சரஸ்வதி. பழசை நினைச்சிட்டு வராம இருந்துடாதே." கஷீர்!

"பொண்ணு யாரு?" அம்மா சகஜமாக்க முயன்றாள்.

"சர்வத்நிலா. நல்ல நிறம். நிறைய தர்றாங்க."

பட்டியலிட்டாள். கோபம் வந்தது. கல்யாணத்துக்குப் போவதைத் தவிர்த்தாள். அப்பா அவள் மனநிலை புரிந்து மைலாப்பூரில் வீடு பார்த்தார்.

அந்த சர்வத்நிலாவா இது? இன்னும் சின்னப் பெண் மாதிரி - சின்னதாகச் சிரித்த படி தலையசைத்தாள். பஷீர் அவசரமாக டவலை மேலே போர்த்திக் கொண்டான்.

"ஆர்த்தி உனக்கு ஃப்ரெண்டா?"

"ம். கலீக்."

"இவிட். எங்கேயோ ஊருக்குப் போறதாச் சொன்னாங்க. சாவி இங்கதான் இருக்கு. வேணுமா?"

"இல்ல. போகணும்."

"காப்பி குடிச்சிட்டுப் போ சரஸ்வதி. காப்பி கொண்டு வா சர்வத்."

திரைச்சீலை விலக சர்வத் மறைந்தாள்.

"அப்புறம்... எப்படி இருக்கே? எங்கே இருக்கே?"

"மைலாப்பூர்தான்."

''ஃபேமிலி....?'' தயங்கினான். கண் தானாகக் கீழ்நோக்கிப் பாய்ந்தது.

"அவர் டைலட் வாரத்துல ரெண்டு தடவை கட்டாயம் வருவார். அது போக சில சமயம்."

"தனியாவா இருக்கே சரஸ்வதி?"

"இல்லே... அம்மா இருக்கா."

"அப்பா...?"

"நோ மோர்..."

"ஸாரி... குழந்தைங்க...?"

"ரெண்டு. ரெண்டும் பொண்ணு. ஒண்ணு ஃபோர்த், அடுத்தது எல்.கே.ஜி."

"எனக்குக் கொடுத்து வைக்கல சரஸ்வதி."

"ஸாரி.. வீடு சொந்த வீடா?"

"ம்ஹூம். போன மாசம்தான் இங்க வந்தோம்."

"உங்கம்மா இல்லையா?"

"இல்ல... சர்வத்துக்கும் அவளுக்கும் ஒத்து வரலை."

"ஸோ... இப்ப எங்கே இருக்காங்க...?"

"ஒரு முதியோர் இல்லத்துல. ஸண்டே போய்ப் பார்ப்பேன். இப்ப கூட கிளம்பிட்டுத் தானிருந்தேன்."

காப்பி நீட்டப்பட்டது. இதமான வெயிலுக்கு லேசான சூட்டில் காப்பி உள்ளே இறங்கியது இதமாக இருந்தது.

"உன் வீட்டுல எப்படி சரஸ்வதி?"

"ஓ! கொடுத்து வச்சவ பஷீர் நான். நல்ல டேஸ்ட். நல்ல குணம். ஐ'ம் லக்கினு சொல்லணும்."

காப்பி கப்பை மேஜை மேல் வைத்த போது பஷீரின் வெறிச்சென்ற பார்வை கண்ணில் பட்டது.

"எனக்குத்தான் திருப்தியில்லை சரஸ்."

"இருக்கறதுல நிம்மதியடையறவனே வாழ்க்கைல சந்தோஷமானவன் பஷீர்."

"நீ லக்கி சரஸ்வதி. ஐ மிஸ் யு."

"பழசை நினைச்சிப் பிரயோஜனமில்லை பஷீர். நீ அப்போ கண்ணை மூடிட்டிருந்தே. ஆனா, நான் அதுக்காகக் கவலைப்படலை. ரொம்பவே நல்லாருக்கிறதுனால அப்படித் தோணலை எனக்கு."

உள்ளே காலடி சப்தம் கேட்டு, பேச்சு நின்றது.

"நான் கிளம்பட்டா பஷீர்?"

"நானும் வர்றேன். ஹோமுக்குப் போகணும்."

டிரஸ் மாற்றி வந்தான். சர்வத்திடம் சொல்லி விட்டுக் கிளம்பினான். பஷீர் ஒன்றுமே பேசாமல் நடந்தான். அந்த மௌனம் அவனையே குத்தித் தின்று கொண்டிருக்கிறது என்பது புரிந்தது. அவனையே விழுங்கும் பேய் மாதிரி.

அவளது பஸ் வந்தது.

"உனக்கு பஸ் வர்ற வரை இருக்கட்டுமா சரஸ்வதி."

"இல்லை பஷீர். நீ போ."

ஞாயிற்றுக் கிழமையின் காலியான பல்லவனில் அவள் ஏறி உட்கார்ந்ததும் பஸ் இரைச்சலாய்க் கிளம்பிற்று. அத்தனை இரைச்சல் மீறி மனசு அலறிற்று-

'எனக்கு இன்னும் கல்யாணமாகலை பஷீர்!'

பஷீருக்கும் தெரியவரும். ஆர்த்தி தற்செயலாகச் சொல்லக்கூடும். "சரசு அம்மாவுக்கு அவ கல்யாணம் கட்டாதது தான் பெரிய கவலை" என்று. அதுவரை அந்தப் பேய் அவனைக் குத்தித் தின்று கொண்டிருக்கும்.

அவனை விழுங்கும் என்று நினைத்த போது சிரிப்பு வந்தது.

உயர் வரிசைகளிலே!

பாம்பே டையிங் பள்ளிச் சீருடைத்துணிகள் அவர்களது எதிர்காலம் போலவே ஒளிமிகுந்தவை.

ஒயிலான உமது சின்னஞ்சிறு "நிபுணர்களுக்கு" மிகச்சிறந்ததே தேவை. எனவே, முன்னைவிடச்சிறந்த பள்ளிச்சீருடைத் துணிவகைகளைத் தருகிறது பாம்பே டையிங்.

- பாலியெஸ்டர் ப்ளெண்டெட் - சுருக்கம் விழாது. குறைந்த பட்ச இஸ்திரியே போதும்.
- நீடிப்பவை - நீடித்துழைக்கும், நிறம் மங்காது
- கடுமையான திசுத்திற்கு மென்மையாக, வசதியாக இருக்கும்.
- எளிதில் துவைக்கலாம்.

உங்களுக்குத் தேவையான அதே நிறத்தில் கிடைக்கும்





பாம்பே டையிங் பள்ளிச் சீருடை அணிவரிசைக்கு உட்பட்டவை:

துணிகள்

தூய பருத்தி மற்றும் பாலியெஸ்டர் ப்ளெண்டுகளில் சூட்டிங்ஸ் மற்றும் ஷர்ட்டிங்ஸ்

ரெடிமேட்கள்

ரெடிமேட் பள்ளிச் சீருடை ஷர்ட்ஸ் மற்றும் டிரௌஸர்ஸ், டைஸ், ஸாக்ஸ் மற்றும் பள்ளி பைகள்

பாம்பே டையிங்
ஸ்தாபிதம் 1879

SEASONS/BD/TH/TAM

"ரேகா! ஏதோ ஒரு விதி எங்க ஃபாமிலில வந்து சிக்கிக் கொண்டு விட்டாய். இதுவரை நடந்ததெல்லாம் மறந்து போய் இன்னும் ஒரு முறை அர்ஜுனுக்கு ஒரு சான்ஸ் கொடுத்துப் பாரேன்!"

23

வண்ணத்துப்பூச்சி வேட்டை

சுஜாதா

என்னை ஒரு அமானுஷ்யமான சக்தி கடலின்பால் ஈர்த்தது. கடல் அலைகள் கைகள் போலவும் அவை என்னை "வா வா! அங்கு என்ன தட்டுக் கெடுகிறது? வா! இங்கே என்னுள் உள்ள ஈரமும் குளிரும் உனக்கு ஆறுதல் தரும் வா பெண்ணே..."

கடலுக்குள் எத்தனை ஆழமிருக்கும்; கடல்நீர் என்ன செய்யும்; அலைகள் உள்ளே வாங்குமா, வெளியே தள்ளுமா? எதுவும் தெரியாது. அப்படியே இன்டர்வ்யூ அறைக்குள் செல்வது போல நடந்து சென்றேன். மார்பளவு தண்ணீர் வந்து சட்டென்று ஆழம் அதிகமாகி உடனே எச்சரிக்கை சக்திகள் மிகுந்து, 'பைத்தியக்காரப் பெண்ணே என்ன காரியம் செய்து விட்டாய்!' என்று தடுப்பதற்குள் வயிற்றுக்குள்ளும் சுவாசப் பைக்குள்ளும் நீர் செல்ல, கையைக் காலை உதறிக் கொண்டு கூச்சலிட ஆரம்பித்தேன். இருமல் வந்தது. மீண்டும் நீருக்குள் அமிழ்ந்தேன். மேலும் நீர் உள்ளே செல்வதைத் தடுக்க முடியாமல் திணறிப் பார்த்தேன். யாரோ சொன்னார்களே ஜலத்தில் விழுந்தால் மூன்று முறை மேலே தள்ளும் என்று. அது கடலுக்கும் உண்டா என்று மனசின் ஓரத்தில் வியந்த போது, கண்ணை இருட்டிக் கொண்டு வந்து நினைவிழந்தேன்.

செத்துப் போவது என்பது இப்படியா இருக்கும். காதில் பல பேர் பேசும் சப்தம் கேட்குமா... போகிற வழியில் தீவிரமான டெட்டால் வாசனை வீசுமா என்ன? கண்ணைத் திறக்க முடியுமா... திறந்தால் அர்ஜுன் தெரிவாரா?

"ஹலோ ஸ்வீட்ஹார்ட்" என்று அர்ஜுன் என்னைக் கன்னத்தில் தட்டினார். கண் விழித்தேன். நான் சாகவில்லை என்பது உறைக்க சற்று நேரமாயிற்று.

என் படுக்கையில் உட்கார்ந்து, "ரேகா ஐ'ம் ஸோ ஹாப்பி. நல்லவேளை விபரீதமா எதுவும் நடக்கறதுக்குள்ளே வந்துட்டோம்... ரகுவை உன்னைத் தொடர்ந்து பார்த்துக்கன்னு அனுப்பிச்சதாலே நீ பிழைச்சே. என்ன ஆய்டுத்து? எதுக்காக இந்த பைத்தியக்காரக் காரியம் செய்தே? உன் உயிரை இழக்க உனக்கு என்ன உரிமை இருக்கு? அது கடவுள் கொடுத்தது. நான் செய்தது தப்புத்தான். அந்தச் சூழ்நிலையை ஒரு நாள் உன்கிட்ட சொல்லத்தான் போறேன். அது இப்ப முக்கியமில்லை. நீ உயிரோட இருக்கறது, மூச்சு விட்டுக் கொண்டு இருப்பதுதான் முக்கியம்" என்றார்.

ஒரு நர்ஸ் வந்து என் ரத்தத்தில் கலக்கப்படும் ஸலைன் திரவத்தைச் சோதித்தாள். தலையை அபாரமாக வலித்தது. அவர் என் கூந்தலை வருடி, "இனிமே இந்த மாதிரி பைத்தியக்காரத்தனமா எதும் செய்ய மாட்டதானே!" என்றார்.

'நீதானே செய்ய வைத்தாய்' என்று சொல்வதற்குப் பதில் வேறு பக்கம் திரும்பிக் கொண்டேன்.

"பர்பஸ்ஸாவே உங்க அப்பா, அம்மாவுக்கு இன்னும் தகவல் சொல்லலை. அவர்கள் பயந்து போய், அதிர்ச்சியில விபரீதமா எதும் செய்துடுவாங்கன்னு பயம். நீ சொஸ்தமாகி வீட்டுக்கு வந்ததும் பேசிக்கலாம்... என்ன?"

நான் பதில் சொல்ல விரும்பவில்லை. இத்தனை ஆன பின்னும் மிச்சமிருக்கும் கசப்பான அந்தக் காட்சி என் மனத்தில் ஆழப் பதிந்திருந்தது.

"என்ன ஏதாவது, பேசு!"

"ரூம் நம்பர் 1112" என்றேன்.

அர்ஜுனின் முகம் இறுகியது. "அதை மறக்க மாட்ட போல இருக்கு!"

நான் தலையசைத்தேன்.



அவர், "டேக் கேர்" என்று சொல்லி விலகினார். எனக்கு சற்றே நிம்மதியாக இருந்தது. முதன் முதலாக அர்ஜுன் என் அருகில் இருப்பதை வெறுத்தேன்.

நர்ஸ் வந்து அந்த அறையில் மலர்களை மாற்றினாள். எதிரே டீவி செட் டில் இரண்டு பேர் விவசாயம் பேசிக் கொண்டிருந்தார்கள். அறையின் பாதிக் கதவைத் தள்ளி, ஒரு பெண் எட்டிப் பார்த்து, ஒரு குட்டிப் பெண் சிரித்தது.

"உன் பேர் என்ன?"

"கவிதா."

"அடுத்த திங்களாழ்ச்சம் இதுக்கு ஆபரேஷன்" என்றாள் சிஸ்டர்.

கவிதா என் அருகில் வந்து சுதந்திரமாக உட்கார, "சிஸ்டர் நான் எப்ப இங்கே வந்தேன்?"

"ரெண்டு திவசம்."

"எப்ப நான் திரும்பப் போகலாம்?"

"டாக்டரைக் கேக்கணும்."

"டாக்டர் எப்ப வருவார்?"

"பந்த்ரெண்டு மணிக்கு."

"இப்ப என்ன மணி?"

"பதினொண்ணு"

என் தலையணையை அவள் சீர்படுத்தும் போது, என் கண்ணீரைத் துடைத்து, "காச்சில் வேண்டா ஏய்! எதுக்கு!" என்று ஆறுதல் தந்தாள். என் தலைமயிர் திரி திரியாக இருந்தது.

டாக்டர் இளைஞராக இருந்தார். "மிஸஸ் அர்ஜுன், யு ஆர் ஆல்ரைட்!"

என் ரத்த அழுத்தம் பார்த்து நாக்கை நீட்டச் சொல்லிக் கண் ரப்பையைப் பிரித்துப் பார்த்து...

"யு ஆர் ஆல்ரைட். லைட்டா சாப்பிடலாம்... பசி இருக்கா?"

தலையசைத்தேன்.

"எத்தனை உப்புத் தண்ணி உள்ள போயிருக்கு. இன்னும் ஒரு நிமிஷம் தாமதமா வந்திருந்தா... நீங்க இறந்திருப்பீங்க. யு ஆர் லக்கி... இனிமே கடல் பக்கமே போகாதீங்க! அலைகளை நம்ப முடியாது. கவிதா நீ உன் ரூமுக்குப் போ!"

நான் சிஸ்டரிடம் கேட்ட போது, தற்செயலாகக் கடல் அலைகளின் அருகில் சென்ற போது, உள்ளே இழுக்கப்பட்டு தத்தளித்ததாகத்தான் அவர்களுக்குத் தகவல் சொல்லியிருக்கிறார் அர்ஜுன் என்பது தெரிய வந்தது.

நான் குழப்பமான எண்ணங்களுடன் படுத்துக் கொண்டேன்.

ஆஸ்பத்திரியிலிருந்த மூன்றாவது தினம் நான் பூரணமான தெம்பு பெற்ற போது இனி என்ன செய்வது என்கிற கேள்வி மீண்டும் எழுந்தது. அர்ஜுன் தினம் மலர்க் கொத்துடன் வந்து கொஞ்ச நேரம் பேசி விட்டுப் போவார். நான் மௌனமாக கேட்டுக் கொண்டிருப்பேன். அந்தச் சம்பவத்தைப் பற்றி எதுவும் பேசவில்லை. மாமனாரும் மாமியாரும் வந்த போது கூட எலக்ஷன், எங்கள் வீட்டருகில் ஸோடியம் விளக்குகள் போட்டது போன்ற விஷயங்கள்தான் பேசினார்கள். ஒருவரும் அந்த விபத்தைப் பற்றிய பேச்சு எடுக்கவில்லை. ஒருநாள் காயத்ரி வந்து பார்த்தபோது, நானே அந்தப் பேச்சை எடுத்தேன்.

"காயத்ரி நான் ஏன் அந்த மாதிரி செய்தேன்னு அர்ஜுன் சொன்னாரா?"

"சொன்னான்."

"அவ யாரு?"

காயத்ரி யோசித்து, "ரேகா நான் உண்மையைச் சொன்னா அதைத் தாங்கிக்க மனோபலம் இருக்கா உனக்கு?"

"உண்மை எனக்குத் தெரியுமே காயத்ரி."

"உனக்குத் தெரிஞ்சதுக்கு மேலே கொஞ்சம் இருக்கு. நான் இதை அர்ஜுனோடஅனுமதியோடதான் உனக்குச் சொல்றேன். இப்ப வேண்டாம்னா அப்புறம் தக்க சமயத்தில சொல்றேன். ஆனா உனக்குத் தெரிஞ்சாகணும் அர்ஜுனுடைய மனைவி என்கிற உரிமையிலே..."

"என்ன சொல்றீங்க?"

"அந்தப் பொண்ணு, ஓட்டல்ல பார்த்தே இல்லை?"

"ஆமாம்."

"அவளோட அர்ஜுனனுக்கு கல்யாணத்துக்கு முன்னாடியே சினேகிதம் இருந்திருக்கு. அவன் யாரைக் கல்யாணம் செய்துக்கறதுன்னு திணறிக் கொண்டு இருந்தான். சீதாவை செய்துக்கறதா பேச்சு அடிபட்டது. கொஞ்ச காலம். அதற்கப்புறம் இந்த ரஞ்சனி.

"எல்லாத்தையும் கல்யாணத்துக்கு அப்புறம் நிறுத்திட்டதா என்கிட்ட சத்தியம் அடிச்சுச் சொன்னான். இந்த ரஞ்சனியை இன்னும் விடலைன்னு தெரிஞ்சது. இப்ப நான் அவன்கிட்ட பளிச்சுன்னு சொல்லிட்டேன். ரேகா உன்னை விட்டுப் போய்டுவா! ரேகா மாதிரி ஒரு ஜெம் இருக்க முடியாது. அவளை இழக்காதே. உடனடியா ரஞ்சனியை கட் பண்ணிடுன்னு... ஆமாம் நீ அன்னிக்கு என்ன பார்த்தே. ரஞ்சனி கூட பேசிண்டிருந்ததைப் பார்த்தியாமே, அதுக்கு இத்தனை கோவமா?"

"படுக்கைல படுத்துண்டு பேசிக்கிட்டு இருந்தாங்க!"

"ஓ! ஸாரி." காயத்ரி நாக்கை கடித்துக் கொண்டாள்.

"காயத்ரி நான் ஒண்ணு கேக்கலாமா?"

"கேளு."

"இதெல்லாம் என்கிட்ட முன்னாலேயே கல்யாணம் ஆறதுக்கு முன்னாடியே சொல்ல வேண்டாமா?"

"சொன்னா நீ கல்யாணம் பண்ணிக்க மாட்டியே!"

"அதுக்காக? பொய்... கண்டுபிடிக்காத வரைக்கும் பொய் சொல்லலாமா? பொய்யா வாழலாமா?"

காயத்ரி என் கையைப் பிடித்து, "ரேகா நான் அர்ஜுன் செய்ததை ஏதும் நியாயப் படுத்தறதா நினைக்காதே. அவன் செய்ததுக்கு ஜஸ்டிபிக்கேஷனே கிடையாது. ஏதோ ஒரு விதி எங்க ஃபாமிலில வந்து சிக்கிக் கொண்டு விட்டாய். இதுவரை நடந்ததெல்லாம் மறந்து போய் இன்னும் ஒரு முறை அர்ஜுனுக்கு ஒரு சான்ஸ் கொடுத்துப் பாரேன்!"

நான் தலையசைத்தேன்.

"ரொம்ப அடிபட்டுட்டேன் காயத்ரி."

"தெரியறது... இப்ப என்ன செய்யணும் சொல்லு, அந்த காயம் ஆர்றதுக்கு?"

"கொஞ்ச நாளைக்கு அர்ஜுனனைப் பார்க்க விரும்பலை நான். எனக்கு ரெயில் டிக்கெட் வாங்கி டில்லிக்கு அனுப்பிடச் சொல்லு. அப்பா அம்மாகிட்ட நடந்தது எதையும் சொல்ல வேண்டாம். எனக்குத்



"என் வீட்டுக்கு வந்த திருடன் மனிதாபிமானம் உள்ளவன்..."

"எப்படிச் சொல்றீங்க...?"

"என்னைக் கட்டிப் போடும்போது 'வலிச்சா சொல்லு'ன்னு சொல்லிக்கிட்டே கட்டிப் போட்டான்!"

- பிரபு

தனியா யோசிக்க அவகாசம் வேணும்."

அவள் யோசித்து, "சரி அர்ஜுன்கிட்ட சொல்லிப் பார்க்கறேன்."

"சொல்லிப் பார்க்கறதில்லை. சொன்னது நடக்கணும். நான் இங்கே ஆஸ்பத்திரியில இருந்து டிஸ்சார்ஜ் ஆன உடனே நேரே ரயில்ல ஏற்றி விடச் சொல்லிடு."

"சரி இப்பவே போன் பண்ணிச் சொல்லிடறேன். நீ கேக்கறது நியாயம்தான். உன் உணர்ச்சிகளை என்னால முழுக்க புரிஞ்சுக்க முடியறது ரேகா. என்னை ஒரு ஃப்ரெண்டாவே நினைச்சுக்க."

காயத்ரி எப்படிப்பட்ட ஃப்ரெண்ட் என்பது அப்புறம்தான் புரிந்தது.

அர்ஜுன் எனக்கு டில்லி போவதற்கு ரயில் டிக்கெட் வாங்கி நேராக ஆஸ்பத்திரியிலிருந்தே ரயில் ஏறும்படி ஏற்பாடு செய்திருந்தார். என் துணிமணிகளை ஒழுங்காகப் பெட்டியில் அடுக்கிக் கொண்டு வந்து கொடுத்தாள். நான் அர்ஜுனைப் பார்க்க விரும்பவில்லை. அவன்தான் ரயிலேற்ற வந்திருந்தான். எனக்குக் கணகாம்பரம் எல்லாம் வாங்கிக் கொடுத்தாள். ரயில் புறப்பட இருந்த சமயம் அர்ஜுன் வேகமாக ஓடி வந்தார்.

"என்ன அர்ஜுன்?" என்று காயத்ரி விசாரிக்க, அர்ஜுன் என்னிடம் தந்தி ஒன்றைக் காண்பித்தார்.

CANCEL TRIP WE ARE COMING TO MADRAS

— FATHER

என்று தந்தி வந்திருந்தது.

அப்பா ஏதோ கன்ஸல்டன்சி விஷயமாக இங்கே வருகிறாராம். அம்மாவும் வருகிறாளாம்.

நான் காயத்ரியிடம், "என்ன செய்வது?" என்றேன்.

"அவர்கள் வரும் வரைக்கும் அவர்கள் இருக்கும் வரை நீ வீட்டுக்கு வந்துதான் ஆக வேண்டும். ஆஸ்பத்திரியில் பார்த்தால் கலவரப்படுவார்கள். வீட்டில் இல்லையென்றால் சந்தேகப்படுவார்கள். வருத்தப்படுவார்கள்."

நான் வேறு வழியின்றி எந்த வீட்டில் இனி காலடி எடுத்து வைக்க மாட்டேன் என்று மனசுக்குள் தீர்மானித்திருந்தேனோ அந்த வீட்டிற்குத் திரும்பச் சென்றேன்.

நடக்கப் போவது என்ன விபரீதம் என்று தெரியாது.

(தொடரும்)


கலையழகு தகு
ஜப்பானியக் கே




• ஸான்ஷின் ஸ்யோஜி கோயில்...

ஜப்பானியர்களின் உழைப்பும் சுறுசுறுப்பும்தான் நம்மை பிரமிக்க வைக்கிறது என்பதில்லை; அவர்களுடைய கோயில்களில் நிலவும் அழகும் அமைதியும் திகைக்க வைப்பதோடு பேரானந்தத்தையும் தருவதாக இருக்கிறது என்கிறார், அண்மையில் ஜப்பானுக்குச் சுற்றுலா சென்று வந்த ஆனந்தி...

• ஸான் ஜூ
கோயிலின் உ



• நிக்கோ கோயில்...





மிகப் பெரிய புத்தர்



ம்பும்
ாவில்கள்!

ஜெண்டே
ா...







• இங்குஜி கோயில்...

கோவில்கள் என்றால் ஜப்பான் நாட்டில் பார்க்க வேண்டும். அடாடா! ஒவ்வொரு கோவிலும் பசுமையும் அமைதியும் மிக்க, இயற்கையோடு இயைந்த சூழ்நிலையில் கட்டப்பட்டு மனத்தைக் கொள்ளை கொள்கின்றது. நரிடா நகரிலுள்ள ஷான்ஷின் ஸ்யோஜி கோவிலைச் சுற்றிக் குளுமையான தோப்பு. படிகளில் ஏறிச் சென்றால் நீரூற்றுக்கள் நீரை இறைத்து நடனமாடுகின்றன. இருபுறமும் ஒரே சீராக வெட்டப்பட்ட மரங்கள். சுத்தமும் துப்புரவும் பார்த்தால், 'மனித நடமாட்டம் உள்ள இடந்தானா?' என்று சந்தேகம்

எழுகிறது! ஒரு பெண்மணி கைப்பிடிகளை யெல்லாம் துடைத்துக் கொண்டிருக்கிறார். மண்டபம் ஒன்றில் ஒரு பெரிய பாத்திரத்தில் தணல் கனல்கிறது. கோவிலுக்கு வருவோர் அதில் ஊதுபத்திகளைப் போட்டு விட்டு அந்தப் புகை தம் முகத்தில் படும் வண்ணம் விசிறிக் கொள்கிறார்கள்.

கருவறை மிகப் பெரிது. விக்ரகமும் பெரிது தான். நல்ல வெளிச்சமாக இருக்கிறது. மூலவருக்கு ஃப்யூடோ (Fudo) என்று பெயர். வலது கையில் நீண்டவாளும் இடது கையில் சுருட்டி வைத்த மணிக்கயிறுமாகக் காட்சி யளிக்கிறார். வருகிறவர்கள் உட்கார கயிறு கட்டி இடம் ஒதுக்கியிருக்கிறார்கள். அங்கே நமஸ்காரம் செய்கிறார்கள். ஜப்பானியக் குரு மார்கள் அக்னி வளர்த்து ஹோமம் செய் கிறார்கள். மந்திரங்கள் ஓதிக் கொண்டே ஆகுதி செய் வதைப் பார்த்தால் ஒரு ஹிந்து சடங்கு போலத் தோன்றுகிறது. சுற்றியுள்ள தெய்வச் சிலைகளின் கைகளில் பல விதமான முத்தி ரைகள். நரிடா ஸான்ஷின் ஸ்யோஜி, தந்திர சாஸ்திரத்தைப் பின்பற்றும் கோவில் என் கிறார்கள்.

ஜப்பானியர்களுக்குக் குறி பார்ப்பதில் ஆர்வம் அதிகம். எல்லாக் கோவில்களிலும் குறி சொல்லும் இடம் உண்டு. பிராகாரத்தில் உள்ள பெட்டியில் காசு போட்டால், ஒருவர் ஒரு காகிதத்தை எடுத்துத் தருகிறார். அதில் ஜப்பானிய எழுத்துக்கள் கலையழகு மிளிர சித்திரங்கள் போல இருக்கின்றன. அதைப் படித்துவிட்டு "பிரயாணம் நன்றாக அமை யும்" என்று கூறினார்கள். நம்மைப் பார்த்தால் தான் "டூரிஸ்ட்" என்று முகத்தில் ஒட்டியிருக் கிறதே!


கோவில் பிராகாரத்தில் வலம் வரும் போது பின்பக்கத்தில் மிக அழகான காட்சி. ஒரு சிறிய சரிவு. அதில் பல தெய்வ விக்ரகங் கள். கோவில் திருப்பணிக்கு உதவியவர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட கற்கள் ஒரு பக்கம். ஒரு சிறிய ஓடை. அதில் ஒரு மரப் பாலம். எல்லாமே தூய்மை கெடாமல் அப் பழுக்கு இல்லாமல்!

நிக்கோ, டொ ஷோகு கோயில்

"நிக்கோ கோவிலைப் பார்ப்பதற்கு முன் எதையும் 'அழகாக இருக்கிறது' என்று சொல் லாதே" என்று ஜப்பானில் ஒரு பழமொழி. இது எவ்வளவு உண்மையான வார்த்தை என்பது நிக்கோவைப் பார்த்தால்தான் தெரி யும். இது ஜப்பானியருடைய பொக்கிஷம் மட்டுமல்ல. உலகத்துக்கே ஒரு கலைப் பொக் கிஷம். கடல் மட்டத்திலிருந்து 640 மீட்டர் உயரத்தில் கட்டப்பட்டிருக்கும் இந்தக் கோவி லும் சுற்றியுள்ள சிறிய கோவில்களும் 17-18 ஆம் நூற்றாண்டுகளில் கட்டப்பட்டனவாம். பதினாறாவது நூற்றாண்டில் ஜப்பானை அரசாண்டவர் இயேயாசு டோகுகவா என்ற வலிமையும், மதிநுட்பமும் கொண்ட மாமனிதர். உள்நாட்டுக் கலகங்களை அடக்கி, பூசலிட்டுக் கொண்டிருந்த குறுநில மன்னர்களைத் தம் ஆட்சியின் கீழ் கொண்டு வந்து, நாட்டில் ஒற்றுமையும் அமைதியும் நிலவச் செய்த அரசர் இவர். ஜப்பானிய ருடைய கலாசார வளர்ச்சி, இவர் காலத்தில் தொடங்கி மேம்பாடடைந்தது.

இயேயாசு மன்னர் மறைந்ததும் அவ ருடைய மகன் ஹிடே தடா டொகுகவா இந்தக் கோவிலைத் தன் தந்தையின் ஞாப கார்த்தமாகக் கட்டினார். இவருடைய பேரன் காலத்தில் கோவில் இன்னும் விரிவடைந்தது. மிகச் சிறந்த கலைஞர்களையும், சிற்பிகளை யும், தச்சர்களையும் வரவழைத்து, இந்தக் கனவுலகத்தைத் தோற்றுவித்தார், நாலரை லட்சம் கலைஞர்களும், ஆட்களும் பதினேழு மாதங்கள் இடைவிடாது வேலை செய்ததாக வரலாறு கூறுகிறது. இங்கே உள்ள ஒவ்வொரு சிலையும், பாலமும், பிராகாரச் சுவரும், ஓவியமும் 'தேசியக் கலைப் பொக்கிஷம்' என்று ஜப்பானிய அரசாங்கம் அறி வித்திருக்கிறது. பிராகாரச் சுவர்களில் உள்ள சிற்பங்களைக் காப்பாற்றக் கண்ணாடி ஃப்ரேம் போட்டிருக்கிறார்கள்!

குளிரு குளுவென்ற மலைக் காற்று. யோமீமான் வாசலை அடையும்போது இதைப் பாக இருக்கிறது. நிக்கோவிலேயே மிக அழ



"சார்! ஒரு பத்து ரூபாய் இருந்தா கைமாத்தா தர முடியுமா?"

"நீங்க யாருன்னே எனக்குத் தெரியாதே சார்! அதனாலதான் கொடுக்கத் தயக்கமா இருக்கு."

"எனக்குக் கூடத்தான் நீங்க யாருன்னே தெரியாது. அதுக்காகக் கேட்கத் தயங்கினேனா, என்ன?"

- பாலு

கான வாசல் இது. 'யோமீமான்' என்றால் கதிரொளி வாசல் என்று பொருள். இதை எதனால் கட்டியிருக்கிறார்கள்? மரமா? மண்ணா? கல்லா? அல்லது அப்படியே இச்சா சக்தியால் கட்டப்பட்டதா? எத்தனை நகாசு வேலைகள்? எத்தனை வண்ணங்கள்? எத்தனை யாளி சிற்பங்கள்? கீழேயிருந்து பார்த்து வியந்து விட்டுப் படிகளில் ஏறிப் போகிறோம். வாசலில் இருபுறமும் இரு வீரர்கள் அமர்ந்து காவல் காக்கிறார்கள். துவார பாலகர்கள் இங்கேயும் உண்டு.

வாசலைக் கடந்து உள்ளே சென்றால் இடதுபுறம் ஐந்தடுக்குள்ள ஸ்தூபம். முற்றத்தில் வரிசை வரிசையாகக் கல்லினாலும் உலோகத்தாலும் செய்து வைத்த தீபஸ்தம்பங்கள். விளக்குதான் எல்லா தேசத்திலும் முக்கியமாக இருக்கிறது. விழாக்காலங்களில் இரவு நேரத்தில் இத்தனை விளக்குகளையும் ஏற்றினால் இந்த இடம் கந்தர்வ லோகமாகவே மாறிவிடும் என்று தோன்றியது.


அடுத்த வாசலைக் கடந்தால் இரண்டு தேவ ராஜர்களின் செக்கச் செவேல் என்ற சிலைகள். நடக்க நடக்க போய்க் கொண்டே இருக்கிறோம். சித்திர விசித்திர வேலைப் பாடுகள் நிறைந்த பிராகாரங்களையும் அறைகளையும் கடந்து ஒரு பெரிய அறையை அடைகிறோம். இங்கேதான் இயேயாசுவின் ஆன்மா குடி கொண்டிருப்பதாக ஐதிகம்.

இன்னொரு இடத்தில் மேலே விதானத்தில் ஒரு யாளியின் ஓவியம் வரையப்பட்டிருக்கிறது. அங்கே நமது கைகளில் இரண்டு கட்டைகளைத் தருகிறார்கள். யாளியின் முகம் இருக்குமிடத்தில் நின்று கட்டையைத் தட்டினால் எதிரொலி கேட்கிறது. இரண்டடி தள்ளி நின்று தட்டினால் கேட்கவில்லை. ஜப்பானியர் இந்த யாளி பதில் சொல்வதாக நம்புகிறார்கள்.

கோவிலில் பல்லக்குகள் இருக்கின்றன. திருவிழா உலா உண்டு. திருவிழாக்காலங்களில் பல்லக்கில் பவனி உண்டு. மே மாதத்திலும் அக்டோபர் மாதத்திலும் ஊர்வலங்கள் நடக்குமாம். பழைமையான சம்பிரதாயங்களை அப்படியே கடைப்பிடிக்கிறார்கள்.

டை புட்ஸு டென், நாரா.

நாரா என்ற அழகு மிகுந்த ஊருக்கருகே மலைச் சரிவில் பல கோவில்கள் அமைந்துள்ளன. உலகத்திலேயே மிகப் பெரிய புத்தர் சிலை உள்ள கோவில் இங்குதான். டை என்றால் பெரிய; புட்ஸு என்றால் புத்தர் பெருமான். புத்தர் சிலையின் உயரம் 49 அடி.



"இந்த மாதிரி என் மனைவி இன்ஸல்ட் பண்ணுவான்னு தெரிஞ்சிருந்தா, வீட்டோடு மாப்பிள்ளையா போக நான் சம்மதிச்சிருக்கவே மாட்டேன்."

"என்ன சார் ஆச்சு?"

"காலையில, என்ன சமைக்கணும்னு கேட்டதுக்கு, எங்க அம்மாவைக் கேட்டுக்கங்கன்னு சொல்றாளே!"

- சீர்காழி வி. ரேவதி

முகத்தின் அகலம் சுமார் 10 அடி. கண்களின் நீளம் சுமார் 3 அடி. சிலையின் பரிமாணத்தைக் கற்பனை செய்து கொள்ள முடிகிறதா? புத்தர் பெருமான் அமர்ந்திருக்கும் தாமரையின் இதழ் பத்தடி உயரம். இவ்வளவு பெரிய சிலையில் அபய ஹஸ்தம் இயல்பாக இருப்பது ரொம்ப ஆச்சரியம். இந்தக் கோவில் எட்டாம் நூற்றாண்டில் ஷோமு என்ற பேரரசர் காலத்தில் கட்டப்பட்டதாம். இரண்டு தடவை எரிந்து போன இந்தக் கோவில் 17 ஆம் நூற்றாண்டில் திரும்பவும் கட்டப்பட்டிருக்கிறது. இந்த புத்தருடைய அனுக்ரகத்தால் எல்லா உயிர்களும் படிப்படியாகத் தெய்வ நிலைக்கு உயரும் என்று நம்புகிறார்கள். எல்லோரும் பேரொளியில் ஒன்றிக் கலப்பதற்குத் தாமரை மீது வீற்றிருக்கும் ஞானப் பேரொளியான புத்த பகவான் வழி காட்டுகிறார். தாமரை பத்ம லோகத்தைக் குறிக்கிறது. சேற்றிலிருந்து செந்தாமரை விடுபட்டு மேலெழும்பி கதிரவனின் ஜோதியைக் காண்கிறது அல்லவா?

ஆண்டுக்கொரு முறை இந்தச் சிலையைச் சுத்தம் செய்வதை ஒரு வழிபாடாகவே செய்கிறார்கள். பத்து பக்கெட் தூசி அகற்றப் படுமாம். புத்தாண்டு தினத்தன்றும் திருவிளக்குத் திருவிழாவின் போதும் இந்தப் பெரிய கோவில் ஜோதிமயமாகத் திகழும். அந்தச் சமயத்தில் ஒரு ஜன்னல் வழியாக புத்த பெருமானின் திருமுக மண்டலத்தை மட்டும் தரிசிக்கலாம்!

ஹொக்கேஜி கோவில் :

நாரா நகரத்தில் இன்னொரு சிறிய

கோவில் இருக்கிறது. இந்தக் கோவிலில் உள்ள தெய்வச்சிலையைச் செய்த மகா சிற்பி இந்தியாவிலிருந்து வரவழைக் கப்பட்டவர். ஒரு சிலை, ஒரே சந்தனக் கட்டையில் செதுக் கப்பட்டிருக்கிறது. ஜப்பானிலேயே மிகச் சிறந்த மரச் சிற்பம் இதுதான் என்று கருதப் படுகிறது. தாமரை மலரில் உள்ள நடுப் பாகத்தின் மீது நிற்கின்ற நிலையில் இந்த சிற்பம் பெண்மையின் நளினத்துக்கே எடுத் துக்காட்டாக இருக்கிறது. முகத்தில் சிறிய புன்னகை. பின் பக்கத்தில் பல தாமரை இலைகள் திருவாசி போல விரிந்திருக் கின்றன. தலையின் மீது கூர்ந்து கவனித்தால் பதினோரு முகங்கள் இருப்பதைக் காணலாம்.

இந்தக் கோயிலைக் கட்டிய பேரரசி சோம்யோ, ஏழை எளியோரிடம் கருணையுள்ளம் கொண்டவள். இந்த எளிமை யான கோவிலின் பின் பக்கம் ஒரு பெரிய தோட்டம். பச்சைப் பசேல் என்ற மூங்கில் களும், குளமும் "ஓம் சாந்தி! ஓம் சாந்தி!" என்று மௌன ஜபம் செய்வது போல உள்ளன.

ஸான் ஜூ ஸான் ஜெண்டோ

கியோட்டோ நகரத்தில் உள்ள அவ லோகிதேச்வரர் கோவிலைப் பார்க்கப் பார்க்கப் பரவசமாகும். இது ஒரு நீண்ட கூடம். 1001 போதிசத்வர் சிலைகள் இங்கே இருக்கின்றன. ஒவ்வொரு சிலையின் சிரத் திலும் பத்து முகங்கள் இருக்கின்றன. ஒவ் வொரு சிலைக்கும் 40 கரங்கள். ஒவ்வொரு கரமும் இருபத்தைந்து உலகங்களைக் காப்ப தாக ஐதீகம். இந்தச் சிலைகள் மரத்தினால் செய்யப்பட்டு வண்ணம் பூசப்பட்டுப் பிறகு தங்க முலாம் பூசப்பட்டிருக்கின்றன. அவ லோகிதேச்வரர் தன்னை 33 வடிவங்களாக மறைத்துக் கொண்டு மனித குலத்தைக் காக் கிறார். அதனால் 33 மிகவும் முக்கியமான எண். 1001 சிலைகளும் 33,033 போதிசத்வராகப் பாவிக்கப்பட்டு வழிபடப் பெறுகின்றன.

இங்குஜி கோவில்

கடைசியாக தங்கக் கோவில் ஒன்றையும் தரிசிக்கலாம். ஜப்பானிய நகரங்களில் வர லாற்றுச் சிறப்பு மிக்க நகரம் கியோட்டோ. எப்போதும் சுற்றுலாப் பயணிகளின் கூட்டம். கியோட்டோவில் ஒரு மலைச்சாரலில் தண்ணீர் வாவியின் அருகில் அமைந்திருக் கிறது இந்தக் கோவில். உள்ளே போகவே வேண்டாம். கோவிலையும், நீரில் பிரதி பலிக்கும் அதன் தோற்றத்தையும் அந்தி மயங் கும் மாலைவேளையில் பார்த்துக் கொண்டிருந்தாலே போதும்! மூச்சுவிடக் கூட மறந்து விடுவோம்! அத்தனை அழகு!

கோவிலின் பின் பக்கம் மலைச் சரிவில் மூங்கில் காடுகள், பாலங்கள். இவற்றின் வழி யாகச் செல்லும் நடைபாதை. அதில் காலாற நடந்து, இங்குஜி கோவிலைப் பிரதக்ஷிணம் செய்து விட்டு வியப்பு, மகிழ்ச்சி, ஆதங்கம், மரியாதை முதலிய பல உணர்ச்சிகள் மனத் தில் கொந்தளிக்க ஜப்பானியரிடமிருந்தும் அவர்களுடைய கடவுளரிடமிருந்தும் விடை பெறுகிறோம்.

போலீஸ் 1 : நீ அந்தப் பக்கமா போய்ப் பாரு; நான் இந்தப் பக்கத்துல போய் தேடறேன்..."

போலீஸ் 2 : உன் கையில அவன் மாட்டிக்கிட்டா, நீ எனக்குத் தெரியாமல் மாமூல் வங்கிட மாட்டியே...?"

- சீர்காழி வி. ரேவதி





"நான் சிகரெட் பிடித்துக் கொண்டே எங்க அப்பா கூடப் பேசினேன்."

"கதையா விடுறே! அவ்வளவு துணிச்சலா?"

"இதுக்குப் போய் எதுக்குத் துணிச்சல்? போன்லேதானே பேசினேன்!"

- என். இளந்தமிழன்



AKSHAR SS!/9412 0



ஷாக்

யோகி

தமது டி.வி.எஸ். ஃபிப்டியில் இருந்து இறங்கினார் எஸ்.ஐ. சந்திரன். அவருக்குப் பின்னே இரண்டு ஏட்டுகள் சைக்கிளில் வந்தனர். முதலில் வந்த ஏட்டு தன் லத்தியால், 'யோவ் ஒதுங்குங்கய்யா... அய்யா வர்றாரு... எஸ்.ஐ.அய்யா வர்றாரு..' என்றவாறு முன்னே நடந்தார்.

போலீஸைப் பார்த்ததும், அந்த வீட்டின் முன் நின்றவர்களுக்கு அதிர்ச்சி.

'ஏய்யா... போலீஸ்க்குச் சொல்லாமலே சுடுகாட்டுக்குப் பொணத்தைக் கொண்டு போகணும்னு பார்த்தீங்களா..? நாளைக்கு உங்களுக்குத் தான்யா பிரச்னை ஏற்படும்.'' என்றார் எஸ்.ஐ., அங்கிருந்த ஒரு பெரியவரைப் பார்த்து.

வீட்டிற்கு முன் சரியான கூட்டம். பந்தல் போட்டுக் கொண்டு இருந்தனர்.

''யோவ் பந்தல் எல்லாம் வேணாம்! நாங்க பாடிய பெரிய ஆஸ்பத்திரிக்கு இப்ப கொண்டு போய்விடுவோம். கொண்டுபோன பாடிய வீட்டிற்கு எடுத்து வரப் படாது...'' என்றார் எஸ்.ஐ.

மூக்கை குப் என்று அடித்தது சாராய நாற்றம். நாலைந்து பேர் தண்ணியடித்து இருந்தனர்.

''யோவ் எஸ்.ஐ. கேட்டதுக்கு பதில் சொல்லுப்பா.. ஷாக் அடிச்ச செத்துப் போய் இருக்கு அந்தப் பொண்ணு.. நீங்க, புகார் கொடுக்காம, போலீசுக்கு தெரியப்படுத்தாம இருந்தீங்கன்னா என்னப்பா அர்த்தம்?'' ஏட்டு கேட்டுக் கொண்டிருந்தார்.

''இல்ல சாமி... அது பச்சைப் புள்ள... ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனா, அத நார் நாராக் கிழிச்சு எறிஞ்சிடுவாங்களே சாமி! சாகற வயசா சாமி அதுக்கு?'' என்று ஒரு பெரியவர் கண்ணைத் துடைத்துக் கொண்டே, 'உள்ளப் போய் பாருங்க சாமி- அந்தப் புள்ளைய... ஸ்டூல்ல சாஞ்சிட்டு தூங்கறமாதிரிதான் இருக்கே ஒழிய - செத்த மாதிரி இல்ல சாமி... உங்க கையில கொடுத்தா கூறுப் போட்டுலசாமி கொடுப்பீங்க?''

''சட்டப்படி நாங்க என்ன செய்யணுமோ - அதைத் தான் செய்யறோம்...'' என்றார் எஸ்.ஐ. 'வழிய விடுங்க... வழிய விடுங்க...' என்று வராண்டாவை தாண்டி வீட்டிற்குள் போக நினைத்தார். கூட்டம் அவரை உள்ளே போகவிடாது தடுத்தது. உள்ளே பெண்கள்

அழுதவண்ணம் இருந்தனர்.

வெளியே எவனோ ஒருவன் கத்தினான்.

"எவன்டா அது போலீஸ்...? எம் மருமகள ஆஸ்பத்திரிக்கு கொண்டு போய் கூறுபோட பார்க்கிறீங்களா? டேய்..." என்று கெட்ட வார்த்தை சொன்னான்.

எஸ்.ஐ. திரும்பிப் பார்த்தார். தன் வேஷ்டி அவிழ்ந்ததைக் கூட அறியாமல் அவன் இருந்தான். அவரும் பல இடங்களில் பார்த்து விட்டார், எழவு விழுந்த வீட்டில் சாராயம் குடித்து விட்டு கும்மாளம் அடிக்கவே ஒரு கோஷ்டி இருப்பதை. தனக்கு இன்று காலையில் இருந்தே நேரம் சரியில்லை என்று எண்ணிக் கொண்டார். காலையில் மனைவி, மகளிடம் சண்டை. முந்தின நாள் இரவு சந்தேகக் கேஸில் ஒருவனைப் பிடித்து வைக்க, அவன் ஆளுங்கட்சியின் தொண்டனாம். மாவட்ட இளைஞர் அணியிடம் இருந்து டோஸ். இப்போது இரண்டு மணிக்கு - ஒரு பெண் ஷாக் அடிச்சு செத்துப் போய் இருக்கு - போலீஸுக்கு புகார் கொடுக்காமல் எடுக்கப் போறாங்க என்று தகவல்.

வந்தாயிற்று. இந்த மாதிரி இழவு வீட்டிற்கு வருவதே பெரிய இம்சை... ஆளுக் கொன்றாய்ப் பேசுவார்கள். இப்போது கூட பிணத்தை எடுக்க விடாமல், போஸ்ட் மார்ட்டத்திற்கு அனுப்ப விடாமல் தடுக்கிறார்கள்.

கூட்டத்தை விலக்கிக் கொண்டு பிணத்தின் அருகே செல்ல எஸ்.ஐ. முயன்ற போது - பின்னால் ஏட்டு வந்து எஸ்.ஐயின் முதுகைச் சுரண்டி வெளியே இழுத்து வந்தார்.

"என்னைய்யா ஏட்டு...?"

அதற்குள் கூட்டம் ஏட்டையும், எஸ்.ஐ.யையும் சுற்றிக் கொண்டது. ஏட்டு எஸ்.ஐ.யின் அருகே போய்க் கிசுகிசுத்தார்... "பெரிய ஆஸ்பத்திரிக்கு பாடிய கொண்டு போகாம செய்தா - பணம் தர்றேன்னு சொல்றாங்க சார்!"

எஸ்.ஐ.யின் முகம் சிவந்தது.

"எவன்யா அது அப்படிப் பேசினது? பணம் தர்றேன்னு...? எல்லாம் ரூல்ஸ்படி தான்யா நடக்கும்!"

"சாமி அது பச்சைப் புள்ள... உங்க கையில கொடுத்தா அதை நார் நாரா கிழிச்சி..." என்று மறுபடி ஆரம்பித்தார் ஒரு பெரியவர்.

"என்னய்யா சொன்னதையே சொல்லிட்டு இருக்கே? செத்துப் போனவளத்தானே நார் நாராகக் கிழிக்கிறோம்? உசுரோட இருக்கிறவளைச் செய்யலயே? பொணம் வாய் திறந்து வலிக்குதுன்னு சொல்லப் போகுதா...? போஸ்ட்மார்ட்டத்திற்குக் கொண்டு போய்த்தான் ஆகணும்!"

"யோவ் போலீஸ்... மரியாதையா பேசு..." என்றது ஒரு குரல்.

"டேய் சும்மா இருடா... அய்யாகிட்ட நா பேசுவேன்..." என்ற இன்னொருவர் எஸ்.ஐ.யின் அருகே வந்து, "சாமி... க்ரைம் பிராஞ்ச்ல கோதண்டம்னு ஒருத்தர் இருக்கார்... நம்ம சொந்தக்காரர்தான். அவரை வரச் சொல்லி இருக்கோம்... அவரை வைச்சு பேசுவோம்..." என்றார்.

"பேச என்னய்யா இருக்கு? எங்களுக்கு இது மாதிரி ஒரு பதினாறு வயசுப் பொம்பளைப் புள்ள கரண்ட் அடிச்சு செத்து இருக்குன்னு தகவல் வந்து இருக்கு... இது இயற்கைக்கு மாறான மரணம். அது கரண்ட் அடிச்சுதான் செத்ததா - இல்ல எவனும் வலுக்கட்டாயமா அந்தப் புள்ள கையை கரண்ட்ல கொடுத்தானான்னு யாருக்குத் தெரியும்... அதனால எங்க கடமைய நாங்க செய்யணும்... புரியுதா... நீ சொன்னதைக் கேட்டுட்டு நா விட்டுட்டேன்னா - நாளைக்கு ஒரு வேலையத்தப் பையன் மொட்டைக் கடுதாசி போடுவான்... இது மாதிரி சந்திரன்கிற எஸ்.ஐ. துட்டை வாங் கிட்டு - ஒரு கொலைய ஒண்ணுமில்லாம பண்ணிட்டார்ன்னு..."

"அய்யோ சாமி... பெரிய வார்த்தை எல்லாம் பேசாதீங்க... அது கொலையில்ல... கரண்ட்தான் அடிச்சு..."

"அது உனக்குத் தெரியும். எனக்குத் தெரியும். ஊர்ப் பையன்களுக்குத் தெரியுமா...? ஏதாவது ஒண்ணுன்னா - என்னைத் தானே வேலையில் இருந்து சஸ்பெண்ட் பண்ணு வான். வழிய விடுங்க... நேரமாச்சு... பாடிய எடுக்கணும்..." என்று கூட்டத்தினரை ஒதுக்கி விட்டு முன்னே சென்றார்.

"சாமி... பாடிய இப்பக் கொடுத்துடு வீங்களா...?"


"இப்பவா... இப்ப மணி நாலாச்சு...

• •

"நீங்க தினமும் சோளப் பொரி மட்டும்தான் சாப்பிடணும்!"

"அனேகமாக நீங்க கேட்கிற ஃபீஸைக் கொடுத்த பிறகு அது மட்டும்தான் சாப்பிட முடியும் டாக்டர்!"

– வேதபுரி எஸ்.ரமேஷ்





நாங்க ரெண்டு மணி நேரம் என்கொயரி நடத்துவோம். அப்புறம் டாக்டர் நாளைக்குத்தான் வருவார்... நாளைக்கு பதினொரு மணிக்குத்தான் பாடி கிடைக்கும்..."

அதற்குள் நாலைந்து பேர் சேர்ந்து நின்று கொண்டு எஸ்.ஐ.யையும், ஏட்டையும் இடைமறித்துக் கொண்டு "எம் மருமகனை எவனாவது தொட்டாங்கன்னா கையை உடைப்பேன்..." என்று கூச்சலிட, எஸ்.ஐ. கோபம் கொண்டவராய் பெரியவர் பக்கம் திரும்பி, "அய்யா உங்க பசங்கதானே... அனாவசிய பேச்சு பேச வேணாம்னு சொல்லுங்க... ஏழவு வீடுன்னு பார்க்கிறேன். இல்லை... அடி நொறுக்கிடுவேன்..." என்றார்.

"யேய்... இளவட்டப் பசங்களா... கம்மா இருங்க... வாங்க சாமி..." என்று பெரியவர் எஸ்.ஐ.யை உள்ளே அழைத்துப் போக . உள்ளே பெண்கள் கூட்டம்... அழுது புலம்பின வண்ணம், மார்பில் அடித்துக் கொண்ட வண்ணம் இருந்தார்கள்.

பெரியவர் கூட்டத்தை விலக்கி விட்டு, "பாருங்க சாமி... செத்த மாதிரியா இருக்கு புள்ள... ஸ்டூல்ல சின்னப் பசங்க வினையாட்டுக்கு கட்டி வைச்ச மாதிரில இருக்கு?" எனக் கூற, எஸ்.ஐ. பார்த்தார். ஆம்... உண்மை தான். அவர் மனசிலும் சட்டென்று வேதனை அரும்பியது.

பதினைந்து பதினாறு வயசு இருக்குமா... உள்காயம் போலும்... எந்தவித சேதமும் இன்றி... பெண் லட்சணமாய் இருந்தது. சட்டென்று அவருக்கு ஹேமாவின் ஞாபகம் வந்தது. ஹேமா அவரின் மகள்... இவள் வயசுதான் இருக்கும்.

இன்று காலையில் கூட ஹேமாவை சப்தம் போட்டார். டீ.வி. சுவிட்ச் லூஸாய் உள்ளது. வேறு சுவிட்ச் வாங்கி வரச் சொன்னான். 'திடீர்ன்னு ஷாக் வேற அடிக்குதுப்பா...' என்றாள். அப்போது எஸ்.ஐ. ஏதோ டென்ஷனில் இருக்க, "ஷாக் அடிச்சா சாகு... ஒழுங்கா படிக்கணும்னு நினைப்பு இல்ல..." என்று திட்ட, ஹேமா ஒரு மூலையில் போய் உட்கார்ந்து அழுத வண்ணம் இருந்தாள்.

ஒரு பெண் பெருங்குரலில் அழுதவாறு கூறியது "அந்த சுவிட்சை அப்பவே மாத்தச் சொன்னேன். மாத்தி இருந்தா - எம்மக கரண்ட் அடிச்சு செத்து இருப்பாளா?

"அம்மா... நகையெல்லாம் கழட்டிக்கங்க. அப்புறம் அதைக் காணோம், இதக் காணோம்னு சொல்லக் கூடாது. அப்புறம் எங்க தலைதான் உருளும்..." என்றார் எஸ்.ஐ.

ஏட்டு பக்கத்தில் வந்து, "வெளிய உங்கள பார்க்கணும்னு சொல்லுறாங்க..". என்றார்.

எஸ்.ஐ. 'என்னய்யா...' என்று வெளியே வந்தார். கட்சிக் கரை போட்ட வேஷ்டியுடன் ஒருவர்... 'என் தம்பி பொண்ணுதான் செத்தது. நா கட்சிக்காரன்.. மாவட்ட செயலாளர் கிட்டச் சொல்லி இருக்கேன். அவர் இப்போ வருவாரு... போஸ்ட் மார்ட்டம் பண்ண வேணாம்னு சொல்லுவாரு... நா கொடுக்கிறதை வாங்கிட்டு போயிடு..." எனக் கூற, எஸ்.ஐ. கோபத்துடன் திரும்பினார்.



"பாழாப் போன மூச்கப் பிடிப்பால எனக்குக் கிடைக்க வேண்டிய மந்திரி பதவி, வேற ஒருத்தருக்குக் கிடைச்சிடிச்சி!"

"அதுக்கும் இதுக்கும் என்னங்க சம்பந்தம்...?"

"என்னை விட அந்தாளு தலைவர் கால்ல நிறைய தடவை விழுந்துட்டானே!"

- சீர்காழி வி.ரேவதி

■ ■

"சார்... கட்சிக்காரங்க வரட்டும்... சி.எம்மே வரட்டும்... ரூல்ஸ்படிதான் நடக்கும்."

பக்கத்தில் வேறு இருவர் பேசிக் கொண்டது அவர் காதில் விழுந்தது.

"போஸ்ட்மார்ட்டம்னா என்ன?"

"அதுவா, ஆக்ஸிடெண்டாகி சாகிற வனை, பெரிய ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய் வெட்டிப் பார்ப்பாங்க. கிட்னி எல்லாம் கழட்டி எடுத்துடுவாங்களாம் பெரிய டாக்டருங்க."

"எல்லாம் திருட்டுப் பயலுகதான்."

எஸ்.ஐ. சிகரெட் பிடித்து முடித்து இருந்தார். புகார் வராமல் இருந்தாலாவது நமக்கென்ன என்று இருந்து விடலாம். புகார் வந்து விட்டு, போஸ்ட்மார்ட்டம் பண்ண வில்லை எனில் தான் அல்லவா பதில் சொல்ல நேரும்? அந்த பெரியவர் சொன்ன மாதிரி - அந்தப் பெண் தூங்குவது மாதிரி தான் இருந்தது. திரும்ப சட் என்று ஹேமாவின் நினைப்பு...

விறுவிறுவென்று வீட்டிற்குள் சென்றார். இனி பொறுமையாய் பேசிக் கொண்டிருக்கக் கூடாது என்று எண்ணியவராய் பிணத்தின் அருகே சென்றார்.

"அம்மா நகையெல்லாம் கழட்டியாச் சல்ல...?"

ஒரு பெரியம்மா எஸ்.ஐ. அருகே வந்து, "சாமி எம் புள்ளய ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போக வேணாம்" எனக் கூற,

"பாட்டி... அங்க ஒன்னும் செய்ய மாட்டாங்க... வயித்துல ஒரு வெட்டுதான்... வேற ஒன்னும்..."

'போடா... போக்கத்தவனே... எம் பேத்திய வயித்துல வெட்டுவாங்களாம்' என்று தன் மார்பில் அடித்துக் கொண்டாள். ஏட்டு உள்ளே வர, "யோவ்... நில்லுய்யா.. நா வெளி யப் போய் ஆளக் கூட்டிகிட்டு வர்றேன், பாடிய எடுக்க..." என்றவாறு எஸ்.ஐ. வெளியே வந்தார்.

அதற்குள் அந்தப் பெண்ணின் போட் டோவுடன் போஸ்டர் அடித்து இருந்தனர். கண்ணீர் அஞ்சலி என்று.

நீ போகலாம்.. உன் நினைவு போவ தில்லை... நெஞ்சிருக்கும் வரை உன் நினை விருக்கும்.

யாரோ ஒருவர் வேனுடன் வந்தார். வேன் நின்றது. பெரியவரை அழைத்து, 'பாடிய எடுக்க ஏற்பாடு பண்ணுங்க...' என்று கூற, பெரியவர் நாலு பேரை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றார். ஸ்டூலில் இருந்த பெண்ணை மெல்லத் தூக்கினர். பெண்கள் ஓலமிட்டு அழுதனர். எஸ்.ஐ. வேறு பக்கம் திரும்பிக் கொண்டார். சாக வேண்டிய வயசா இது.

வேனில் ஏற்றினர். 'பார்த்து... பார்த்து...' என்றனர். இப்போதும் சிலர் கூச்சல் இட் டனர். ஏட்டு அவர்களைப் பிடித்துத் தள்ளி விட்டார்.

"இன்னும் ஏதாவது சேட்டை செஞ் சிங்கன்னா போலீஸ் அடியக் காட்ட வேண்டி வரும்..." என்றார் ஏட்டு.

"யோவ் வேன்ல நாலு பேர் மட்டும் ஏறுனா போதும். வீண் கூட்டத்தை சேர்க் காதீங்க..." என்றார் ஏட்டு.

பெண்ணின் தகப்பனார், சகோதரர், வேறு இருவர் வேனில் ஏறிக் கொண்டனர். வேன் கதவு பூட்டப்பட்டது. வேனை ஓட்டி சைக்கிளில் வருமாறு ஒரு ஏட்டிடம் கூறினார் எஸ்.ஐ.

எஸ்.ஐ. தன் டி.வி.எஸ். பிப்டியை நெருங் கிய போது - அவருக்கு அதிர்ச்சியானது. எவனோ ஒருவன் பெட்ரோல் வரும் ட்யூப்பை வெட்டி, பெட்ரோலைக் கீழே கொட்டி விட்டு இருந்தான். கோபம் வந்தது. எல்லாம் இழவு வீட்டுக்காரர்களின் வேலை தான்.

வேனை நிறுத்தி - எஸ்.ஐயும் வேனில் ஏறிக் கொண்டார். வேன் கிளம்பியது. பாடி யைப் பெரிய ஆஸ்பத்திரியில் விட்டு விட்டு - வீட்டிற்குப் போகும் போது, அவசியம் ஒரு சுவிட்ச் வாங்கிப் போய் ஹேமாவிடம் கொடுக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டார்.

என்ன காரணம்?

☐ மற்றவர்கள் ஆங்கிலத்தில் பேசுவதை ஓரளவு புரிந்துகொள்ள முடிந்தும், அவர்களது கேள்விகளுக்கு ஆங்கிலத்திலேயே பதிலளிக்க முடியவில்லையே ஏன்?

☐ ஆங்கிலத்தில் பேச முயற்சிக்கும்போது, ஒருவிதத் தயக்கமும், தடுமாற்றமும் ஏற்படுகிறதே என்ன காரணம்?

தவறாகப் பேசி விடுவோமோ என்ற பயமும், போதிய பயிற்சியின்மையும்தான் இத் தயக்கத்திற்கான மூல காரணங்கள்.

முறையாகப் பயிற்சி பெற்றால், தேவையற்ற இத்தயக்கம் தானாக விலகிவிடும்.

ஆம்... விவேகானந்தா கல்வி நிலையம் உளவியல் அடிப்படையில் அளித்துவரும் உரையாடற் பயிற்சியை (Spoken English Practice) நீங்கள் மேற்கொண்டால் போதும்!

உங்களிடமுள்ள தயக்கம் நீங்கி, சரளமாக ஆங்கிலத்தில் பேசத் தொடங்கிவிடுவீர்கள்.

இதுவரை மூன்று லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் இப்பயிற்சியின் மூலம் பயனடைந்துள்ளனர்.

வீட்டிலிருந்தபடியே, ஓய்வு நேரத்தில் தபால் மூலம் பயிற்சி பெறலாம். பயிற்சிக்காக தினசரி அரைமணி நேரம் மட்டும் செலவிட்டால் போதும்!

இன்றே ஒரு போஸ்ட்கார்டில் உங்களது முகவரியைத் தெளிவாக எழுதி அனுப்புங்கள். பயிற்சி பற்றிய விபரங்களை உடனே அனுப்புகிறோம்.

விவேகானந்தா கல்வி நிலையம்

9, நடேசன் தெரு, தி.நகர், சென்னை 600 017

தேர்முகப் பயிற்சி வகுப்புகளும் நடைபெறுகின்றன

(பெண்களுக்கு தனி வகுப்புகள்)

63. தீர்ப்பு

சென்னை ஹைகோர்ட்டின் சரித்திரத்தில், இந்த உமாராணி - ஸ்ரீதரன் வழக்கைப்போல் ஜனங்களின் மனத்தைக் கவர்ந்த வழக்கு வேறு நடந்ததில்லையென்று சொல்லலாம். நாலு பேர் கூடுமிடங்களிலெல்லாம் இதே பேச்சாகத்தான் இருந்தது. கேஸ் நடக்கும் தினங்களில் மாலை வேளையில் கடற்கரைக்குப் போனால், வெண்மணலில் கும்பல் கும்பலாக உட்கார்ந்திருந்தவர்களுடைய பேச்சில் உமாராணி - ஸ்ரீதரன் என்ற பெயர்கள் அடிக்கடி கேட்கக்கூடிய நிலையிலிருந்தன. அநேகம் பேர், கையில் அன்று வந்த பத்திரிகையைப் பிரித்து வைத்துக் கொண்டிருந்தார்கள். தினசரிகளில் 'லீகல் காலம்' என்று சொல்லப்படும் கோர்ட்டு நடவடிக்கைகள் பிரசுரிக்கும் பத்திக்கு இவ்வளவு முக்கியம் இதற்கு முன் எப்போதும் ஏற்பட்டது கிடையாது.

இன்னும் ஆச்சரியமான விஷயம் என்னவென்றால், இந்த வழக்கு விஷயத்தில் ஸ்திரீகள் காட்டிய சிரத்தையேயாகும். வீட்டிலும் சரி, வெளியிலும் சரி, பெண்மணிகள் இரண்டு மூன்று பேர் சேர்ந்தால், உடனே உமாராணியின் பேச்சுத்தான் கிளம்பும். அபிப்பிராய பேதங்கள், வாதப் பிரதிவாதங்கள் இல்லாமலில்லை. பொதுவாக, இளம் பெண்கள் எல்லாரும் உமாராணியின் கட்சி பேசினார்கள். "ஆமாம்; அவள் கேட்பது நியாயந்தானே? புருஷர்கள் என்ன வேணுமானாலும் செய்யலாம், அதற்குக் கேள்வி முறை கிடையாது; பொம்மனாட்டிகள் மட்டும் எப்போதும் அடிமையாயிருக்க வேண்டுமென்று எந்தச் சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது? அது என்ன நியாயத்தில் சேர்ந்தது? நன்றாய்ச் சொன்னாள், 'புருஷனுக்கு ஜீவனாம்சம் தருகிறே'னென்று!" இம் மாதிரி படித்த யுவதிகளும், மாதர் விடுதலை இயக்கத்தில் சேர்ந்த மாது சிரோமணிகளும் பேசினார்கள். பழைய கர்நாடகத்தில் பற்றுள்ள வயதான ஸ்திரீகளோ, "இது என்ன அநியாயம்? புருஷனுக்குப் பெண்டாட்டி ஜீவனாம்சம் கொடுக்கிறதாமே? அப்படி அந்த உமாராணி நடுக் கோர்ட்டிலே சொன்னாளாமே? என்ன இருந்தாலும் ஒரு பொம்மனாட்டிக்கு இவ்வளவு தைரியம் ஆகுமோ?" என்றார்கள். இந்த மாதிரி வாதப் பிரதிவாதங்கள் ஒவ்வொரு வீட்டிலும் நடந்து கொண்டிருந்தன.

சுதந்திர ஸ்திரீ சமாஜத்தைச் சேர்ந்த ஸ்திரீகள் சிலர் உமாராணியிடம் அநுதாபம் காட்டுவதற்காகப் பொதுக் கூட்டம் கூட்ட வேண்டுமென்றும், உமாராணியின் பக்கம் தீர்ப்புச் சொல்ல வேண்டுமென்பதாக நீதிபதிக்கு ஒரு மகஜர் அனுப்ப வேண்டுமென்றும் முயற்சி செய்தார்கள். இம்மாதிரியெல்லாம் செய்வது 'கண்டெம்ப்ட் ஆப் கோர்ட்'. அதாவது கோர்ட்டை அவமதிக்கும் குற்றமாகும் என்று சிலர் எடுத்துக் காட்டியதன் மேல் மேற்படி முயற்சி கைவிடப்பட்டது.

இப்படி ஜனங்களிடையில் அளவில்லாத ஆவலையும் பரபரப்பையும் உண்டு பண்ணியிருந்த வழக்கில், கடைசியாகத் தீர்ப்புச் சொல்லும் நாள் வந்தது. அன்று சாயங்காலம் தினசரிப் பத்திரிகைகளுக்கு ஏற்பட்ட கிராக்கி காந்திமகான் கைதியான அன்று ஏற்பட்ட கிராக்கிக்குச் சமமாக இருந்தது.

நீதிபதி இரு தரப்பு வாதங்களையும் சாங்கோபாங்கமாக எடுத்து அலசி ஆராய்ந்து விட்டுக் கடைசியில் பின்வருமாறு தீர்ப்பை முடித்திருந்தார்:


"பிரதிவாதியாகிய ஸ்ரீமதி உமாராணி தம்முடைய கட்சியை மிகவும் பாராட்டத்தக்க முறையில் எடுத்துச் சொன்னார். அவருடைய வாழ்க்கை வரலாறு கல்நெஞ்சையும் உருக்கக் கூடியதாகும். ஹிந்து சமூக வாழ்க்கையிலுள்ள அநீதிகளுக்கு அவர் ரொம்பவும் உள்ளானவர் என்று நிச்சயமாய்த் தெரிகிறது. எல்லா விதத்திலும் அவர் நம்முடைய அநுதாபத்துக்குப் பாத்திரமாயிருக்கிறார். தர்மமும் நியாயமும் பிரதிவாதியின் கட்சியில்தான் இருக்கின்றன என்பதில்

சந்தேகமில்லை. ஆனால், துரதிர்ஷ்டவசமாக, சட்டம் அவர் கட்சியில் இல்லை. ஆணுக்கும் பெண்ணுக்கும் சம உரிமை வேணுமென்று அவர் கேட்பது தர்ம நியாயமாயிருக்கலாம்; ஆனால், அவருடைய கோரிக்கையை இப்போதுள்ள சட்டம் அங்கீகரிக்கவில்லை. சட்டம் பிசகானதாயிருந்தால், அதைத் திருத்த வேண்டியது சட்ட நிபுணர்கள் - அரசியல் வாதிகள் இவர்களுடைய கடமை. நான் இப்போது அமுலிலுள்ள சட்டத்தின்படிதான் தீர்ப்புச் சொல்ல வேண்டும். சாதாரணமாக, ஒரு புருஷன் தன்னுடைய மனைவி தன்னுடன் வசிக்க வேண்டுமென்று கோருவதற்குப் பாத்தியதை உண்டென்று சட்டம் சொல்கிறது. இந்த வழக்கில் பிரதிவாதியை வாதி கொடூரமாக ஹிம்ஸித்ததாய் ருசுவாக வில்லை. ஆகவே, உமாராணி என்கிற சாவித்திரி அம்மாள் அவருடைய புருஷன் ஸ்ரீதரன் என்பவருடன் சேர்ந்து வசிக்க வேண்டும் என்பதாகத் தீர்ப்பளிக்கிறேன்."

இந்தத் தீர்ப்பு வெளியான அன்று, எங்கே பார்த்தாலும் ஒரே கிளர்ச்சியாக இருந்ததென்று சொல்ல வேண்டியதில்லை. பெரும்பாலோர், தீர்ப்பு ரொம்ப அநியாயமான தீர்ப்பு என்று தான் நினைத்தார்கள். ''ஜட்ஜ் என்ன பண்ணுவார்? சட்டம் அவ்வளவு லட்சணமாயிருக்கு!" என்று சிலர் சொன்னார்கள். "என்ன கோர்ட்டு, என்ன சட்டம் வேண்டியிருக்கு!" என்று விரக்தியாகப் பேசினார்கள் சிலர். "சட்டப் புஸ்தகங்களையெல்லாம் வைச்சு பெட்ரோலை ஊற்றி நெருப்பை வைக்கணும்'' என்று சொன்ன தீவிரவாதிகளும் உண்டு.

"என்ன இருந்தாலும், புருஷன் புருஷன் தான், பொம்மனாட்டி பொம்மனாட்டி தானே? 'துரை மகளானாலும் பாரி, புருஷனுக்கவன் ஊழியக்காரி!'' என்று சொல்லிச் சந்தோஷப் பட்டவர்களும் இல்லாமற் போகவில்லை.

தீர்ப்புச் சொன்ன மறு



அருள்வாக்கு



வியாஸரைத் தான் நான் முதல் 'ஜர்னலிஸ்ட்' (பத்திரிகை எழுத்தாளர்), இன்றைய ஜர்னலிஸ்ட்களுக்கெல்லாம் 'ஐடிய'லாக (முன்னுதாரணமாக) இருப்பவர் என்று நினைக்கிற வழக்கம். கதை, சரித்திரம், பூகோளம், தத்வம், தர்மம், கலைகள் எல்லாவற்றையும் புத்திமான்களுக்கு மட்டுமில்லாமல் பாமர ஜனங்களுக்கும் ஸ்வாரஸ்யமாகத் தருவதற்கே அவர் புராணங்களை எழுதி பெரிய செல்வமாகக் கொடுத்திருக்கிறார். இதைத்தானே ஜர்னலிஸ்ட்களும் செய்கிறார்கள்? ஆனால் இவர்கள் பெரும்பாலும் ஸ்வாரஸ்யம், ஜனரஞ்ஜகம் என்பதோடு நிறுத்திக் கொண்டு விடுகிறார்கள். வியாஸர் பாமர ஜனங்களையும் தர்மத்தில் கொண்டு சேர்க்கவே, பரமாத்மாவிடம் கொண்டுபோய் விடுவதற்கே ஸ்வாரஸ்யத்தை ஸாதனமாக வைத்துக் கொண்டார். அந்த ஸ்வாரஸ்யத்தையே "கோல்" (லக்ஷ்யம்) என்று வைத்துக் கொண்டால் பத்திரிகைகள் தர்ம விருத்தமான (தர்மத்துக்கு முரணான) விஷயங்களையும் பிரசாரம் செய்யும்படி ஆகிறது. வியாஸரை முன்னோடியாக வைத்துக் கொண்டால் பத்திரிகைக்காரர்களின் எழுத்து சுத்தமாகிவிடும். லோகத்துக்கு ஒரு பெரிய நல்லது பிறக்கும்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய ஸ்வாமிகள்.

நாள் வக்கீல் ஆபத்சகாயமய்யர் வழக்கம் போல் உமாராணியைப் பார்க்க வந்தார். அவருக்கு ரொம்பவும் மனம் சோர்ந்து போய் இருந்தது என்பதை அவருடைய முகம் காட்டிற்று.

"நான் அப்போதே சொன்னேன். கேஸ் ஜயிப்பது நிச்சயமில்லையென்று. நீங்கள் பிடிவாதமாய்க் கேஸ் நடத்தத்தான் வேண்டுமென்றீர்கள். கடைசியிலே, நான் பயந்தபடிதான் ஆச்சு. தோற்றுப் போனோம்" என்றார்.

"தோற்றுப் போனோமா? யார் சொன்னது, வக்கீல் ஸார்! உண்மையில் நமக்குத்தான் ஜயம். நான் எனக்காக மட்டும் இந்தக் கேஸை நடத்தினேன் என்றா நினைக்கிறீர்கள்? பெண் குலத்துக்காகவே அல்லவா நடத்தினேன்? புருஷர்கள் ஸ்திரீகளுக்குச் செய்யும் அநீதிகள் வெளியாகட்டும் என்பதற்காகத் தான் இவ்வளவு கஷ்டப்பட்டேன். இந்த நோக்கத்தில் நான் ஜயமடைந்து விடவில்லையா? என்னுடைய கட்சியில்தான் நியாயம் இருக்கிறதென்று ஜட்ஜு சொல்லி விடவில்லையா? சர்க்கார் சட்டமும் ஸமூக சட்டமும் பெண் குலத்துக்குப் பெரிய அநீதி செய்கின்றன என்று தெரிந்து போய் விடவில்லையா? எனக்கு இதுவே போதும். கேஸ் தோற்றதனால் மோசமில்லை" என்று உமாராணி விடுவிடு என்று பேசினாள்.

"என்ன இருந்தாலும், ரஸாபாஸமாகத் தானே போச்சு, அம்மா? இவ்வளவு கேஸு, ஃபீஸு எல்லாவற்றிற்கும் பிறகு அவ டே

"மன்னா! மக்கள் விலைவாசி உயர்வு பத்திப் பேச ஆரம்பித்து விட்டார்கள்."

"அப்படியா! டீவியில் இன்னொரு சானல் திறந்து, தினமும் நாலு சினிமா காட்ட ஏற்பாடு செய்யுங்க!"

- ஏ. சுந்தரம்



நீங்க சேர்ந்து வாழறதுன்னா, கஷ்டமில்லையா? அதைவிட முன்னேமே சமரசமாய்ப் போயிருந்தா நன்னாயிருக்காதா?" என்றார் ஆபத்சகாயமய்யர்.

"அவரோடே சேர்ந்து வாழறதா? நானா?" என்று சொல்லி உமாராணி இகழ்ச்சியாகச் சிரித்தாள். "வக்கீல் ஸார்! ஒரு வேளை கேஸ் நம்ம பக்கம் தீர்ப்பாகியிருந்தால், அவரோடே வாழறதற்கு நான் சம்மதிச்சிருப்பேன். நானே அவரிடம் போய், 'போனதெல்லாம் போகட்டும்: இனிமேல் நாம் புது வாழ்க்கை நடத்துவோம். சாருவை உத்தேசித்தாவது சண்டை போடாமல் இருப்போம்' என்று சொல்லியிருப்பேன். ஆனால், இப்போ அது முடியாது! கோர்ட்டுத் தீர்ப்புக்குக் கட்டுப்பட்டுப் புருஷனும் மனைவியும் சேர்ந்து வாழுகிறது நடக்கிற காரியமா?" என்றாள்.

வக்கீலுக்கு ஒன்றும் புரியவில்லை. ஒரே குழப்பமாயிருந்தது.

"நீங்கள் என்ன சொல்றேள்? அப்பீல் பண்ணலாம்னு உத்தேசமா?" என்றார்.

"அப்படியெல்லாம் பயப்படாதேங்கோ. நான் அப்பீல், கிப்பீல் பண்ணப் போறதில்லை."

"ஓஹோ! தெரிஞ்சுது! நான் முன்னயே சொன்னேனே, அந்த யோசனை இப்ப செய்யறேளாக்கும். வாஸ்தவந்தான். ஏதாவது பணத்தைக் காசைக் கொடுத்தா, அந்த மனுஷன் வாங்கிண்டு போயிடுவன்."

"பணங்காசு கொடுக்கிறதா? இதெல்லாம் என் பணம் இல்லை, வக்கீல் ஸார்! என் அத்தை பணமாக்கும்! அதைத் துர்விநியோகம் செய்ய எனக்கு என்ன பாத்தியதை?" என்றாள் உமா.

பிறகு, "எங்க அப்பாவுக்கு உலக விவகாரம் ஒண்ணும் தெரியாது. பணங்காசு விஷயத்தைக் கவனிக்க அவரால் முடியாது. இத்தனை நாளும் எனக்குச் செய்துண்டு வந்தது போல் எங்க அப்பாவுக்கும் நீங்கதான் ஒத்தாசை செய்துண்டு வரணும். ஏதோ பேருக்கு எங்க அப்பா சாருவின் கார்டியனே தவிர, நீங்கதான் உண்மையிலே குழந்தைக்குக் கார்டியனாயிருக்கணும்" என்றாள்.

வக்கீல் மனக் கலக்கத்துடன், "நீங்க என்னதானம்மா செய்யப் போறேள்? இப்படியெல்லாம் பேசறதைப் பார்த்தால் பயமாயிருக்கே?" என்றார்.

"அந்த மாதிரி ஒண்ணும் பயப்படாதேங்கோ. என் குழந்தையை விட்டுட்டு, நான் செத்து கித்துப் போயிடமாட்டேன்" என்றாள் உமா.

(தொடரும்)

அமரர் கல்கி
நினைவுச் சிறுகதைப் போட்டி-1994

முதல் பரிசு ரூ.1,500

இரண்டாவது பரிசு ரூ.1,000

மூன்றாவது பரிசு (இரு கதைகளுக்குத் தலா ரூ.500 வீதம்) ரூ.1,000

ஆக மொத்தம் ரூ.3,500 பரிசுகளாக வழங்கப் பெறும்.

தவிர, பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு கதையும் ரூ. 125 சன்மானம் பெறும். அறிமுக எழுத்தாளர்களுக்குப் போனஸ் உண்டு.



- கதைகள் சொந்தக் கற்பனை என்றும், இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் பிரசுரமானதில்லை என்றும் உறுதிமொழி தேவை.
- அறிமுக எழுத்தாளர் எனில் இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லை என்றும் போட்டி முடிவு அறிவிக்கப்படும் வரை எழுத மாட்டேன் என்றும் உறுதிமொழி தர வேண்டும்.
- நடுவர் குழு கதைகளைப் பரிசீலித்துப் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்கும்.

கதைகளை அனுப்ப வேண்டிய கடைசி தேதி: ஜூன் 15.

- உறையின் மேல் 'அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி' என்று குறிப்பிடுதல் அவசியம்.
- பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெற,போதிய அளவு தபால்தலை ஒட்டிய சுயவிலாசமிட்ட உறையைக் கதையுடன் கூடவே அனுப்புதல் வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.
- கதைகள் கல்கியில் நாலு பக்கங்களுக்கு மேற்படாதிருப்பது நலம். ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் கிடையாது.
- சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.
- போட்டி முடிவும் முதல் பரிசுக் கதையும் ஆகஸ்டு 7 ஆண்டு மலரில் பிரசுரமாகும்.
- எழுத்தாளர்கள் பெருமளவில் உற்சாகத்துடன் கலந்து கொண்டு ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

- ஆசிரியர், கல்கி,47, ஜவஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.



சக்கரவர்த்தித் திருமகன்

வானர யுவராஜனான அங்கதன் சொன்னான்: "இவன் நம்முடைய பகைவர் கூட்டத்திலிருந்து வந்திருக்கிறான். தானாக வந்தானோ பகைவனால் அனுப்பப்பட்டு வந்தானோ நமக்குத் தெரியாது. இவனைத் தள்ளி விடுவதும் நியாயமாகாது. பரீட்சை செய்யாமல் சேர்த்துக் கொள்ளுவதும் நம்முடைய க்ஷேமத்துக்கு அபாயம் உண்டாக்கலாம். ஆனபடியால் இவனைப் பற்றித் தீர்மானமான முடிவுக்கு உடனே வர முடியாது. வரவேண்டியதுமில்லை. எப்படி நடந்து கொள்ளுகிறானோ பார்க்கலாம். இவன் காரியங்கள் நமக்குச் சந்தேகம் உண்டாக்கினால் பிறகு தள்ளி விடலாம். நல்ல எண்ணமே அதிகமாகக் காணப்பட்டால் சேர்த்துக் கொள்ளலாம்."

இவ்வாறு வாலி புத்திரன் அங்கதன் சொன்னான்.

சரபன் சொன்னான்: "இவனை நமக்குள் உடனே சேர்த்துக் கொண்டு விட்டுப் பிறகு தீர்மானிப்பது அவ்வளவு க்ஷேமம் என்று நான் அபிப்பிராயப் படவில்லை. முதலிலேயே நமக்குள் சாமர்த்தியசாலிகளான சாரர்களை விட்டு இவனைப் பரீக்ஷை செய்து விட்டு ஒரு முடிவுக்கு வந்து விடுவது நலம்'' என்றான்.

ஜாம்பவான் சொன்னான்: "இத்தகையவர்களைப் பரீக்ஷை செய்வதால் ஒன்றும் வெளிப்படாது. மனத்தில் உள்ள கருத்தை மறைத்துக் கொண்டு வஞ்சக எண்ணத்தோடு இவன் வந்திருந்தால் பரீக்ஷை செய்து அதைக் கண்டு பிடிப்பது முடியாத காரியம். ராவணன் நமக்குத் தீராத பகைவன். அவனை விட்டு விட்டுத் திமிர் என்று வந்து விட்டதாக இவன் சொல்லுகிறான். இதை நாம் எப்படி ஒப்புக் கொள்ள முடியும்? நாம் இன்னும் சமுத்திரம் தாண்டவில்லை. இக்கரையிலிருக்கும் போதே இவன் நம்மிடம் வந்து சரண் புகுவதற்கு என்ன காரணம்? இது ரொம்பவும் சந்தேகத்துக்கு இடம் தருகிறது. இவனுடைய கூட்டம் வஞ்சகக் கூட்டம். இவனைச் சேர்த்துக் கொள்ளக் கூடாது என்பது என் அபிப்பிராயம்'' என்றான்.

மைந்தன் சொன்னான்: "சந்தேகத்தின் பேரிலேயே ஒருவனைத் தள்ளிவிடலாமா? இவனை யுக்தியாகப் பரீக்ஷை செய்தே இவனைப் பற்றித் தீர்மானிக்க வேண்டும். ராவணனைத் துறந்து விட்டு வந்திருப்பதாகச் சொல்லுகிறான். இதன் உண்மையை நாம் காண முடியும். இவனுடன் சிலர் பேசிப் பார்த்து முடிவு செய்யலாம். இதற்கு வேண்டிய சாமர்த்தியம் நம்முள் சிலருக்கு இல்லாமற் போகவில்லை."

பிறகு ராமன் அறிவுச் செல்வமாகிய ஹனுமானைப் பார்த்தான்.

82. சரணாகதி

தன்னுடைய அபிப்பிராயத்தை அறிய ராமன் விரும்புவதைக் கண்டு, பொருள் செறிந்த இன்சொற்களைப் பேசும் வாயுபுத்திரன் சொன்னான்:

"நீர் நம்மைக் கேட்பது என்னத்திற்கு? பிரஹஸ்பதியே வந்தாலும் உமக்கு மேல்

என்ன யோசனை சொல்வான்? எனக்கு முன் பேசியவர்கள் சொன்ன யுக்திகளில் நான் நன்மை காணவில்லை. சேர்த்துக் கொள்ளுவதில் அபாயமிருந்தால் அந்த அபாயம் உடனே நேரிடும். பரீக்ஷை செய்வதற்கு இடம் ஏது? தவிர, இந்த விபீஷணன் மறைந்து கொண்டு வரவில்லை. நம்முன் நேராகத்தானே வந்து பகிரங்கமாக அனைவருக்கும் எதிரில் நிற்கிறான். சாரர்கள் இவனிடம் போய் ரகசியம் தேட என்ன இருக்கிறது?

"திடீர் என்று அகாரணமாகவும் அவசரமாகவும் சத்துரு கூட்டத்திலிருந்து ஒருவன் வந்து நின்றால் அவனை எப்படி நம்பலாம் என்று சிலர் சந்தேகம் சொன்னார்கள். தன் தமையன் ராவணனுடைய துர்க் குணங்களை விபீஷணன் கண்டு அவனை வெறுத்தான் என்பதில் என்ன வியப்பு? உம்மிடம் வீரத்தையும் தருமத்தையும் பெருந்தன்மையையும் இவன் கண்டான் என்பதில் என்ன வியப்பு? ஆனபடியால் இவன் வந்த சமயமும் சந்தர்ப்பமும் என் அபிப்பிராயப்படி சந்தேகத்துக்கு இடம் கொடுக்கவில்லை.

"இவனைச் சேர்த்துக் கொள்வதற்கு முன், தூதர்கள் இவனிடம் கலந்து கேள்வி மறுமொழிகளின் மூலம் இவன் குணத்தை அறிந்து கொள்ளலாம் என்று சிலர் சொன்னார்கள். ஒருவனைப் பற்றி நாம் சந்தேகிக்கிறோம் என்பது அவனுக்குத் தெரிந்து விட்டால் அவன் இயற்கைக்கு மாறாகத்தான் நடந்து கொள்வான். சுபாவப்படி பேசவோ நடந்து கொள்ளவோ அவனால் முடியாது. நாம் அவனிடம் குற்றத்தைத் தேடுகிறோம் என்கிற பயம் இருந்து கொண்டேயிருக்கும். அதுவே இயற்கைப் போக்கைத் தடுத்து விடும். வந்திருக்கும் ராக்ஷசனுடைய முகம், பேச்சு இவற்றில் எனக்கு ஒரு சந்தேகமும் தோன்றவில்லை. கவலையற்ற இவன் முகமே இவன் உள்ளத்தில் வஞ்சனை இல்லையென்பதற்கு அத்தாட்சி. நெஞ்சத்துள் இருப்பதை ஒருவன் எவ்வளவு மறைத்தாலும் அதை அவன் முகம் காட்டி விடும். இது நீதி சாஸ்திரத்தில் கண்ட உண்மை.* விபீஷணன் தங்களிடம் உண்மையாகவே



* அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம் -குறள்

சரண் புக வந்திருக்கிறான் என்பது என் அபிப்பிராயம். இப்படி அவன் வருவதில் வியப்பு ஒன்றுமில்லை. ராவணனுடைய தோஷங்களை உணர்ந்தவன். லங்கேசன் தோல்வியடைவான் என்பதைக் கண்டு கொண்டவன். தாங்கள் வாலியை வதம் செய்து சுக்ரீவனுக்கு வானர ராஜ்யம் தந்திருக்கிறீர் என்பதும் அவனுக்குத் தெரியும். அப்படியே இவனும் லங்காதி பத்தியத்தை அடையலாம் என்று வந்தி ருக்கிறான் என்று வைத்துக் கொள்வோம். இதில் குற்றம் ஒன்றுமில்லை. சந்தேகப் படுவதற்கு இடமுமில்லை. ஆனபடியால் இவனை நாம் சேர்த்துக் கொள்ளலாம் என்பது என் அபிப்பிராயம்.

"என் புத்திக்கு எட்டிய வரையில் நான் சொன்னேன். முடிவில் தாங்கள் எப்படி நிச்சயிக்கிறீர்களோ அப்படிச் செய் வீர்களாக. தங்களுடைய யோசனைக்கு மேல் எங்கள் யோசனை என்ன இருக் கிறது?" இவ்வாறு ஹனுமான் சொல்லி முடித்தான்.

இப்படி வானரத் தலைவர்கள் விபீஷணனைப் பற்றிப் பலவிதமான யோசனை சொன்னார்கள்.

சாமான்ய தருமத்தின்படி கும்ப கர்ணன் நடந்து கொண்டான். அது எல் லாருக்கும் விளங்கும் விஷயம். அதில் சிக் கல் ஒன்றுமில்லை.

சாமான்ய தருமத்திற்கும் மேம்பட்ட தான விசேஷ தருமத்தைத் தழுவி நடந்து கொண்டதே விபீஷணனுடைய 'குற்றம்'. தருமத்திற்கு விருத்தமான அண்ணனுடைய காரியங்கள் விபீஷணனுடைய அந்தராத் மாவுக்குத் தந்த வேதனையை அவன்தான் உணர்வான். மற்ற சாமான்யர்களுக்கு அது விளங்காது. அதனால் அவனுடைய நடத் தையை ராமனுடனிருந்த வானரர்களும் சரியாக உணரவில்லை. தற்காலத்திலும் விபீ ஷணனுடைய காரியத்தில் குற்ற மில்லையென்பதை மக்கள் உணர்வது கஷ் டம். காரணங்களை எடுத்துச் சொல்ல வேண்டியதாகிறது.

வானரத் தலைவர்கள் சொன்னதை யெல்லாம் ராமன் சாவதானமாகக் கேட் டான். கடைசியில் வாயு புத்திரன் சொன் னதைக் கேட்டு மிகவும் சந்தோஷமடைந் தான். தன் தருமத்தைத் தான் காப் பாற்றுவதில் எப்போதும் உறுதியுள்ள ராமனுக்கு ஹனுமானுடைய பேச்சு மிக்க சாந்தி தந்தது. நல்லவன் ஒருவன் தான் நடத்த வேண்டிய தருமத்துக்குப் பிறர் யோசனையும் பக்கபலமாக வந்து சேர்வதைக் கண்டால் அவன் மனதுக்கு ஆறுதல் ஏற்படுகிறது.

"சிநேகிதன் என்று சொல்லிக் கொண்டு ஒருவன் என்னிடம் வந்தால் அவனை நான் எப்படித் தள்ள முடியும்? இது என்னுடைய தருமம். எனக்கு நண் பர்களாக அமைந்து எனக்காகப் பாடுபடும் நீங்கள் அனைவரும் இதை அறிய வேண்டும். 'சரணம்' என்று சொல்லிக் கொண்டு ஒருவன் வந்தால் அவனிடத்தில் காணப்படும் குற்றங்களைப் பொருட் படுத்தக் கூடாது."

இப்படி ராமன் சொன்னதைக் கேட்ட சுக்ரீவன் சமாதானப்படவில்லை.

"இந்த ராக்ஷசன் நல்லவனாகவே இருக்கலாம். ஆனால் தன் சொந்த அண் ணன் ஒரு பெரிய ஆபத்தில் சிக்கிய சம யத்தில் அவனைக் கைவிட்டு இங்கே வந் திருக்கிறான். இத்தகைய ஒருவனுக்கு சம யத்தில் நம்மையும் கைவிடுவதில் ஒரு கஷ்டமுமிராது. தன் தமயனுக்குச் செய் ததை நமக்கும் ஏன் செய்ய மாட்டான்?" என்று கேட்டான்.

சுக்ரீவன் இதைச் சொன்னபோது ராமன் லக்ஷ்மணனைப் பார்த்து, தெரிந்தும் தெரியாததுமான ஒரு சிறிய புன்சிரிப்புச் செய்தான் என்கிறார் முனிவர் வால்மீகி. தன்னுடைய கதையையே மறந்துவிட்டு சுக்ரீவன் பேசியதை முனிவர் இப்படி ரஸோக்தியாகக் காட்டுகிறார்.

சக்கரவர்த்தித் திருமகன், "நீர் சொல்வதை நான் உணர்வேன். ஆயினும் நான் சொல்லுவதைக் கேட்பீர். அரச பத வியிலிருப்பவர்கள், அண்ணன் தம்பி தாயா திகள் அடுத்த தேசத்து ராஜாக்கள் இவர் களை எப்போதுமே சந்தேகப்படுவது சகஜம். சந்தேகப்படாத நல்லவர்களும் உண்டு. ஆனால் பெரும்பாலோர் தங் களைக் கண்டு மற்றவர்கள் பொறாமைப் படுகிறார்கள் என்றே எண்ணுவார்கள். ராவணன் விபீஷணனை இப்படிச் சந்தேகித்து நிந்தித்ததில் என்ன ஆச்சரியம்?

"இனி லங்கையிலிருந்தால் தனக்கு அபாயம் என்று விபீஷணன் பயப்படுவதும் சகஜமே. ஆனபடியால் அவன் நம்மிடம் சரண் புக வந்ததில் வஞ்சனை ஒன்று மில்லை என்பது என் அபிப்பிராயம்.

தவிர ராஜ்யத்தில் ஆசை வைத்தே வந்த தாகவும் இருக்கலாம். ராவணன் அழிவான். நாம் வெற்றி பெறுவோம். அதனால் அண்ணனுடைய ராஜ்யத்தை தான் அடைய லாம் என்றே நம்மிடம் வந்திருக்கிறான் என்று வைத்துக் கொள்வோம். இதிலும் என்ன பெரிய குற்றம்? லக்ஷ்மணா! எல்லாரும் நம்முடைய பரதனைப் போல் இருப் பார்களா?'' என்றான் ராமன்.

இப்படிச் சொல்லி விட்டு ஒரு கணம் ராமன் பரதனை நினைத்து தியானத்தில் மூழ்கினான். "என்னைப் போன்ற பாக்கிய வான் யார் உண்டு உலகத்தில்? பரதனைப் போன்ற ஒரு சகோதரனைப் பெற்றேன். நான் காடு சென்ற துக்கத்தினால் தகப் பனார் உயிரையே துறந்துவிட்டார். அத் தகைய பிரியமான தகப்பனை நானும் லக்ஷ்மணனும் பெற்றோம். உங்களைப் போன்ற நண்பர்களையும் நான் தவிர வேறு யார் பெறுவார்?''

கண்களில் நீர் கலங்க இவ்வாறு சொல்லி விட்டு மறுபடியும் விஷயத்தைப் பற்றிப் பேசினான். "ராவணனைக் கை விட்டது போலவே விபீஷணன் நம்மையும் கைவிடுவான் என்கிற வாதத்தில் நான் நியாயம் காணவில்லை. நம்மைக் கை விடுவதற்கு என்ன காரணம் விபீஷண னுக்கு உண்டாகும்? அந்த ராஜ்யத்தில் நாம் ஆசை வைத்திருக்கிறோமா? இல்லை. நாம் வெற்றி அடைந்தால்தானே இவனு டைய ஆசை நிறைவேறும்? இந்தக் கார ணங்களால் நாம் இந்த விபீஷணனைச் சேர்த்துக் கொள்ள மறுத்து விடுவது தவ றாகும். நான் சொன்ன இவையெல்லாம் நீதிசாஸ்திர விஷயம்.

"உண்மையில் நல்லவனோ கெட்ட வனோ ஒருவன் 'சரணம்' என்று என்னிடம் வந்தால் அவனை நான் தள்ளி விட முடி யாது. இது என் பிறவித் தருமம். அத னால் நான் நஷ்டமடைந்தாலும் அதை நான் பொருட்படுத்த மாட்டேன். என் உயிருக்கு அதனால் அபாயமாயினும் இந்த தருமத்தை நான் காப்பாற்றித்தான் ஆக வேண்டும். விட்டு விட மாட்டேன். இவ னால் என்ன அபாயம் எனக்கு உண்டாக முடியும்? இதற்கு நான் பயப்பட வில்லை. ராவணனே வந்து சரணம் என்றாலும் பரீட்சை செய்யாமல் ஒப்புக் கொள்வேன். அப்படியிருக்க அவன் தம்பியை நான் எப்படித் தள்ளுவேன்? போய் விபீ ஷணனை அழைத்து வாருங்கள்'' என்றான் ராமன்.

"ராமசந்திரனே! நான் தெளிந்தேன்! அழைத்து வருகிறேன். விபீஷணனும் எங் களைப் போல் உமக்குப் பிரிய நட்புக் கொண்டவன் ஆகுக!'' என்று சொல்லி சுக்ரீவன் விபீஷணனிடம் சென்றான்.

ராவணனைத் துறந்து வந்த விபீஷணனைச் சக்கரவர்த்தித் திருமகன் தன் படைக்குள் சேர்த்துக் கொண்ட கட்டமானது வைஷ்ணவ சம்பிரதாயத் தலைவர்களுக்குப் பாரதத்தில் கீதையைப் போலவே ஒரு தனி சாஸ்திரமாய் வழங்கி வருகிறது.

(தொடரும்)

மகிழ்ச்சி என்பது... போட்டி முடிவு

ரூ. 250 பரிசு பெறும் விளக்கம் :

●● "மகிழ்ச்சி தென்றலைப் போன்றது. ஜன்னலைத் திறந்தால் தென்றல் தவழ்ந்து வரும். இறுக மூடி வைத்தால் எட்டிப் பார்க்காது. மனக்கதவை திறந்தால் மகிழ்ச்சி தானாக வரும். திறப்பதும் மூடுவதும் நம் கையில்தான் இருக்கிறது."

- வெ. ஆசைத்தம்பி, தஞ்சாவூர்.

ரூ. 25/-ஆறுதல் பரிசு பெறும் இருவர் :

●● வாழ்க்கையே ஒரு புதையல் வேட்டை! மகிழ்ச்சிதான் நாம் தேடும் புதையல்! அது இருக்கும் இடமோ நம் மனக்குகை! இருக்குமிடத்தை விட்டு விட்டு, வெளியிலேயே நாம் அதைத் தேடுவதால், தேடித் தேடியே தேய்ந்து போகிறோம்.

- தி. க. பாலசுப்பிரமணியன், கீழ்நத்தம்.

●● மகிழ்ச்சி என்பது பூவுக்குள் மணமாய் தாய்க்குள் அன்பாய், பண்டத்தில் ருசியாய், பக்தியில் நெகிழ்வாய், உழைப்பில் பலனாய் பாட்டில் லயமாய், தென்றலில் சுகமாய் ஒளிந்திருப்பது. அதை உணரத்தான் முடியும்; விளக்க முடியாது.

- வத்ஸலா முரளிதர், சேலம்.




இந்த அணைக்கட்டுக்கும் ஒரு நிதி நிறுவனத்துக்கும் என்ன சம்பந்தம்?



AKSHARA SF/9499

சக்தி பைனான்ஸ் – வங்கிகளுக்கு
இணையான பாதுகாப்பு



தண்ணீர் விவசாயத்திற்கு அவசியத் தேவை. உரிய நேரத்தில் கிடைக்கும் தண்ணீர் பயிர் செழிக்க வகை செய்கிறது. அப்படிப்பட்ட தண்ணீரைத் தேக்கி வைத்துப் பாதுகாக்கிறது அணைக்கட்டு. அதிலிருந்து தேவைக்கேற்ப நிலங்களுக்குத் தண்ணீர் பெற முடிகிறது. அணை நிறைந்திருக்கும் போது விவசாயிக்கு நிம்மதி. எந்த நேரத்திலும் அணைக்கட்டு துணையிருக்கிறது என்கிற நம்பிக்கை.

சக்தி பைனான்ஸையும் மக்கள் அப்படித்தான் நம்புகிறார்கள். உங்களுடைய சேமிப்புக்கு சக்தி பைனான்ஸ் அதிக பாதுகாப்பு அளிக்கிறது. உங்கள் நலனில் அக்கறை கொண்டு உங்கள் சேமிப்புக்கு நீங்கள் அதிக வருமானம் பெற வகை செய்கிறது. சக்தி பைனான்ஸின் ஸ்திரத் தன்மையைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்.

சக்தி நிறுவனங்களின் எண்ணிக்கை 20. மொத்த ஆண்டு வர்த்தகம் ரூ. 700 கோடி. 1.5 லட்சம் டெபாசிட்தாரர்கள் மிகுந்த நம்பிக்கையோடு வைத்திருக்கும் டெபாசிட் தொகை ரூ. 150 கோடி. நாடு முழுவதும் 37 கிளைகள். 25 சேமிப்பு மையங்கள். பரவலாகப் பாதுகாப்புப் பெட்டகங்கள்.

சக்தி பைனான்ஸ் ஒவ்வொரு வாடிக்கையாளரின் தேவையையும் பூர்த்தி செய்வதில் தனிப்பட்ட கவனம் செலுத்துகிறது. அதற்காகவே அவர்களின் தேவைகளைப் புரிந்து கொண்டு பல புதுமையான திட்டங்களை முதன் முதலாக அறிமுகப் படுத்திய சிறப்பையும் பெற்றுள்ளது.



அது மட்டுமல்ல. இத்தகைய திட்டங்களைப் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து அறிமுகப்படுத்தி விரைவாகச் செயல் படுத்துவதிலும் முன்னோடியாகத் திகழ்கிறது.

உங்கள் சேமிப்புகளை சக்தி பைனான்ஸில் டெபாசிட் செய்யுங்கள். நிம்மதி பெறுங்கள்.

சக்தி

பைனான்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம் :

475 டாக்டர் நஞ்சப்பா சாலை கோயம்புத்தூர். 641018.

தொலைபேசி எண் : 31471/31472/31473/31474.



பரிசு ரூ.250!

பாலே படத்துக்குப் புதுக் கவிதை!

படத்தைப் பார்த்ததும் உங்கள் புதுக் கவிதை ஆர்வம் பீறிட்டு எழ வேண்டுமே? 10–15 வரிகளுக்குள் ஒரு புதுக் கவிதை எழுதுங்கள். அதிக பட்சம் இருபது!

கீழேயுள்ள இடத்தில் உங்கள் புதுக் கவிதையை எழுதி, கூப்பனைப் பூர்த்தி செய்து கத்திரித்து, 15.6.94க்கு முன்னதாக எங்களுக்குக் கிடைக்கும்படி அனுப்பி வையுங்கள். உறை மீது 'பாலே படத்துக்குப் புதுக் கவிதை' எனத் தவறாமல் குறிப்பிடவும்.

மிகச் சிறந்த கவிதை ரூ.250 பரிசு பெறும்.

ஆறுதல் பரிசுகளும் உண்டு.

ஆ.தி.மு.!

என் பெயர்: ....

விலாசம் : ....

....


ரஜினி, பிரபு, சத்யராஜ் போன்றவர்கள் வேறு இசையமைப்பாளர்கள் இசையில் நடிக்கத் தொடங்கிய போதிலும், கமல் மட்டும் இளையராஜாவின் இசை இல்லாத படத்தில் நடிக்க விரும்பவில்லை. இப்போது 'நம்மவர்' படத்தில் மகேஷ் என்ற புதிய இசையமைப்பாளருடன் கமல் இணைகிறார் என்ற செய்தி பலருக்கு வியப்பைத் தந்தது!

யார் இந்த மகேஷ்?

சிம்சன் கம்பெனியின் விளம்பரப் பிரிவில் மிக உயர்ந்த நிலையில் இருக்கும் எம்.பி.ஏ அதிகாரி. இவர் இசையமைத்த விளம்பரப் படங்களிலேயே பி.பி.எல். குறிப்பிடத் தக்கது. கே.பாலசந்தரின் மகன் கைலாஷ் தயாரித்த செய்திப் படங்களுக்கும், வேறு சில விளம்பரப் படங்களுக்கும் இசையமைத்தவர் என்ற வகையில் பாலசந்தர், வைரமுத்து ஆகியோரிடம் அறிமுகம் உள்ளவர். ரஹ்மானை விடத் திறமையானவர் என்று பேச்சு உலவுகிறது. ராசாவை விடவா என்பது தானே அசல் கேள்வி?...



• ரோஜா - மாயாஜாலம்



சினிமாவிலும் சேஷன்!

'மேனே பியார் கியா'- படத்தைத் தயாரித்த ராஜ்ஸ்ரீ நிறுவனத்தார் அடுத்ததாக 'ஹம் ஆப் கே ஹை கோன்?' என்ற படத்தைத் தயாரிக்கிறார்கள்... இளமை, இனிமை, என்று காதல் கும்மாளம் போடும் இந்தப் படத்தை தமிழ், தெலுங்கு, கன்னடம், அஸ்ஸாமி தவிர ஸ்பானிஷ், பிரெஞ்ச், ஜப்பானிய மொழிகளிலும் 'டப்' செய்யப் போகிறார்களாம். ஆப்டிகல் ஸ்டீரியோ சவுண்ட் சிஸ்டத்தில் தயாரிக்கப்படும் இந்தப் படத்தில் மொத்தம் பதினான்கு பாடல்கள். அதில் ஏழு பாடல்களைப் பாடியிருப்பவர் எஸ்.பி.பி. மாதுரி-சல்மான்கானின் காதல் கொஞ்சம் விலாசமானது போலிருக்கிறது. படம் மூன்று மணி இருபது நிமிடம் ஓடுகிறது!



• ஸ்பானிஷ், பிரெஞ்சு, ஜப்பானிய மொழிகளிலும்...

ஓர் இளம் நடிகர் எப்போது நட்சத்திரம் ஆகிறார்...? விஜயசாந்தியுடன் ஜோடி சேர்ந்து நடித்ததும்! தமிழில் எப்படியோ, தெலுங்குப் படவுலகின் நட்சத்திர இலக்கணம் இதுதான். உதாரணம். 'திருடா திருடா' ஆனந்த்.



• மகேஷ் - ராசாவை விடவா


தமிழில் தயாரிப்பாளரின் கையைக் கடித்துவிட்ட திருடன், தெலுங்கில் ஓரளவு வசூல் நடத்திவிட்டது. அதனால் ஆனந்துக்கு ஆந்திராவில் நல்ல வரவேற்பு. கூடவே ஆனந்தம் சேர்க்கும் செய்தியாக விஜயசாந்தியுடன் கதாநாயகனாக நடிக்கிறார். படம்:'ஸ்டிரீட் ஃபைட்டர்'. தெருச் சண்டைக்காரியாக நம்ம பாஸ்லேடி நடிக்க, அவருடைய காதலனாக ஆனந்த் நடிக்கிறார்.

'மாயாபஜார்', 'பாதாள பைரவி' போன்ற மாயாஜாலப் படங்களைத் தயாரித்த சந்தமாமா-விஜயா கம்பைன்சுக்கு ஓர் ஆசை. மீண்டும் ராஜா-ராணி கதை சொன்னால் என்ன?

வீர சாகசம் நிறைந்த கதை, பைரவத் தீவு, பறக்கும் வெள்ளைக் குதிரை, இரட்டைத் தலைக் கழுகு, பறக்கும் கட்டில்- இப்படி தந்திரக் காட்சிகளுடன் அம்மன்சிலை, அம்மா சென்டிமென்ட், மாந்திரிகம், மாயம் என்று எல்லாம் கலந்த பொழுது போக்கு அம்சத்துடன் "விஜய பிரதாபன்" திரைப் படத்தை உருவாக்கியிருக்கிறார் சிங்கிதம் சீனிவாசராவ். விஜய பிரதாபனாக பாலகிருஷ்ணா நடிக்க, கவர்ச்சிக்கு ரோஜா ஜோடி சேர்ந்திருக்கிறார்.

'கிழக்குச் சீமையிலே'- படத்துக்குக் கதை எழுதிய ரத்னகுமார், பாரதிராஜாவின் அடுத்த படத்துக்கும் கதை வசனம் எழுதுகிறார். ஒரு துணிச்சலான அரசாங்க அதிகாரி. அவருடைய நேர்மையான போக்கு பலருக்கும் இடைஞ்சலாக இருக்கவே, பலவிதங்களில் அலைக்கழிக்கப்படுகிறார். இந்தத் "தமிழா தமிழா" கதை உருவாகக் காரணமாக இருந்தவர், சூப்பர்மேன் சேஷன். "சேஷனின் 'டோன்ட் கேர்' டைப் கேரக்டர் என்னை மிகவும் பாதித்துவிட்டது. அவரைச் சந்தித்துப் பேசியதில், சில அபூர்வத் தகவல்களை அறிந்து கொள்ள முடிந்தது" என்கிறார் பாரதிராஜா.

- ஹர்ஷராஜ்



"என் கணவர் ஓட்டலுக்குப் போனா டிப்ஸ் தராம வர மாட்டார்!"

"என் கணவர் ஓட்டலுக்கு போனா மாவாட்டாம வர மாட்டார்!"

- கே.ஜி.எஃப். பழனிச்சாமி

அருள்மிகு விஜயகணபதி ஆலயம்
உள்ளகரம், சென்னை - 91.
அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகம்

நிகழும் பவ வருடம், ஆனி 5ம், ஞாயிற்றுக் கிழமை (19.6.94) காலை மணி 6.00 முதல் 8.00 மணிக்குள், நங்கைநல்லூருக்கு 1 கிலோ மீட்டர் கிழக்கே உள்ள, (கிருஷ்ணா நகர், உள்ளகரம்) ஆலயத்தில் அருள்மிகு விஜயகணபதி, விஜயசேனா, விஜயவல்லி சமேத விஜயகுமாரஸ்வாமி, சீதா, லக்ஷ்மண, ஹனுமத் சமேத விஜயராகஸ்வாமி, விஜயமணிகண்ட ஸ்வாமி, விஜய மாருதி, விஜய துர்கை, நவக்கிரஹங்கள் அஷ்ட பந்தன பிரதிஷ்டை செய்யப்பட மஹாகும்பாபிஷேகம் நடைபெற உள்ளது.

இவ்வாலயத்தில் ஷோடஸ (16) கணபதியின் திருஉருவங்களும் மஹாமண்டபத்தில் வேலைப்பாட்டில் கதை அமைக்கப்பட்டுள்ளது, வேறு எங்கும் காண முடியாத சிறப்பாகும். வடக்கு நோக்கி வீற்றிருக்கும் விஷ்ணுதுர்கை (விஜய துர்கை) புத்திர பாக்கியம், ராகு தோஷம் முதலியவற்றை நீக்கி பலருக்கு அருள் பாலித்து வருகிறாள்.

அருள்மிகு விஜயகணபதியைத் தரிசனம் செய்தால் ''வெற்றி மேல் வெற்றி'' கிடைக்கும் என காஞ்சி காமகோடி பெரியவாள் அருள்வாக்கு வழங்கியுள்ளார். கவியரசு கண்ணதாசன், தருமையாதீனம் மஹா லிங்க தம்பிரான், தவத்திரு சாதுராம் ஸ்வாமிகள்; கலைமகள் ஆசிரியர் கி.வா.ஜ. மயிலை குருஜி சுந்தர ராம ஸ்வாமிகள், நங்கைநல்லூர் ராஜகோபால ஸ்வாமிகள் முதலியோர் தரிசனம் செய்து அருள்பெற்ற தலம்.

கலியுகத்தில் பிரத்யக்ஷமாக உள்ள தெய்வங்களான பிள்ளையார், துர்கை, முருகன், ஐயப்பன், ஸ்ரீராமன், ஆஞ்சநேயர் ஆகியோர் ஒருங்கே அமைந்த ஆலயம். இந்த ஆலயத்தின் கும்பாபிஷேகத்திற்கு ஆஸ்திக பெருமக்கள் பொருளுதவி செய்து நடத்திக் கொடுக்குமாறும் அன்றைய தினம் வந்திருந்து கடவுளின் பேரருளுக்கு பாத்திரர்கள் ஆகும்படியும் வேண்டிக் கொள்கிறோம்.

ஸ்ரீ விஜயகணபதி ஆலய கும்பாபிஷேகக் குழு

காசோலை அனுப்ப வேண்டிய முகவரி :

திரு. வி. நாராயணன், தலைவர்,
5, சபாபதி தெரு, நர்மதா நகர், உள்ளகரம், சென்னை - 91

வட்டமேஜை

புரிய வேண்டியவர்களுக்குப் புரிந்தால் சரி!

◆ தலையங்கத்தில் ஜெயலலிதா படு தோல்வி அடைந்ததைப் பற்றி எழுதி எம்.ஜி.ஆர். என்ற மாமனிதர் எல்லோருக்கும் பொதுவானவர் என்று உணர்த்தியிருக்கின்றீர்கள். எம்.ஜி.ஆர். சிலை வைக்கும் விளையாட்டில்(?) ஜெயித்தது யாராய் இருந்தால் என்ன? எல்லோருமே கள்ள ஆட்டம் ஆடுகின்றார்கள். கபட ஆட்டம் ஆடுகின்றார்கள். எம்.ஜி.ஆர். பெயரைச் சொல்லி அவரவர் லாபம் சம்பாதிக்கத்தான் நினைக்கின்றார்களேயன்றி, இன்னும் அவரையே நினைத்துக் கொண்டு வறுமையில் வாடும் தொண்டர்களை யாருமே கண்டு கொள்வதில்லை. இப்பொழுதெல்லாம் தொண்டர்களைக் காட்டிலும் குண்டர்களுக்குத்தான் அதிக மதிப்பு! தலையங்கம் புரிய வேண்டியவர்களுக்குப் புரிந்தால் சரி.

திருச்சுழி, கந்தர் அழகேசன்.

◆ எழுத்தாளர்களின் கேள்விகளுக்குத் திருவாரூர் எம்.எல்.ஏ. தம்புசாமியின் பதில்கள் நறுக்குத் தெறித்தாற் போல் இருந்தன. பிரச்னைகள் உருவாகும் போது மக்கள் அக்கறையுடன் செயல்படுவதில்லை என்ற அவரது கூற்று உண்மைதானே!

பரமக்குடி, ஆறுமுகம்.

◆ எழுத்தாளர்களின் சூடான கேள்விகளுக்கு எம்.எல்.ஏ. தம்புசாமியின் பதில்கள், சாமர்த்தியம், சமாளிப்பு, சால்ஜாப்பு - கலந்தவைகளாக இருந்தன.

திருவெண்ணெய்நல்லூர், வைத்யா.

◆ 'வீட்டிலே சீனர்; வெளியே தமிழர்!' என்ற முதல் பக்கக் கட்டுரையின் மூலம், வழிவழியாகத் தமிழர்களாக இருந்தும், தங்கள் பிள்ளைகள், தமிழ் அல்லாது ஆங்கிலம் போன்ற பிற மொழிகள் கற்பதைப் பெருமையாக எண்ணுபவர் மத்தியில், "மற்ற பாடங்களை விட' தமிழில் ஈடுபாடு கொஞ்சம் கூடுதலாக இருந்தது. காரணம், இதன் வார்த்தை அமைப்புகள் மற்றும் 'ழ' போன்ற விநோதம். சின்ன வயதில் மனப்பாடப் பகுதியில் வந்த செய்யுள்களில் ஆழ்ந்த ஈடுபாடு" என்று கூறும் சீனத் தமிழர் 'லாரி', தமிழ்ச் சீனர் வெண் ஹுவா நூங் வித்தியாச மானவராகத் தெரிகிறார்.

சென்னை - 78, பூங்கோதை குப்புஸ்வாமி.

◆ திருவாரூர் பாபுவின் "உயிர்த் தேர்" திருவாரூர்த் தேர் போலவே கன கம்பீரம். மொத்தத்தில் உயிரோட்டமான தேரோட்டம்.

சிதம்பரம், என்.எம். கிருஷ்ணா.

◆ பின்விளைவுகளைப் பற்றிச் சிறிதும் சிந்திக்காமல் சிறியவர்கள் எடுக்கும் தவறான முடிவுகளைத் தடுத்து, அவர்களைத் திருத்துவதற்கு குடும்பத் தலைவருக்கு இருக்க வேண்டிய பொறுப்புணர்ச்சியை 'மாற்றம்' சிறுகதை மூலம் அருமையாக உணர்த்தி விட்டார் கிருஷ்ணா.

போடிநாயக்கனூர், ரா. நாச்சிமுத்து.

◆ கலைஞரின் நண்பர் தென்னவனைப் பற்றி எழுதியிருந்ததைக் கண்டேன். சிறு வயதில் மிக நன்றாகப் பழகியும், நண்பனாகவும் விளங்கியவர், தி.மு.க. பதவியில் இருந்த போதும், இல்லாத போதும் எந்தப் பதவியும் வேண்டாது, ஒரு நண்பனாகவே இருந்து வரும் அவருடைய நட்பு நட்புக்கே இலக்கணம்.

அம்பூர், ஏ.எஸ். சுந்தர்ராஜன்.

◆ கடவுளுக்குக் கடன்பட்டவர்களான திருவாரூர் சிறுவிவசாயிகளின் பிரச்னைகளை அலசியிருந்தவிதம், அருமையாயிருந்தது!

மதுரையம்பதி, எல். மீனாட்சி சுந்தரம்.

◆ "கடவுளுக்குக் கடன் பட்டவர்கள்!" கட்டுரையில் இலங்கை வேந்தனின் கலங்கிய மனதுக்குக் "கடன்பட்டார் நெஞ்சம் போல்" என்று கம்பர் உவமை சொன்னதாகச் சொல்லியிருக்கிறீர்கள். அது கம்பன் வார்த்தை அல்ல; யாரோ ஒரு புலவர் எழுதிய தனிப்பாடல்.

இராஜாக்கமங்கலம், கே. மணிகண்டன்.

◆ 'கவிஞரைக் கண்டு பிடியுங்கள் ரொம்ப சுலபம்'னு எளிதாகச் சொல்லிவிட்டீர்கள். உங்களுக்கென்ன? படத்திலுள்ளது போல் நாங்கள் சின்னடைப் பிய்ச்சிக்கிட்டதுதான் மிச்சம்!

பாலஸ்டியன் நகர், வி.பி. மகராசி சிவம்.

◆ கமலாலயம் குளமா அல்லது கடலா என்று வியக்கும் வண்ணம் வித்தியாசமான கோணத்தில் புகைப்படம் எடுக்கப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் - 7, வளர்மதி ஆசைத்தம்பி

◆ கல்கி (22.5.94) இதழில் வி.பி. பெரியசாமி (அ.இ.அ.தி.மு.க) என்று வேறு யாரோ ஒருவரின் புகைப்படத்தை போட்டுள்ளீரே? இதை ஏன் கவனிக்கத் தவறினீர்?

கோட்டப்பட்டி, கன்னிதங்கமுருகன்

(ஸாரி, இதோ அருகில் வெற்றி பெற்ற பெரியசாமி படம் - ஆர்.)





• மாறிய அனுதாபம்



• டங்கல், மண்டல்...



• என்ன சாதித்தார்..?



• அச்சமே காரணம்



• இரண்டல்ல... ஒன்றே



• ரேட் எப்படி?

● மஞ்சுதேவன், பம்பாய்.

? மறைந்த ஜாக்குலின் கென்னடி....?

! தேகப் பயிற்சிக்காகக் குதிரை ஏற்றம் பழகுகிற அளவுக்குச் செல்வக் குடும்பத்தில் பிறந்தவர். ஆயினும் தானே சம்பாதிக்க வேண்டும் என்ற தன்மானத்துடன் புகைப்பட நிபுணரானவர். இளம் பெண்ணாக முதல் அறிமுகத்திலேயே அமெரிக்காவின் கவனத்தைக் கவர்ந்து, ஏராள அட்டைப் படங்களை அலங்கரித்தவர். மிக அதிகமாகப் படம் பிடிக்கப்பட்ட புகைப்படக்காரர்! கென்னடியைக் காதலித்து மணந்து, படிப்படியாக அவர் உயர்வில் பங்கு கொண்டு, "ஜனாதிபதியாக அவர் தேர்ந்தெடுக்கப்பட ஜாக்கியின் கவர்ச்சியும் காரணம்" எனப் பேசப்பட்டவர். வெள்ளை மாளிகையில் நாட்டின் தலைமகள் பதவியைக் கண்ணியத்துடன் வகித்தவர். கென்னடியின் மரணத்தில் உலகின் அனுதாபத்தைப் பெற்று, சோகத்தினிடையிலும் கம்பீரம் காத்தவர். ஒனாஸிஸ்ஸைக் கரம் பிடிக்க, "எத்தகைய வீழ்ச்சி! இது ஆறுதலுக்கா? பணத்துக்கா?" என்ற சர்ச்சையைக் கிளப்பியவர். ஒனாஸிஸ் மரணத்துக்குப் பிறகு நற்பணிகள் பலவற்றில் ஈடுபட்டு கௌரவத்தைத் திரும்பப் பெற முயன்றவர். கடைசியில் புற்று நோய்க்கு ஆளாகி, மரணத்தை அணைத்த போது உலகின் அனுதாபம், ஒரு சிலரின் அனுதாபமாக மாறியிருந்தது தான் வேதனை. வாழ்க்கை வரலாறு எழுதப்பட அற்புதமான சப்ஜெக்ட். பல நூல்கள் நிச்சயம் எழுதப்படும்.

● எஸ். புகழேந்தி, தஞ்சை

? டங்கலைத் தடங்கல் ஏதுமின்றி நிறைவேற்றி விட்டாரே, பிரதமர்?

! அது மட்டுமா? மண்டல் விவகாரத்திலும் வி.பி. சிங்கின் வளர்ச்சிக்கு இடமின்றிச் செய்து ஓசைப்படாமல் நல்ல பெயர் தட்டிக் கொண்டு போய் விட்டாரே!

● மணிரத்னம், சென்னை–5

? பாரதிராஜாவை எல்லோரும் பாலசந்தருக்கு இணையாகப் புகழ்கிறார்களே, பாரதிராஜா அப்படி என்ன சாதித்து விட்டார்?

! ஏன் ஸார், உங்க பேர் உண்மையாகவே மணிரத்னம்தானா?

● கே. ராஜபாலு, சேலம்–1

? சமீபத்தில் உங்களை அசர வைத்த விஷயம்?

! டில்லியில் ஏர் கண்டிஷண்ட் பீடா கடையாம்! ஐந்து ரூபாயிலிருந்து நூறு ரூபாய் வரை விலையாம்!

சினிமா காதலுக்கும் நிஜ காதலுக்கும் என்ன வித்தியாசம்?

● எஸ்.குமார், காரைக்குடி.

? சினிமா காதலுக்கும் நிஜ காதலுக்கும் என்ன வித்தியாசம்?

! சினிமா காதலர் ஜோடியாக ஒரு திருமண ரிஸப்ஷனுக்கு வந்தால் அது நியூஸ்! நிஜ காதலர் வந்தால் நியூஸ் இல்லை!

● *இரா. சக்திவேல், பரமத்தி வேலூர்.*

? 'செய்தித் தாள்களை மக்கள் படிக்கக் கூடாது' என்று பீகார் முதல்வர் லல்லு பிரசாத் யாதவ் கூறியிருப்பது குறித்து.?

! எங்கே ஜனங்கள் புத்திசாலிகளாகி விடுவார்களோ; நடக்கும் லஞ்ச ஊழல்கள், சட்ட ஒழுங்கு சீர்குலைவுகளுக்குக் காரணம் என்னென்ன என்று புரிந்து கொண்டு விடுவார்களோ என்ற அச்சமாகத்தான் இருக்கும். ஆனால் ஒன்று, "நான் நாளிதழ்களையே படிப்பதில்லை" என்று அலட்சியமாகக் கூறிய பிரதமரை விட, இந்த முதல்வர் இந்த விஷயத்தில் தேவலாம்!

● *கே.சிவானந்தம், பூந்தோட்டம்.*

? பி.எச்.பாண்டியன், சேடப்பட்டி– வேற்றுமை என்ன?

! அவருக்கு வானமே எல்லை; இவருக்கு அம்மாவே எல்லை.

● *கோவிந்தன், பரக்காலா*

? சின்னஞ்சிறு நாடு இலங்கை, நம் மீனவர்களை சுட்டுத் தள்ளுகிறது; சிறை பிடிக்கிறது – இதை இவ்வளவு பெரிய நாடாகிய இந்தியா கை கட்டி பார்த்துக் கொண்டிருப்பதா?

! உடனே ரோஷம் கொண்டு கடற்படையை அனுப்பி, யுத்தம் தொடங்கி விடக் கூடாது! காரணங்களை ஆராய வேண்டும். அவற்றை நீக்கி, இது போன்ற அசம்பாவிதங்கள் மறுபடி நிகழாமல் காக்க வேண்டும். புத்திசாலி அரசு செயல்பட வேண்டிய விதம் இதுவே.

● *அரிசி ஸ்ரீராம், சாத்தூர்*

? 'அ.தி.மு.க.வும், ம.தி.மு.க.வும் இரண்டல்ல, ஒன்றுதான்' என்று வை.கோ கூறியிருப்பது பற்றி...?

! உண்மையைச் சொன்னா ஒத்துக்கணும்.

● *மேலை பழ.நாகப்பன், சென்னை–41.*

? கே. பாலசந்தரின் 'ரேட்' எப்படி?

! 'வருஷா வருஷம் எல்லாருக்கும் வயது ஏறும், பாலசந்தருக்கு மட்டும் குறைந்து கொண்டே போகிறது' என்கிறது ஒரு விமர்சனம். ஏன், அவர் படங்களைத் தொடர்ந்து பார்த்துக் கிட்டு வருகிற ரசிகர்களுக்கு மட்டும் என்னவாம்? அதே கதைதான்! வயதானவர்களுக்குக் கூட புது உற்சாகம், வாழ்க்கையில் ஒரு பிடிப்பு எல்லாம் ஏற்படுகிறதே, அதுதான் கே.பி.யின் சக்ஸஸ்!

* ரூ 25 பரிசு பெறுபவர்:
என்.எம்.கிருஷ்ணா,
37, சிவஜோதி நகர்,
சிதம்பரம்-608 001.

● *எஸ்.முரளி, குறிஞ்சிப்பாடி*

? இந்த ஆண்டின் சிறந்த மனிதர் விருது சேஷனுக்கு வழங்கப்பட்டிருப்பது குறித்து...?

! இடைத் தேர்தல் காலையில் மயிலையில் 'பவர்கட்' ஆகிவிட, வாக்குச் சாவடியில் பெட்ரமாக்ஸ் விளக்கு வைத்தபடியே ஒரு அதிகாரி அலுப்புடன் கேட்கிறார்: "என்னய்யா இது, எலக்ஷன் அன்னிக்குக் கூடவா பவர் இல்லை?" தாமதமின்றி வந்த ஒரு வாக்காளர் சொல்கிறார்: "பவர் எல்லாம்தான் சேஷன்கிட்டே இருக்கே; அனுப்பி வைக்கச் சொல்லுங்க!" சிலேடைச் சிரிப்பு கொல்லென்று எழுந்தது ஒரு புறமிருக்க, மக்களிடையே 'ஏமாறக் கூடாது' என்ற விழிப்புணர்ச்சியையும் கட்சித் தலைவர்



• வேற்றுமை... • ...என்ன?..

களிடயே 'ஏமாற்ற முடியாது' என்ற அச்ச உணர்வையும் ஏற்படுத்திய அளவில் சேஷன் இந்த ஆண்டின் சிறந்த மனிதரே. விசிலடித்து வரவேற்கப்பட வேண்டிய விருது!

● *என். எம்.கிருஷ்ணா, சிதம்பரம்.* ✱

? தமிழகத்தில் நடக்கும் குற்றங்களை மகாராஷ்டிரத்தோடு ஒப்பிடும் முதல்வர் அதன் தொழில் வளத்தோடு தமிழகத்தை ஒப்பிடுவதில்லையே,ஏன்?

! கேள்விக்குப் பரிசை நான் தந்து விடுகிறேன்; பதிலை முதல்வர்தான் சொல்ல வேண்டும்!

● *ஆர். பாபு, காரைக்குடி.*


? பணம், புகழ், இப்போது எதற்கு மரியாதை அதிகமாகஇருக்கிறது?

! அதிகாரம் இருந்தால் மற்ற இரண்டும் காலடியில் விழுந்து கிடக்காதோ!

பாபர் மசூதி ஆய்வுக்குப் பரிசு ரூ.12 கோடி!

மேற்கு வங்கத்திலுள்ள ஐ.ஏ.எஸ் அதிகாரியான ஷேர்சிங், ஓர் ஆராய்ச்சியாளருங்கூட. அண்மையில் இவர் வெளியிட்டுள்ள ஓர் ஆராய்ச்சி, 'பாபர் மசூதி' என்று அழைக்கப்படும் அது, பாபர் பிறப்பதற்குப் பதினாறு ஆண்டுகள் முன்பே கட்டப்பட்டுவிட்டது என்பது! இவரது சுதந்திர மனப்பான்மை காரணமாக, மேலதிகாரிகளின் கோபத்தைச் சம்பாதித்துக் கொண்டார். விளைவு : தாற்காலிக வேலை நீக்கம். இவை ஒருபுறமிருக்க, சவூதி அரேபியாவிலுள்ள 'மன்னர் ஃபைசல் பரிசு'க் கமிட்டி, இவரது ஆராய்ச்சியைப் பரிசு பெறத் தேர்ந்தெடுத்துள்ளது. பரிசின் மதிப்பு சுமார் பன்னிரண்டு கோடி ரூபாய்! அரசின் அனுமதியில்லாமல் பரிசை இவரால் வாங்க முடியாது என்பதால், கைக்கெட்டியது வாய்க்கெட்டுமா என்பது இன்னமும் சந்தேகத்துக்குரியதாகவே இருக்கிறது!

கல்கத்தாவுக்கருகிலுள்ள தம்தம் பகுதியில் உள்ளது ஒரு மின்கருவித் தொழிற்சாலை. அதிலிருந்து எழும் இரைச்சலும் புகையும் சுற்றுச் சூழலைக் கெடுப்பதாக அந்தப் பகுதி மக்கள் சுற்றுச் சூழல் பாதுகாப்பு வாரியத்துக்குப் புகார் செய்ய, விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது வாரியம். இதிலென்ன ஆச்சரியமிருக்கிறது என்கிறீர்களா? தொழிற்சாலையின் சேர்மனும் முக்கிய பங்குதாரருமாக இருப்பவர் ஹேம் நாத். அவருடைய ஒரே மகன் தான் மத்திய சுற்றுச் சூழல் பாதுகாப்பு அமைச்சர் கமல் நாத்!



• பாபர் மசூதி : பாபர் பிறப்பதற்கு முன்பே கட்டப்பட்டது •



ஜோதி பாசு : நட்பா?

மே. வங்க அரசுக்கும் சேஷனுக்கும் இடையிலான உறவு ஆரம்பத்திலிருந்தே லடாய்தான். ஒரு சமயம் சேஷனின் தடாலடி நடவடிக்கைகளால் எரிச்சலடைந்த ஜோதிபாசு, சேஷனை "பைத்தியம்" என்றே வர்ணித்தார். இதன் காரணமாக, அண்மையில் நடந்த ஜோதிபாசு - சேஷன் சந்திப்பில் கனல் பறக்கும் என்று பத்திரிகையாளர்கள் மட்டுமல்ல, பொதுமக்களும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். சந்திப்பு முடிந்தபின், பத்திரிகையாளர்களிடம் சேஷன் பேசிய போது, "பதினேழு ஆண்டுகளாகத் தொடர்ந்து முதலமைச்சராகப் பணியாற்றிச் சாதனை படைத்துக் கொண்டு இருப்பவர் ஜோதிபாசு. அவரைப் போன்ற தலைவர்கள் உலகிலேயே மிகவும் அரிது!" என்று ஒரு போடு போட்டார். ஏமாற்றமடைந்த பத்திரிகையாளர்களில் ஒருவர், "ஜோதிபாசு உங்களைப் 'பைத்தியம்' என்று ஒருமுறை குறிப்பிட்டிருக்கிறாரே, எதற்காக அப்படிக் குறிப்பிட்டார் என்று நீங்கள் அவரிடம் கேட்டீர்களா?" என்று ஒரு கேள்வியைப் போட்டு சேஷன் வாயைக் கிளறப் பார்த்தார். அதற்கும் சேஷன், "நான் ஏன் இதை அவரிடம் கேட்க வேண்டும். நான் பைத்தியம் என்பது எனக்கே தெரியுமே!" என்று சொன்னாரே பார்க்கலாம்!



• சேஷன் - லட்சணி?

கல்கத்தாவிலிருந்து : சு. கிருஷ்ணமூர்த்தி

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-,
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka

சம்மர் ஷவர் !!

பிரெக் ஃபாஸ்ட் டயமோ!
லஞ்ச் டயமோ!



இல்லமானாலும் சரி,
பள்ளியானாலும் சரி,

லிவ்பெட்

வாட்டர் பாட்டில்

காரணம், **லிவ்பெட்**
வாட்டர் பாட்டில்கள்

* உடையாதவை
* சுகாதாரமானவை
* உணவுத்தரம் கொண்டவை
* பல அழகிய வடிவங்களில், கொள்ளை கொள்ளும் நிறங்களில் வருகின்றன.



இப்பொழுது, நீங்கள் வாங்கும் ஒவ்வொரு **லிவ்பெட்** பாட்டிலுடனும் ஒரு மீரா ஹெர்பல் சீயக்காய் பவுடர் சாஷே இலவசமாக கிடைக்கிறது.

லிவ்பெட் பாட்டில் உங்கள் பெட் பாட்டில்
லிவ்பெட் இருக்கும்போது வேறென்ன வேண்டும்.

லிவியா பாலிமெர் பாட்டில்ஸ் பி.லிட்.,
மண்டையூர் சாலை, மண்டையூர், புதுக்கோட்டை மாவட்டம்,
தமிழ்நாடு - 622515 ☎ 04339 - 418/472.

14.8.1994 வரை இந்த சலுகை தமிழ்நாடு, பாண்டிச்சேரி மற்றும் கேரளாவில் கிடைக்கும். முந்துங்கள், இந்த அரிய வாய்ப்பை நழுவ விடாதீர்கள்.

லிவ்பெட் பாட்டில்கள் இச்சலுகை இல்லாமலும் கிடைக்கின்றன.